விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 23 வியாழக்கிழமை (05.04.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 108

ராம்கோ RAMCO MADRAS CEMENTS LTD RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# சர்வதேச சட்டங்களிலிருந்து யாரும் தப்பிக்க முடியாது

## மங்கள சமரவீர சுட்டிக்காட்டு



(கொழும்பு)

சர்வதேச சட்டங்களிலிருந்து தப்பிச் செல்ல முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கையை நிராகரிக்கும் தரப்பினர் ஏகாதிபத்தியத்தை விரும்புவோராக கருதப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார். (23ஆம் பக்கம் பார்க்க)

## பாரத கொலை விசாரணை அதிகாரி திடீர் மாயம்!

(கொழும்பு)

பாரத லக்ஷ்மன் கொலை தொடர்பான நீதவான் விசாரணை நேற்று நீதிமன்றில் எடுக்கப்பட்டபோது குற்றச்செயல் புலனாய்வுப்பிரிவு இன்ஸ்பெக்டர் மெரில் ரஞ்சன் நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்காததை அவதானித்த கொழும்பு மேலதிக நீதவான் பிரசன்ன அல்விஸ், அவர் ஏப்ரல் 17 அன்று நீதிமன்றில் ஆஜராக வேண்டுமென கட்டளை பிறப்பித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா இருக்குமிடம் மற்றும் அவரை கைது செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கை என்பவை தொடர்பில் நீதிமன்றத்துக்கு தகவல் தரவேண்டுமென புலனாய்வு பிரிவு பொலிஸாருக்கு நீதிமன்றம் (24ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை அமுல்படுத்துவதில் சிக்கல் இல்லை

### அமைச்சர் சுசில் தெரிவிப்பு

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை முன்மொழிவுகளை அமுல்படுத்துவதில் எவ்வித சிக்கல்களும் கிடையாது என பெற்றோலிய வள அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழு அறிக்கையை அமுல்படுத்த வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும். எனினும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் பிரேரணை தொடர்பில் சந்தேகம் நிலவுகின்றது. நல்லிணக்கஆணைக்குழுஅறிக்கையைமுழுமையாக அமுல்படுத்த (24ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை நிலைமை தொடர்பில் சுவீடன் அரசாங்கம் அக்கறை!

(ஸ்ரோக்ஹோம்)

இலங்கை நிலைமைகள் தொடர்பில் சுவீடன் வெளிவிவகார அமைச்சர் கார்ல் பில்ட் இலங்கைத் தூதரிடம் கேட்டறிந்து கொண்டார்.

சுவீடனுக்கான இலங்கைத் தூதுவர் அழகப்பெருமவை ஸ்ரோக்ஹோம்மில் நேற்று சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் சுவீடன் வெளிவிவகார அமைச்சர் கார்ல் பீல்ட் மிகுந்த கரிசனை செலுத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வடக்குக் கிழக்கு பகுதிகளில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களின் தற்போதைய நிலைமைகள் குறித்தும் அவர் ஆவலுடன் (24ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்புக்கு வழிகாட்டும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள்

### கிழக்கு முதலமைச்சர் பெருமிதம்


(மட்டக்களப்பு)

பல தசாப்தகால அரசியல் வரலாற்றினைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் போன்ற கட்சிகளுக்கு முன்னுதாரணமாகவும் வழிகாட்டியாகவும் எமது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி இருக்கின்றது என்பதனை பார்க்கும்போது சந்தோசப்படுகின்றேன் என கிழக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு (24ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பயிற்சி முகாம் எப்பகுதியிலும் இல்லை!

### சிதம்பரம் கூறுகிறார்



(புதுடில்லி)

தமிழகம் உள்ளிட்ட இந்தியாவின் எப்பகுதியிலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் பயிற்சி முகாம்கள் இல்லையென இந்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் 3 இடங்களில் அமைந்துள்ள பயிற்சி முகாம்களில் பயிற்சி (24ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் பொதுமகன் நேற்றுக் கடத்தப்பட்டார்

(கொழும்பு)


கொழும்பு கிராண்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவகம்புர பகுதியில் பொதுமகன் ஒருவர் வெள்ளை வானில் வந்த அடையாளந் தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை 8 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 45 வயதான பாலகிருஸ்ணன் ஆனந்தன் என்பவரே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளார்.

தனது குழந்தையை பாடசாலையில் இறக்கி விட்டு மோட்டார் சைக்கிளில் வீடு நோக்கித் திரும்பிக் கொண்டிருக்கையிலேயே இவர் (24ஆம் பக்கம் பார்க்க)

## ‘ஜனாதிபதியால் மட்டுமே எனக்கு பதிலளிக்க முடியும்’

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



எனக்குப் பதிலளிப்பதற்கு இங்கிருக்கும்

ஒவ்வொருவரும் ஜனாதிபதியுமல்ல, பிரதமருமல்ல என்று எதிர்க் கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சபையில் நேற்று முன்தினம் வாய்மூல வினாக்கள் நேரத்தின் போது எழுந்த சர்ச்சையின் போதே எதிர்க் கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின் போது ஐ.தே.க. எம்.பியான ரவி கருணாநாயக்க 2009 ஆண்டுக்கு பின்பு ஏ9 வீதியின் புனர்நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்ட திகதி கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்ட திகதி உள்ளிட்ட கேள்விகளை துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரிடம் கேட்டிருந்தார்.

கேள்வி (24ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 'புலி வருது' என்ற தகவல் அரசினால் புனையப்பட்டது

## ஐ.தே.க. எம்.பி. தெரிவிப்பு

தமிழகத்திலிருந்து பயிற்சி பெற்ற விடுதலைப்புலிகள் இலங்கைக்குள் ஊடுருவியிருப்பதாகக் கூறி சிங்கள மக்களை அச்சமடையச் செய்து தமது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்ள அரசாங்கம் முனைவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் மற்றும் படைத்துறை அமைச்சின் வங்குரோத்து நிலைமையையே எடுத்துக் காட்டுவதாக அவர் தெரிவித்துள் ளார்.

தமிழகத்தில் உள்ள முகாம்களில் சிறப்புப் பயிற்சிபெற்ற 150 தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கைக்குள் ஊடுருவி இருப்பதாக கொழும்பில் இருந்து வெளியாகும் ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

இந்நிலையில், இச்செய்தி குறித்தும், அச்செய்தியை இந்தியா மறுத்திருப்பது குறித்தும் ஊடகம் ஒன்று கருத்துக் கேட்டபோதே, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் யோகராஜன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தேசங்களின் இராஜதந்திர உறவுகளை பாதிக்கும் வகையில் ஊடகங்கள் உண்மைகளை நடுநிலை தவறாமல் வெளியிட வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த வாரம் தேசிய ஊடக மத்திய நிலையத்தை திறந்து வைத்து உரையாற்றிய போது தெரிவித்திருந்தார்.

இலங்கையின் சமூகங்களுக்கும் சமயங்களுக்கும் எதிராக இனவாத திரிபுச் செய்திகளை வெளியிடுவதை ஆரம்பம் முதலே பிரசித்திபெற்ற சில நாளிதழ்கள் கடைப்பிடித்து வருகின்றன.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது நிகழ்ந்தவற்றை சர்வதேசம் ஆதாரங்களுடன் வெளியிடுகின்றது. இப்போர் இடம்பெற்றபோது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டினை மீறமுடியாமல் தமிழ் மக்களுக்கு விரோதமான செய்திகளே இலங்கை ஊடகங்களில் வெளியிடப்பட்டன.

இந் நிலையில் தமிழ் ஊடகங்கள் தர்ம சங்கடமான நிலைக்கு உள்ளாகி யிருந்தன பக்கச் சார்புடையது என்று தெரிந்தும் அரசாங்கத்தின் நிர்ப்பந்தத்துக்கு கட்டுப்பட்டு நியாயத்தை நெஞ்சில் புதைத்துக் கொண்டு வேதனைகளுடன் செய்திகள் வெளியிட்ட நிலைமைகளை மறக்க முடியாது.

தற்போது இந்தியாவை எதிர்க்க வேண்டும், அந்நாட்டுக்கு பாடம் படிப்பிக்க வேண்டும் என சவால் விடும் கத்துக்குட்டிகளின் கூச்சல்களுக்கு அனுசரணையாக அரசாங்கம் செயல்படுவதையே அண்மைக்கால செய்திகளாக வெளிப்படுகின்றன.

இலங்கையின் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகளை தவிர்த்துக் கொள்ள இந்த அரசு மேற்கொண்ட முயற்சிகளை இந்தியாதான் தடுத்து நிறுத்தியது என்ற எதிர்புணர்வை சிங்கள மக்களிடம் திட்டமிட்டு பரப்புவதில் அரசாங்கமும் அதன் அமைச்சர்களும் அரச சார்பு ஊடகங்களும் முனைந்திருக்கின்றன. அதன் பக்கவிளைவுகளில் ஒன்றே விடுதலைப்புலிகள் இலங்கைக்குள் ஊடுருவி இருப்பதாக வெளிவந்த செய்தியாகும்.

புலி வருது கதை, இந்திய எதிர்ப்பு, அமெரிக்காவுக்கான சவால்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த தயங்குவதும் இலங்கைக்கு மேலும் வீழ்ச்சியையும் தாக்கத்தையுமே ஏற்படுத்தும் என்பதை பேரினவாத சக்திகளும் ஊடகங்களும் புரிந்துகொண்டு செயலாற்றுவது காலத்தின் தேவை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் யோகராஜன் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)


செல்லா சினிமா-யாழ்ப்பாணம்



30.03.2012 முதல்
தனுஷ், ஸ்ருதிஹாசன்
பிரபு மற்றும் பலர் நடித்த
3
DTS
10.30, 02.30, 06.30, 09.30
(C-6210)



பாராட்டி வாழ்த்துகிறோம்



எமது பாடசாலையின்
வரலாற்றில் முதன்முறையாக
8A, B பெறுபேற்றைப் பெற்று
2011 இல் கோப்பாய் கோட்டத்திற்கு
உட்பட்ட பாடசாலைகளில்
முதன்மைப் பெறுபேற்றை
பெற்றமைக்காகவும்
பாராட்டி வாழ்த்துகிறோம்.
கல்வித்துறையில் சாதனைகள்
தொடர்ந்திடவும் வாழ்த்துகிறோம்.
செ. லஜீனா
பாடசாலை சமூகம்
யா/ உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்
(C-6259)



ALLIANCE FRANCAISE DE JAFFNA
The Only Official French Language Centre in Jaffna
Learn French the French Way
யாழ்ப்பாணத்தில் உள்ள Alliance Francaise de Jaffna இன் ஊடாக French மொழி வகுப்புகள் நடாத்தப்படுகின்றன.
ஆர்வமுள்ள எவரும் கற்றுக் கொள்ளலாம்
வகுப்புகள்: சனி, ஞாயிறுகளில்...
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
61, Kachcheri-Nallur Road, Jaffna. Phone: 021 2228093
E-mail: alliancejaffna@yahoo. com
(ரக்கா வீதியும் கச்சேரி -நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி வீடு)
மேலதிக் விபரங்களை நேரில் / தொலைபேசியினூடாக பெறலாம்.
(8101)



# பிரதேச செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பம்

யாழ் மாவட்டத்திலிருந்து பிரதேச செய்தியாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். தகைமையும் விரும்பமும் உடையவர்கள் முழுப்பெயர், நிரந்தர முகவரி, பால், பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கிராமசேவகர் பிரிவு, பிரதேச செயலர் பிரிவு, தொலைபேசி இலக்கம், கல்வித்தகைமை, தற்போது செய்யும் தொழில், செய்தியாளர் பதவிக்கு விண்ணப்பிக்கும் பிரதேசம் ஆகியவை உள்ளடங்கலாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை

பிரதம ஆசிரியர்
வலம்புரி
இல. 3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழப்பாணம்.

எனும் முகவரிக்கு உடனடியாக சாதாரண தபாலில் அனுப்பி வைக்கவும்.


# தப்பியோடிய கைதி 3 நாளின் பின் கைது

(யாழ்ப்பாணம்)

வயிற்றுவலி எனக் கூறிக் கொண்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் தப்பியோடி 3 நாட்களின் பின்னர் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கதிரவேலு இராசரத்தினம் என்ற நபர் மல்லாகம் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் சைக்கிள் திருடிய குற்றத்திற்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் தனக்கு வயிற்று வலி எனக் கூறி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த முதலாம் திகதி இரவு 10 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையில் காவற் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரை ஏமாற்றி விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

தப்பிச் சென்ற குறித்த கைதியை மூன்று நாள் தேடுதலின் பின்னர் யாழ்.புறநகர் பகுதியில் வைத்து கைது செய்த யாழ். பொலிஸார் நேற்று யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கினை விசாரணை செய்த யாழ்.நீதவான் மா.கணேசராசா குறித்த நபரினை விளக்கமறியலில் வைக்குமாறும் இன்று வியாழக்கிழமை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்துமாறும் உத்தரவிட்டார். (எ-4)

## எச்சரிக்கையாக இருக்குமாறு ஈபிடிபியினருக்கு அறிவுறுத்தல்

திருகோணமலை பெரியகுளம் பகுதியில் ஈ.பி.டி.பி அங்கத்தவர் ஒருவர் விடுதலைப்புலிகள் என்று கூறுபவர்களால் கொல்லப்பட்டதையடுத்து ஈ.பி.டி.பி அங்கத்தவர்களை எச்சரிக்கையாக இருக்குமாறு பொலிஸாரும் பாதுகாப்பு படையினரும் அறிவுறுத்தியுள்ளதாக அக் கட்சி அங்கத்தவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பிரச்சினைகளை ஏற்படுத்த விடுதலைப்புலிகளின் அங்கத்தவர்கள் குழுவொன்று முயற்சிப்பதாக புலனாய்வுத் தகவல்கள் கிடைக்கப் பெற்றதையடுத்து பாதுகாப்பு படையினர் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளனர்.

ஈ.பி.டி.பி. அங்கத்தவரான வேலாயுதம் ரகுநாதன் மார்ச் 18 ஆம் திகதி விடுதலைப்புலி அங்கத்தவர்கள் என்று கூறப்படுபவர்களால் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

கட்டிட வேலை செய்து கொண்டிருந்தவரை மின்சாரம் தாக்கியதில் எரிகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் நேற்று மதியம் ஒரு மணியளவில் திருநெல்வேலியில் இடம்பெற்றுள்ளது.

உடுவில் தெற்கினைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையாரான கதிர்காமநாதன் கஜிந்திரன் (வயது-29) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

தற்போது கட்டப்பட்டு கொண்டிருக்கும் திருநெல்வேலி சந்தைக் கட்டிடத்தின் இரண்டாம் மாடியில் குறித்த குடும்பஸ்தர் கட்டிட வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளையில் சுவரினை அழுத்துவதற்காக பயன்படுத்தப்படும் அலுமினிய மட்டக்காம்பை குறித்த மாடியினூடாக எடுத்துச்சென்றபோது பிரதான மின்கம்பத்தில் முட்டியதால் சடுதியாக மின்சாரம் தாக்கி தூக்கி எறியப்பட்டு எரிகாயங்களுடன் அவர் யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு தற்போது ஆபத்தான நிலையினை தாண்டி சிகிச்சை பெற்று வருகின்றார்.

இவ்விபத்து தொடர்பாக சந்தைப்பகுதியில் சிறிது பதற்றம் காணப்பட்டதோடு சந்தைக் திட்டமிடல், மின்சார சபையின் அசமந்தம் ஆகியவை தொடர்பாக மக்கள் விசனம் கொண்டிருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. (எ-4)


MOORTHY GUEST HOUSE
மூர்த்தி கெஸ்ற் கவுஸ்
62/20 Stanly Road Jaffna (2nd Floor)
A/C, Non A/C Rooms, Hall
T.P:- 021 221 9399
(C-6224)





EASY ENGLISH
ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY
யாழ். நகரில் வகுப்பிட அனுசரணை:
புதிய உயர் கல்லூரி
விபரங்களுக்கு :0773212711
(7379)



# கண்ணீர் அஞ்சலி

அமரர் பேரம்பலம் மணிவண்ணன் (மணி)



வாடியடி பூநகரியைச் சொந்த இடமாகவும்
மதுசன் நகைமாட உரிமையாளருமான
அமரர் பேரம்பலம் மணிவண்ணன் (மணி)
04.04.2012 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னாரின் இறுதி கிரியைகள் இன்று வியாழக்கிழமை (05.04.2012) மு.ப. 11 மணியளவில்
அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று அன்னாரின்
பூதவுடல் தகனக் கிரியைக்காக மட்டுவில்
நாடு மேற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்
செல்லப்படும்.

அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தகவல்: பூஞ்சோலை நகை மாடம்
நண்பர்கள்
(8103)

# இன்று ஒரு தகவல்

## கலவைக் கருவி

எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் வந்தார். வந்ததும் வராததுமாக அவரது மனைவியைப் பற்றி குறைகூற ஆரம்பித்தார். அதையும் நேரடியாக குறிப்பிட்டு சொல்வதற்கு பயம் போல இருக்கிறது. பொதுவாக, மெதுவாக இப்படி ஆரம்பித்தார்.

"இந்தக் காலத்திலே பெண்கள் எல்லோரும் வீட்டு வேலைகளை சரியாகச் செய்வதில்லையே...!'' என்றார்.

சற்று விபரமாகத்தானே சொல்லுங்களேன் என்றேன்.

"பின்னே என்ன சேர்... இப்போது எல்லா வேலைக்கும் மெஷின் வந்துவிட்டது. அம்மிக்குப் பதிலாக மெஷின்... ஆட்டுக்கல்லுக்குப் பதிலாக மெஷின்... இப்படியாக வந்துவிட்டதால் இவர்களுக்கெல்லாம் வேலை சுலபமாக மாறிவிட்டது'' என்று கூறினார்.

அதற்காக சந்தோஷப்படுங்கள் சேர்... ஆத்திரமடையாதீர்கள்! என்று சொன்னார்.

''உங்களுக்கு என்ன சேர்... நீங்கள் சொல்லிவிட்டு போய் விடுவீர்கள். அவஸ்தை பாடுவது யார்?'' என்றார்.

இப்படியாக நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் போது அவருடைய மனைவி தூரத்திலே வருவது தெரிந்துவிட்டது. அதை அவர் அவதானித்துவிட்டார். உடனே மெதுவாக எழுந்தார்.

''சேர்... என் மனைவி வருகிற மாதிரி தெரிகிறது... நான் இப்படியே இந்தப் பக்கமாக நழுவிக்கொள்கிறேன்'' என்று கூறி புறப்பட்டார்.

வந்தால் என்ன சேர்... சும்மா இருங்கள் என்றார்.

''உங்களுக்கு ஒன்றும் புரியாது. நான் பின்னர் வந்து உங்களைப் பார்க்கிறேன்'' என்று சொல்லிவிட்டு கொல்லைப் பக்கமாக ஓடிப் போய்விட்டார்.

சிறிது நேரத்திலே அந்த அம்மா அங்கே வந்து, "என்னுடைய வீட்டுக்காரர் இங்கே வந்தாரா?''என்று விசாரித்தார்.

''வந்துவிட்டு போய் விட்டார். என்னம்மா விடயம்?'' என்று கேட்டேன். வீட்டிலே ''மிக்சி'' பழுதடைந்து விட்டது. கடையிலே கொடுத்து திருத்த வேண்டும். ஒரு மாதகாலமாக சொல்லிக் கொண்டிருக்கிறேன். அவர் அதை காதில் எடுப்பதாகத் தெரியவில்லை.

இந்தக் காலத்துப் பெண்கள் வீட்டு வேலைகளை சரியாக கவனிப்பதில்லை என்று அவர் குறை கூறிக் கொண்டிருந்தாரே...

இந்த அக்கறையுள்ள குடும்பப் பெண் மாதிரி கதைக்கிறார். அவர்தான் பொறுப்பில்லால் சுற்றிக் கொண்டிருக்கிறார் என்று புரிந்து கொண்டார்.

"சரியம்மா... அவர் மறுபடியும் இந்தப் பக்கம் வந்தால் சொல்லி அனுப்பி வைக்கிறேன் கலைப்படாதீர்கள். சற்று மிக்சியைப் பற்றி எடுத்துக் கூறுங்கள் என்று கேட்டேன்.

மிக்சி உபயோகத்தில் இல்லாத போது மின்னிணைப்பிலே அது இருக்கக்கூடாது. "பிளக்'' ஐ எடுத்துவிட வேண்டும்.

அரைக்கும் பிளேட்டை கையால் தேய்த்து சுத்தப்படுத்தக் கூடாது. அது மிகவும் கூரான பொருள். கையை வெட்டி விடும் திறன் கொண்டது. தண்ணீர் குழாயை திறந்துவிட்டு சுத்தம் செய்ய வேண்டும்.

சிறிய பிள்ளைகளை எப்போதும் மிக்சிக் கருவியில் போக விடக் கூடாது. அவர்கள் எதையாவது தட்டி விடுவார்கள்.

இன்னொரு விடயம். மிக்சி வேலை செய்து கொண்டிருக்கும்போது தொலைக்காட்சியை போடக்கூடாது. மிக்சியை போதுமான உயரத்திலே வைக்க வேண்டும்.

சூரிய ஒளி நேரடியாக மிக்சியிலே படவிட வேண்டாம். மிக்சியின் மேல் மூடி இல்லாமல் அதனை இயக்க வேண்டாம். அளவுக்கு மீறி அரைக்கும் பொருட்களை அதனுள் இட்டு அரைப்பது தவறாகும்.

இது மாதிரியான சில விடயங்களிலே சற்று கவனமாக இருந்தால் மிக்சி அடிக்கடி தொந்தரவு கொடுக்காது என்று எனது தகவலை கூறி முடித்தேன்.

"என்னம்மா... நான் சொன்னதையெல்லாம் காதிலே வாங்கிக் கொண்ீர்களா?'' என்று கேட்டேன்.

"நான் வாங்கிக் கொண்டேன். இருந்தாலும் வீட்டிலே தினமும் அதனை பாவிக்கும் பெண்கள் உள்ளனர். அவர்களை வரச் சொல்கிறேன்... அவர்களுக்கு கூறுவதுதான் மிகவும் நல்லது.

"ஓ... உங்கள் வீட்டிலே சமையல் செய்வது வேலைக்காரியா... வரச் சொல்லுங்கள்.

''நான் வரச் சொல்லுகிறேன் என்பவர் வேலைக்காரியல்ல எனது கணவர்'' என்றார்.

இப்போது தான் அவரது கொல்லைப்புற ஓட்டம் ஏன் என்று விளங்கியது என தனது மனதினுள் நினைத்துக் கொண்டார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நாச்சிக்குடா கடலில் குருநகர் ரோலர் படகு தடுத்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

குருநகர் றோலர் படகு ஒன்றினை நாச்சிக்குடா பகுதி முஸ்லிம் மீனவர்கள் மடக்கிப் பிடித்துள்ளதாக குருநகர்ப் பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

தமது வளங்களினை அழிப்பதற்கு யாரையும் நாம் அனுமதிக்க முடியாது என்பதனாலேயே றோலர்ப் படகோடு வந்தவர்களை பிடித்துள்ளதாக முல்லைத்தீவு நாச்சிக்குடா மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒரு வாரத்திற்கு முன்னர் குருநகர் கடற்பரப்பில் றோலர்படகோடு 3 மீனவர்கள் மீன்பிடிக்கு முல்லைத்தீவு கடற்பரப்பினூடாக நாச்சிக்குடா சென்றுள்ளனர்.

தமது கடற்பரப்பிற்குள் றோலர் படகு ஒன்று மீன்பிடியில் ஈடுபடுவதைக் கண்ட அப்பகுதி முஸ்லிம் மீனவர்கள் தமது சமாசங்களின் உதவியுடன் குறித்த மீனவர்களினையும் றோலர் படகினையும் சுற்றி வளைத்து மடக்கிப் பிடித்துள்ளனர்.

குறித்த சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்று தற்போது 4 நாட்களாகியும் பிடிபட்ட மீனவர்களினை விடுவிக்காத நிலையில் அவர்களினை விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தைகளினை ஆரம்பிக்கவுள்ளதாக யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் திணைக்கள பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

இதேவேளை, தமது கடல் வளம் றோலர் படகு பாவனையில் பாதிக்கப்படுவதாகவும் எமது பிரதேச மீனவர்களே றோலர் படகு பாவிக்காத நிலையில் வேறு இட்ங்களில் இருந்து வருகை தரும் மீனவர்கள் எமது கடல் வளத்தினை பாதிக்கும் வகையில் தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதனை நாம் அனுமதிக்க முடியாது என நாச்சிக்குடா மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இவ் றோலர் படகு பாவனை ஏனைய இடங்களினை விட குருநகர் கடற்பரப்பிலேயே அதிகமாக காணப்படுவதாகவும் குருநகர் மீனவர்களில் அதிகமானோர் இவ் றோலர் படகுகளை தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி வருவதாகும் இதனால் சிறு தொழிலாளர்களின் மீன்பிடி நடவடிக்கை பாதிக்கப்படுவதாக யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் திணைக்கள பணிப்பாளரிடம் மகஜர் ஒன்று கல்முனை சிறு தொழில்ாளியினால் கையளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-4)

# முதலிடம் பெற்றவர்களுக்கு மூன்று நாட்கள் பயிற்சிகள்

துணுக்காய் கல்வி வலயமும் முல்லைத்தீவு விளையாட்டு அபிவிருத்தி குழுவும் இணைந்து துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட வலய மட்ட வலைப்பந்தாட்ட போட்டியில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற அணிகளுக்கு மூன்று நாட்கள் வலைப்பந்தாட்ட பயிற்சி முகாம் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிகள் எதிர்வரும் 9,10,11 ஆம் திகதிகளில் மு/மல்லாவி மத்திய கல்லூரி மைதானத்தில் நடத்தவுள்ளதாக துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இப்பயிற்சி முகமானது வலைப்பந்தாட்டப் போட்டியில் முதலாம், 2 ஆம் இடங்களைப் பெற்ற 17, 19 வயதுப்பிரிவினருக்கே நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-15)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 30 | 40 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 60 |
| பச்சைமிளகாய் | 30 | 40 | 40 |
| தக்காளி | 20 | 30 | 15 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 30 | 25 |
| கோவா | 15 | 10 | 15 |
| கரட் | 40 | 30 | 30 |
| பூசணி | 30 | 20 | 30 |
| புடோல் | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 30-35 | 20 | 30 |
| சின்ன வெங்காயம் | 55 | 40-60 | 50 |
| பெரிய வெங்காயம் | 65-70 | 80 | 60 |
| பாகற்காய் | 80 | 80 | 90 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | -- |
| பயற்றங்காய் | 35 | 40 | 50 |
| லீக்ஸ் | 50 | 70 | 60 |
| பீற்றூட் | 20 | 20 | 20 |
| கறிமிளகாய் | 45 | 60 | 50 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 200-300 |
| போஞ்சி | 40 | 60 | 40 |
| கத்தரிதம்புள்ள | -- | 20 | -- |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 | 20 |
| தேசிக்காய் | 40 | 60 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 15-35 | 30 | 30 |

# இராசி பலன்

05.04.2012
(பங்குனி 23, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு
சதுர்த்தசி பின்னிரவு 3.53 மணிவரை
உத்தரம் பின்னிரவு 2.58 மணிவரை
இராகுகாலம் 1.38-3.08 மணிவரை
சுபநேரம் 7.38-9.08 மணிவரை
பங்குனி உத்தரம்.

**மேடம்** உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், பகைவர் விலகுவார்கள், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பொருட் சேர்க்கையுண்டு.

**இடபம்** எதிர்காலம் குறித்து முக்கிய முடிவெடுப்பீர்கள், நில, புலன்களால் நன்மையுண்டு, உயரதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், விருந்தினர் வருகையால் வியப்படைவீர்கள்.

**மிதுனம்** சந்தோஷமான அனுபவங்கள் ஏற்படும் நாள்,நண்பர்கள் மத்தியில் நல்ல பெயரெடுப்பீர்கள்,பெற்றோர் வழியில் எதிர்பார்த்த தகவல்கள் வந்து சேரலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம்.

**கடகம்** பெரிய மனிதரின் ஆசீர்வாதம் கிடைக்கும்,இல்லத்தில் இனிமையான சம்பவங்கள் நடைபெறும், கூட்டு முயற்சிகள் மூலம் புதிய திட்டங்களை நிறைவேற்றுவீர்கள்.

**சிங்கம்** மாதர் நட்புண்டு, சுப செய்தியொன்று வந்து சேரலாம், சிறப்பான நாள்,பொருளாதார நிலை திருப்தி தரும், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் தோன்றும்.

**கன்னி** பெரிய மனிதர்களின் தொடர்பால் சுப காரியங்கள் நடைபெறலாம், வேலைச்சுமை குறையும், உடல் நலம் சீராகும்,பயணங்களால் நன்மையுண்டு.

**துலாம்** எடுத்த காரியங்கள் தாமதமாகும், சயனசுகக்குறைவான நாள்,குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, சுப விரயங்கள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், உறவினர் பகை அகலும், பெருமைகள் வந்து சேரலாம்,தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கும்.

**தனுசு** செல்வாக்கை காப்பாற்றி உறவினர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், பிறர் உதவிகள் கிடைக்கும், தொழில் நன்மையுண்டு, ஆரோக்கியமான நாள்.

**மகரம்** புதிய திட்டங்கள் கைகூடும், எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள்,தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் தோன்றும், பிரயாண நன்மையுண்டு.

**கும்பம்** வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்,நண்பர்கள் மனங்கோணாது நடந்து கொள்வது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை, போசன சுகமுண்டு.

**மீனம்** வருமானம் திருப்தி தரும் நாள், உறவினர்கள் செல்வாக்கை பெறுவீர்கள், செய்தொழிலில் மேன்மையடைவீர்கள்,காரிய அனுகூலமுண்டு.

வளவன்

## ஸ்ரீஅம்மா பகவான் பிரார்த்தனை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனைமையத்தில் இந்தியா நேமம், சத்திய லோகாவில் நடைபெறவுள்ள மகாதீக்ஷை ஜீவன்முக்தி (சுப்பர் புறோசெஸ் ) நவக்கிரஹ ஹோமா நிகழ்வுகளுக்கு செல்லும் பக்தர்களுக்கான விஷேட பிரார்த்தனை நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறளளளளவுள்ளது.

எனவே இதில் பக்தர்களை கலந்து கொள்ளுமாறு பிரார்த்தனை மையத்தினர் அழைக்கின்றனர். (அ)




## சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்படும் ஆரியகுளம்


யாழ். புறநகர்ப்பகுதியில் அமைந்துள்ள ஆரியகுளம் குப்பை கூழங்களால் மாசடைந்து சுகாதார சீரழிவுமிக்க இடமாக மாறி வருவதாக பிரதேசவாசிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ். மாநகர சபையினால் க ண்துடைப்பாக வருடத்தில் ஓரிரு தடவைகள் மட்டும் துப்புரவு செய்யப்படும் இக்குளம் தற்போது நீண்ட காலமாக எவ்வித பராமரிப்பும் இன்றி மாசடைந்து வருகின்றது.

தண்ணீர்ப்போத்தல்களாலும் பொலித்தீன் பைகளாலும் நிரம்பி வருகின்ற இக்குளம் நீண்டகால யுத்தத்திற்கு முன்னர் யாழ். மாநகர சபையினரால் தூய்மையாக்கப்பட்டு வேலைகள் நடைபெற்றது.

இந்நிலையில் துப்புரவுப் பணிகளுக்காக பயன்படுத்தப்பட்ட வள்ளம் இன்றும் தற்போது மூழ்கிய நிலையில் காணப்படுகின்றது.

ஓரளவு மாசு படர்ந்த நிலையில் காணப்படும் இக்குளம் காலப்போக்கில் நோய்க்கிருமிகள் உற்பத்தியிடமாக மாறக்கூடும் என அந்நகரவாசிகள் கவலை தெரிவிக்கின்றனர்.



புற்களினாலும் போத்தல்களினாலும் பொலித்தீன் பைகளினாலும் நிரம்பிக் காணப்படுகின்ற குறித்த குளத்தின் பகுதிகள் துர்நாற்றம் வீச தொடங்கியுள்ளது.

இதனால் அருகிலுள்ள கோவிலுக்கு வரும்பக்தர்களும் அயலவர்களும் பெரும் சிரமத்தினை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

மக்களின் சுகாதாரத்தினை கருத்திற்கொண்டு இதனுடன் தொடர்புடைய அதிகாரிகள் உரிய கவனம் எடுப்பார்களா என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (அ-2-4)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் கட்டமைப்பு வேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் செய்ய வேண்டியிருப்பதாலும் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப் பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம், மருதனார்மடம், இணுவில், தாவடி, கோண்டாவில் மேற்கு, சுதுமலை, கே.கே.எஸ். வீதியில் குளப்பிட்டி சந்தி வரையான கொக்குவிலின் ஒரு பகுதி, ஆகிய பகுதிகளில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## விலங்கு விசர்நோய் தடுப்பு மருந்தேற்றல்

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட நல்லூர் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ. ஞானஜோதி அறிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை யமுனா வீதி சு.க.மையத்திலும் அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை பருத்தித்துறை வீதி சங்கிலியன் மன்றத்திலும் வைத்து வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை அம்மன் வீதி சுகாதார கல்வி மையத்திலும் அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை வைமன் வீதி எடிசன் அக்கடமிக்கு அருகாமையிலும் வைத்து வழங்கப்படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2)

## பொற்பதி வீதி சரஸ்வதி முன்பள்ளியின் பொருட்களை விசமிகள் சேதமாக்கினர்

(கோப்பாய்)

முன்பள்ளிச்சொத்துக்கள் சேதமாக்கப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொற்பதி அறிவாலயக் கட்டடத்தொகுதியில் இயங்கி வரும் சரஸ்வதி முன்பள்ளி சொத்துக்களே இவ்வாறு விஷமிகளால் சேதமாக்கப்பட்டுள்ளது.

கடந்த 26 வருடங்களாக எந்தவித வசதிகளும் இன்றி பொற்பதி பகுதியிலுள்ள வீடொன்றின் பகுதியில் இயங்கிவந்த சரஸ்வதி முன்பள்ளி கடந்த மாதம் 25 ஆம் திகதி பொற்பதி அறிவாலயத்திற்கு மாற்றப்பட்டது.

ஊர் மக்களின் நிதியுதவியுடன் சுமார் 223 இலட்சம் ரூபா செலவில் இந்த அறிவாலயக் கட்டடம் அமைக்கப்பட்டதோடு 25 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. இங்கு விளையாட்டுக்கழகம், சனசமூக நிலையம், கிராம அபிவிருத்தி நிலையம், முன்பள்ளி, பொதுநோக்கு மண்டபம் என்பன இயங்கி வருகின்றன.

இந்நிலையில் கடந்த முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பின்பு விஷமிகளால் முன்பள்ளியிலிருந்த கணனி, மின்குமிழ், தண்ணீர்க்குழாய்கள், மின்மாணி என்பன சேதமாக்கப்பட்டுள்ளன.

அத்தோடு மேற்குறிப்பிட்ட முன்பள்ளியின் ஆசிரியரையும் ஆட்டோ மற்றும் மோட்டார் சைக்கிளில் சென்ற சிலர் எச்சரித்துள்ளனர்.

இவ்வாறு ஆசிரியரை எச்சரித்த நபர்கள் கடந்த காலத்தில் இடம்பெற்ற பல சமூக விரோதச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு அப்பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுவருகின்றனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என சிலரை பொது மக்கள் இனம்காட்டிய போதும் பொலிஸார் எவரையும் கைது செய்யவில்லை.

நீண்ட காலமாக எந்தவித வசதிகளும் இன்றி இயங்கி வந்த முன்பள்ளி தற்போது சகல வசதிகளுடன் இயங்க ஆரம்பித்துள்ள நிலையில் இவ்வாறான சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது அப்பகுதி மக்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த முன்பள்ளியில் தற்போது 48 சிறார்கள் கல்வி கற்று வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

## சங்காபிஷேகம்


யாழ்ப்பாணம் கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீசிவகாமி அம்பாள் ஆலய பௌர்ணமித் திருவிளக்குப் பூசை நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அஷ்டோத்திர 1008 சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகவுள்ளதாக ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு ஸ்ரீசக்கர பூஜையும் 4 மணிக்கு திருவிளக்குப்பூசையும் 5 மணிக்கு வசந்த மண்டப பூசையும் இடம்பெற்று அம்பாள் வீதியுலா வரும் அருங்காட்சியும் இடம் பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## ஒப்பந்தகாலம் முடிந்தும் நிர்மாணிக்கப்படாத கட்டடம்

### மக்கள் விசனம்

மருதங்கேணியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் பிரதேச செயலர் அலுவலகம் குறிக்கப்பட்ட காலத்திற்குள் பூர்த்தியடையாது காலம் தாழ்துவதாக தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக 35 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படும் இக்கட்டடம் பூர்த்தியடைய 8 மாத கால ஒப்பந்தம் வழங்கப்பட்டது. தற்போது 13 மாதங்கள் ஆகியும் கட்டடம் பூர்த்தியடையாத நிலையில் காணப்படுகின்றது. இக்கட்டடத்தை அமைப்பதில் ஏற்படும் தாமதத்திற்கான காரணம் புரியாத புதிராகவே இருக்கின்றது. எனவே இக்கட்டடத்தை பயன்டுத்தும் வகையில் விரைவாக பூர்த்தியாக்கி தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-3-10)









மிதிவெடி விழிப்புணர்வு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நேற்றுக்காலை யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் நிறுவனத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நிறுவனத்தின் செயலாளர் வரவேற்புரை நிகழ்த்துவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தின் ஆலோசனைக்குழு உறுப்பினர் திருமதி கமலா சிதம்பரம் உரையாற்றுவதையும் அருகில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-உ.சாளீன்)



எங்களுடன் இனிய புத்தாண்டைக்
கொண்டாடி மகிழுங்கள்
புதுவருட வாழ்த்துக்கள்
6 COLOUR Digital Printing
டிஜிற்றல் பெயர்ப்பலகைகளுக்கு
50%
விலைக்கழிவு
ஏப்ரல் 30ஆம் திகதி வரை
உங்கள் பெயர்ப்பலகையை
இன்றே மாற்றுங்கள்
3 YEARS WARRANTY
30%
விலைக்கழிவு
திருமண அழைப்பிதழ்களின்
சாம்ராட்சியம்
தேர்ந்தெடுக்கப்பட்ட டிசைனர்கள் மற்றும்
அதிநவீன ஓவியர்களால் மிகவும் துல்லியமாக
வடிவமைக்கப்பட்ட
ANDRA அழைப்பிதழ்கள்
உங்களை மட்டுமல்ல, அனைவரையும்
ஆச்சரியமடையச்செய்து உங்கள்
விழாக்கோலத்தை
மறக்கமுடியாதபடி மாற்றுகிறது.
உங்கள் திருமணத்தை
விழாக்கோலமாக
மாற்றுங்கள்
ANDRA
DIGITAL IMAGE
379, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.(உதயன் பணிமனைக்கு அருகாமையில்)
6D, உப்புமடம் சந்தி, K.K.S. வீதி, கோண்டாவில், யாழ்ப்பாணம்.
தொ.இல: 077 748 1696, 021 222 8929
யாழ்ப்பாணத்தின் ஒரே தெரிவு
மாற்றங்களில் மகிழுங்கள்

# வடமாகாணத்தின் சுகாதாரத்துறை இரண்டரை வருடங்களில் அபிவிருத்தியடைந்துள்ளது

## ஆளுநர் தெரிவிப்பு



வடமாகாண சுகாதாரத்துறை 30 வருட கால யுத்தத்தின் பின் சகல உத்தியோகத்தர்களது அர்ப்பணிப்பான சேவையினால் இரண்டரை வருட குறுகிய காலத்தினுள் பாரிய அபிவிருத்தி அடைந்துள்ளதாக ஆளுநர் தெரிவித்தார்.

வடமாகாணத்திலுள்ள அரச மருத்துவ அதிகாரிகள் சங்கங்களின் பிரதிநிதிகள், வைத்திய அதிகாரிகள், வடமாகாண வைத்தியசாலைகளின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள் ஆகியோருடனான கலந்துரையாடல் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் அலுவலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இடம்பெயர்வு, மீள்குடியேற்றம் என்பன பெருமளவில் இடம்பெற்ற போதும் குறிப்பிடும்படியான பாரிய அளவிலான தொற்று நோய்கள் எதுவும் ஏற்படாதவாறு வட மாகாண சுகாதாரத்துறையினர் சேவையாற்றியதாகவும் அத்துடன் வட மாகாணத்தில் டெங்கு நோய்த் தாக்கம் சிறந்த முறையில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பாராட்டத்தக்க வகையில் வட மாகாண சுகாதாரத்துறை காணப்படுகின்றபோது அதனது இலக்கினை அடைய சகலரும் குறிப்பாக சகல வட மாகாண வைத்திய அதிகாரிகள் சங்கங்களும் ஒற்றுமையாக பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

அத்துடன் எதிர்வரும் காலங்களில் மருத்துவ உத்தியோகத்தர்களின் தற்காலிக இடமாற்றம், பதில் கடமை இணைப்பு என்பன எனது மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படும்.ஏதாவது குறைபாடுகள் அல்லது பிரச்சினைகள் ஏற்படின் உரிய உயர்அதிகாரிகளை அணுகி அவற்றை தீர்த்துக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை, இந்நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், வடமாகாண சுகாதாரத் திணைக்கள பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி எஸ்.ஆர்.யூட்.வட மாகாணத்திலுள்ள பிராந்திய சுகாதார ஆணையாளர் ஆகியோர் இதில் கலந்து கொண்டார்கள். (அ-2)

# பரிந்துரையின்படி கே.பியையும் விசாரிக்க வேண்டும்- ஐ.தே.க.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் அரசாங்கம் ஏற்றுக் கொண்ட விடயங்கள் என்ன? நிராகரித்த விடயங்கள் என்ன? என்பதை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும் என்று ஐ.தே.க. எம்.பியான ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஜெனீவா தீர்மானம் தொடர்பிலான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், சர்வதேச பொலிஸார் கே.பியை தேடுகின்றனர். தம்மிடம் ஒப்படைக்குமாறு இந்தியா கோரி நிற்கின்றது. எனினும் அரசாங்கத்தின் பாதுகாப்பிலேயே கே.பி. இருக்கின்றார்.

யுத்தத்தில் இடம்பெற்றதாக கூறப்பட்ட மீறல்களை விசாரிக்க வேண்டும் என்று கற்றறிந்த பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. அதாவது இரு தரப்பினராலும் மீறப்பட்ட மீறல்களை விசாரிக்க வேண்டுமென்றே கூறியது ஆணைக்குழு. அவ்வாறு கூறினாலும் புலிகளின் தலைவர்களில் ஒருவரான கே.பி.எந்த நீதிமன்றத்திலும் ஆஜர்படுத்தப்படாமல் அரசாங்கத்தின் பாதுகாப்பிலேயே இருக்கின்றார்.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை சமர்ப்பித்து அதனை வரவேற்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா உரையாற்றினார். இதுதான் அரசின் நிலைப்பாடு என்று நாம் நினைக்கிறோம். இப்போது அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்கிறார். வெளிநாட்டு அமைச்சரின் கருத்துகூட அரசாங்கத்தின் கருத்தல்ல என்கின்றனர்.

17 ஆவது திருத்தம் அகற்றப்பட்டு 18 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டதன் விளைவே ஜெனீவா தலையீடுகள் ஏற்பட்டுள்ளன. 13 பிளஸ் தீர்வு திட்டம் அமுல்படுத்தப்படும் என்று இந்தியாவுக்கு கூறிவிட்டு இன்று மௌனமாக இருக்கின்றனர். 13 பிளஸ் படி தீர்வு காணப்படுமென ஜனாதிபதி இந்தியாவுக்கு வழங்கிய உறுதிமொழியை உங்களால் இல்லையென கூற முடியுமா?

எமது நாட்டுப் பிரச்சினைக்கு அரசினால் மட்டும் தீர்வு காண முடியும் என்று நினைக்கக்கூடாது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து எமது நாட்டை பாதுகாப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும். அப்போதுதான் ஜெனீவாவுக்கு எதிராக நாம் போராட முடியும் என்றார். (அ-2)

# பாரத கொலை வழக்கின்போது காணாமல்போன மெரில் ரஞ்சன்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர உள்ளிட்ட நால்வரின் கொலைச் சம்பவம் தொடர்பான நீதவான் விசாரணை நேற்றையதினம் கொழும்பு மேலதிக நீதவான் பிரசன்ன அல்விஸ் முன்னிலையில் இடம்பெற்றது.

வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது பிரதான பொலிஸ் பரிசோதகர் மெரில் ரஞ்சன் நீதிமன்றத்திற்கு வருகை தந்திருந்த போதிலும் வழக்கு விசாரணையின் போது அவர் விசாரணை இடம்பெற்ற நீதிமன்ற அறையில் இருக்கவில்லை. இதற்கமைய வழக்கு விசாரணை எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நீதவான் விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டதன் பின்னர் நீதிமன்றத்தின் மற்றுமொரு இடத்திலிருந்து வருகை தந்த மெரில் ரஞ்சன் வழக்கு பின்னர் விசாரணைக்கு அழைக்கப்படும் என்பதால் தாம் அங்கிருக்கவில்லை என குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள முடியாது என குறிப்பிட்ட நீதவான் வழக்கு விசாரணையை ஒத்தி வைத்தார். (அ-2)


நீர்வேலி அருள்மிகு ஸ்ரீ செல்லக்கதிர்காமசுவாமி திருக்கோவில்

திருக்கல்யாண தெய்வீகத் திருமணப் பத்திரிகை

(06.04.2012 பிற்பகல் 3 மணி )

நிகழும் மங்களகரமான கர வருஷம் பங்குனி மாதம் 24 ஆம் நாள் (06.04.2012) வெள்ளிக்கிழமை பங்குனிப் பௌர்ணமியாகிய அமிர்தசித்த யோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் பிற்பகல் 3 மணிக்கு மேல்

சுப்பிரமணிய சுந்தரராஜப் பெருமானுக்கும்

தேவசேனா அம்பாளுக்கும் வள்ளி நாயகி அம்பாளுக்கும்


திருமாங்கல்ய தாரண விவாகமாக நடைபெற இறையருள் கூடியிருக்கிறது. மகா கும்பாபிஷேகத்தை அடுத்த மண்டலாபிஷேக சிறப்பு வைபவமாக நடைபெறும் பெருமானின் திருக்கல்யாண நிகழ்வில் கலந்து பெருவாழ்வு பெற பிரார்த்திக்கின்றோம். திருக்கல்யாண உற்சவம் செய்வதாலும் தரிசிப்பதாலும் உண்டாகும் பலன்கள், திருக்கல்யாணம் நடாத்துவதால் இல்லங்களில் உண்டாகும், அனைத்து தோஷங்களும் நிவர்த்தியாகும், குழந்தை பேறு உண்டாகும், மழை வளம் சிறக்கும், திருமண பாக்கியம் உண்டாகும், மண வாழ்வு சிறக்கும்.

திருக்கல்யாண உபயம்:- பவானி ஸ்ரோர்ஸ்
இராஜவீதி, நீர்வேலி.

செல்லக்கதிர்காம தேவஸ்தானம்,
நீர்வேலி.

(8100)


# நியாயமான சம்பள அதிகரிப்பைக்கோரி இலங்கை வங்கி ஊழியர்கள் பகிஷ்கரிப்பு




(யாழ்ப்பாணம்)


இலங்கை வங்கி ஊழியர்கள் நியாயமான சம்பள அதிகரிப்பொன்றுக்கான தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இலங்கை வங்கியின் ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த 2 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு அமைய் நாடளாவிய ரீதியில் நேற்று மதியம் 12.30 மணி தொடக்கம் 1.30 மணிவரை இலங்கை வங்கி ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதற்கு யாழ்.மாவட்டத்தில் உள்ள இலங்கை வங்கிக் கிளைகளில் பணிபுரியும் ஊழியர்களும் ஒத்துழைப்பு வழங்கினர். இதன்படி நெல்லியடி கிளை ஊழியர்களும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நேற்று மதியம் ஒரு மணிநேர பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்ட இலங்கை வங்கி ஊழியர்கள் அரச வங்கிகளின் இலாபமோ உச்சாணியில் ஊழியர்களின் சம்பளமோ சொற்பளவு, ஆட்சியாளர்களே அரச வங்கிகளை படுபாதாளத்தில் தள்ளி விடாதீர், சம்பளப் போராட்டத்தை வெற்றிபெறச் செய்ய அனைவரும் ஒன்றிணைவோம், நிதி அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தல்களைச் சரியாக அமுல்படுத்து, வாழ்வதற்கு ஏற்ற சம்பளமொன்றை வழங்கு எனவும் இலங்கை வங்கியின் ஊழியர் சங்கத்தினால் வழங்கப்பட்ட பதாகைகளையும் கைகளில் ஏந்தி நின்றனர். வங்கி ஊழியர்கள் இவ்வாறு பணிப் புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டதனால் வாடிக்கையாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6-24)

# பெருமிதம், அடக்கம், அதிர்ஷ்டம், மற்றும் அழகு



## ஆன்மீகம் 26

வாழ்க்கை மிகவும் சிறியது. காலம் ஓடிக்கொண்டிருக்கிறது. இந்தக் குறுகிய வாழ்க்கைக் காலத்தில் ஏன் இடர்படுகிறாய்? ஏன் கவலைப்படுகிறாய்? உன் வாழ்க்கையை விசாலநோக்கில் பார், ஒரு அகண்ட கோணமுள்ள லென்ஸ் வழியாக- அது உனக்குப் பெரிய படத்தைக் காட்டும். அப்போது வாழ்க்கை அழகின் அலைகள் எழும்பும்.

நீ உன் வாழ்க்கையைச் சிறு குளமாகப் பார்த்தால், அது ஆழமில்லாமல் இருந்தால், அலை எழும்பாது; குமிழிகள் கூடத்தோன்றாது.

உனக்குள் ஆழமிருக்கிறது. உன்னிடம் அது இல்லாமலில்லை. அதிகப்படியாக அங்கிருக்கும் தூரை எடுத்துவிடு. அப்போது மிக அழகாக, ஆழமாக இருப்பதைக் காண்பாய். அதற்காக, நீ அதிகமாக எதுவும் செய்யவேண்டியதில்லை. அதுதான், அறிவின் சக்தி.

கடவுளைப்புகழ், உன்னுடைய புகழ்ச்சியால் கடவுள் உயர்ந்து போக



மாட்டார்; ஆனால், அந்தப் புகழ்ச்சியால் நீ அழகாகிவிடுவாய். உனக்குள்ளிருக்கும் காலியான கூடு போன்ற ஒவ்வொரு அணுவின் வெற்றிடமும் அந்தப் புகழ்ச்சியால் நிறையும். நீ உன் வீடு போய்ச்சேரும்போது- உனக்குள்ளிருக்கும் உன்னைத் தொடும் போது, நீ ஒப்பற்ற அழகை உணர்வாய். நீ மிகவும் அழகானவன்- அதனால்தான் உன்னில் இந்த உணர்வு ஏற்படுகிறது.

நீ இங்கேயும், அங்கேயும் எந்த அழகைப் பார்த்தாலும், அது உன்னுடைய சுயத்தின் வெளிப்பாடே. அதில், உன் சுயம் கணநேரக் காட்சியாக மிளிருகிறது. அதனால்தான், இந்த உலகத்தில் எல்லாமே அழகாகத் தெரிகிறது.

ஒருநாய் எலும்புத் துண்டைக் கடிக்கும்போது, அதன் ஈறுகளிலிருந்தும் இரத்தம் கசியும். இந்த இரத்தத்தை ருசிக்கும் நாய். எலும்புதான் அவ்வளவு ருசியாக இருப்பதாக நினைக்கிறது என்பது உனக்குத் தெரியுமா?

அழகின் அனுபவத்தில் ஐம்புலங்களும் இணைக்கின்றன. அவற்றில் எது மேலோங்கி இருக்கின்றதோ, அது தன்னைச்சுற்று அதிகமாக வெளிப்படுத்திக் கொள்ளும். ஆகவே, உனக்குப் பசித்தால்- நிலவு உனக்கு அடை அல்லது பாலாடைக் கட்டியை நினைவுபடுத்தும்.

அழகின் அனுபவத்தில் புலன்கள் ஒன்று சேர்கின்றன. ஏனெனில், அழகு புலன்களுக்கு அப்பாற்பட்டது- மனதிற்கும்- உன் இருப்பிற்கும் அப்பாற்பட்டது. நீ அழகில் நிலைக் கும்போது, இந்த முழுப்படைப்புமே உன்னுடன் அதில் திளைக்கிறது. இந்தப்படைப்பில் பல வகைகள் இருப்பதன் நோக்கமே, எப்படியாவது உன்னைத் திரும்பவும், உன்னிடமே கொண்டுவந்து சேர்ப்பதுதான். நீ தான்- அந்த அழகானவன். நீ தான்- அந்த அழகு- அந்தப் பேரானந்தத்தில்- உனக்குத் தேவையானவையெல்லாம், அல்லது நீ விரும்புபவை அனைத்தும் நிகழ்கின்றன.

ஆதிசங்கரர் இதை மிக அழகாக விவரிக்கிறார்

அங்கே ஓர் சிறு தீவுண்டு
அதில் ஓர் பாற்கடலுண்டு
அதில் ஓர் கற்பக விருட்சமுமுண்டு
அத்தீவில் விழிப்புணர்வு எனும்
ஓர் அழகான மெஞ்ஞான வீடுண்டு
அந்த வீட்டில் ஓர் மஞ்சமுண்டு
பரமசிவனாம் அந்த மஞ்சத்தில்
ஓ அன்னையே நீ புன்னகையுடன்
அமர்ந்திருக்கிறாய்!

**உன்னை வணங்கும் பேறு பெற்றவர் யாரோ!**

**பாக்கியம் செய்யாத ஒருவரால் முடியாதே!**

**யாரோ உன்னை நேசிக்கும் பேறு பெற்றவர் யாரோ!**

**யார் பாக்கியசாலியோ அவரே!**

அழகை அனுபவிக்ககூட நீ அதிர்ஷ்டம் செய்திருக்கவேண்டும். அதிர்ஷடத்தைக் கூறுபோட்டுப் பார்க்காதே! நியாயப்படுத்திப்பார்க்காதே; இது இதயத்தின் வெளிப்பாடே. ஆனால், ஒருவர் இதைத் தன் மனத்தால் செய்ய முடியாது; தன்திறமையால், தகுதியால்- எதாலுமே இதை அடைய முடியாது. இது என் புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாற்பட்டது. என்னுடைய காட்டுத்தனமான கற்பனை- அப்போது அதை ஒருவர் அதிர்ஷ்டம் என்கிறார். அதிர்ஷ்டசாலியாக இருப்பதற்கு ஆயிரம் காரணங்களை நீ சொல்லலாம். நல்லவேளை நீ தவளையாக இல்லை! ஒரு வானொலியில் பொறிக்கப்பட்டு பிறகு ஒருவரது வயிற்றுக்குள்- குடலுக்குள்- போகும் மீனாக இல்லை. நீ விலங்காக இல்லாததால் நீ அதிர்ஷ்டசாலி என நீ நினைக்கலாம். நீ அதிர்ஷ்டமானவன் என்பதைப் புரிந்துகொள்ள எண்ணற்ற காரணங்கள் இருக்கின்றன. காரணங்கள் வட்டத்தின் வெளிக்கோடுதான்- நான் அதிர்ஷ்டசாலி என்ற உணர்வுதான்மையம்.

நான் அதிர்ஷ்டமே இல்லாமல் இருக்கிறேன் என்று யோசித்துக்கொண்டே இருக்கலாம்- அது உன் பார்வைக்கு ஒரு வித்தியாசமான கோணத்தைத் தரும்.

அபரிமிதத்தில்--- கற்பக விருட்சம் இருக்கிறது.

நீ பற்றாக்குறையை உணர்ந்தால் அது பாலைவனம்; ஆனால், ஏராளத்தை உணர்ந்தால் அங்கே எல்லாம் அபரிமிதமாய் இருக்கும். சமுத்திரம் அபரிமிதத்தின் அடையாளம்- எல்லாமே இங்குதான் இருக்கிறது என்று பொருள். எனவே, மெய்யுணர்வுக்கு எப்போதும் பாற்கடல் உவமையாகச் சொல்லப்படுகிறது. அந்த அபரிமிதத்தின் நடுவில் கற்பக விருட்சம் இருக்கிறது- சித்தி என்று சொல்லப்படுவது அந்த சிந்தாமணி- அறிவு, ஞானம், பாகுபடுத்துதல், புத்திக்கூர்மை (இது எல்லாவற்றையும் மறந்த நிலையல்ல- அங்கு முழுமையான விழிப்புணர்வு கவனம், புத்திக்கூர்மை எல்லாமே இருக் கிறது) பல சமயங்களில் நிறைய அறிவாளிகள் நேர்மையற்றுக் குறுக்கு வழிகளில் செல்கிறார்கள். அங்கே சூது இருக்கிறது. ஒருவர் புத்திசாலித்தனம்- அதிகமாக ஆக, ஆக அதிகமாகச் சூழ்ச்சித் திட்டங்கள் போடுகிறார். அவற்றைச் செயற்படுத்துகிறார்கள். ஆகவே இங்கு சொல்லப்படுகிறது அந்த வீட்டில் ஷிவா காராமன்ச் சிவமாகிய அந்தப் படுக்கையில் (அதாவது, உள்ளாழ்ந்த மெஞ்ஞானமும், உள்ளாழ்ந்த நிர்மலமும் நிலையும்) தூய்மையானதும்,

**பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்**

எல்லாவற்றையும் கடந்த பேரானந்த அருளுமாகிய படைப்புச் சக்தி இருக்கிறது. சைதன்யத்தின் இரகசியமாம்- சக்தி- அந்த உள்ளாழ்ந்த முழுமையில் இருக்கிறாள். அவளை வழிபட பாக்கியம் செய்தவர் யாரோ?

நீ அதிர்ஷ்டம் செய்யவில்லையென்றால், நீ இங்கு இருக்கவே முடியாது. நீ இந்த ஆனந்தத்தை அனுபவிக்க முடியாது. அங்கு கேள்விக்கே இடமில்லை.

(தொடரும்)

# உங்கள் கைரேகை பலன்கள் 26


## சந்திரமேட்டிலுள்ள இரேகைக் குறிகளின்

சந்திர கிரகம் கையில் சுண்டு விரலுக்குக் கீழே பெரும் பாகத்தை ஆஸ்ரயித்துக்கொண்டிருக்கிறது. கையை அழகுபடுத்தியிருப்பதாலேயே சந்திர ஆதிக்கத்துக்கு இடங் கொடுத்தது போலாகும். இந்த சந்திர மேட்டில் நட்சத்திர முக்கோணம், வட்டவளையம், ஒரு செங்குத்தான நீண்டரேகை, சதுரம் முதலியவைகளில் ஒன்றேனும் அல்லது பலவேனும் இருப்பினும் சந்திரமேடு வலுவுள்ளதாகும். இக்குறிகள் நன்மைக்கேதுவாகும்.

குறுக்கிட்ட இரேகை, வலைக் குறி, கிராஸ்தீவு, புள்ளி, சிக்கலான நட்சத்திரக்குறி முதலியவைகள் கெடுதலைக்குறிப்பவையாகும். ஆரோக்கியமும் யோக்கியமும் பின்னப்படும் சந்திர மேட்டின் கம்பீரம், கை சதை பற்றி நன்கு வளைந்திருப்பதைப் பொறுத்திருக்கிறது. சதைப்பற்று மேடிட்டு

**சக்தி**

பக்கவளைவு, அழகாய் அமைந்திருப்பின், சந்திரனது ஆதிக்கத்தைக் குறிக்கிறது. இது அளவுக்கு மிஞ்சியும் தோன்றும். புதன் மேட்டை நோக்கிய நீண்ட ஒற்றை ரேகையுடன் தொடர்ந்த சில ரேகைகளுமிருந்தால், தேக பலத்தையும் சக்தியையும் குறிக்கும். இவை மிகப்பதிந்து காணப்படில், மிதமிஞ்சியதாகும். சந்திர நிலைமைக்கு விரலின்மையால் சந்திர மேட்டையே மூன்று பகுதிகளாகப் பிரித்து, மேல், மத்தி, கீழ் எனப் பிரித்துக்கொள்ளவேண்டும். இவை ஸ்தூல, சூட்சும, மானசீகமென மூவுலக தர்மத்தைக் குறிக்கும். இம் மூன்றும் தேக நிலைமையைக் குறிக்கும். துர்க் குறிகள் மேற்சொன்னவாறு ஒன்று அல்லது பல காணப்படினும், ஆரோக்கியம் கெடுவதற்கான காரணங்களைக் குறிக்கும். சுகவீனத்துக்கான குறிகள் முக்கியமாய் ஸ்திரீகளின் கையில் காணப்படும். முற் பகுதியின் எல்லையைக் கொண்டு இன்ன காரணத்தால் பிணியுண்டாயிருக்கிறதென்று எச்சரிக்கை செய்யலாம்.




விடினும், அனுபவத்தில் பொருத்தமாய் இருப்பதால், ஏற்றுக்கொள்ள வேண்டியதே. பிரவிர்த்தியைக் குறிக்கும் விதிரேகை ஆரம்பத்தில் ஒரு குறுக்கிட்ட நீண்ட ரேகையைத் தொட்டுக்கொண்டிருக்கும்.

சந்திரமேட்டில் உற்பத்தியான நெடு ரேகை செவ்வாய் மேட்டை நோக்கிச் சென்று அதில் விசேடமான குறுக் கிட்ட ரேகை காணப் படுமானால், பற் பல வியாதி அணுகுவதைக் குறிக்கும். இந்த ரேகை முக்கியமாய் ஆயுள் ரேகையில் உற்பத்தியாகிச் செவ்வாய் மேட்டை நோக்கியிருக்கும், இதை ஆரோக்கிய ரேகையென்றும் சொல்வதுண்டு.

(தொடரும்)

# ரேகைகளும் கிரகங்களும்

சந்திர மேட்டில் குறுக்கிட்ட ரேகை காணப்படில், சமுத்திர யாத்திரையென்றும் நெடு ரேகையாயின் பூமியில் யாத்திரையென்றும் அறிய வேண்டிய இவ்விரண்டையும் சில ரேகை சாஸ்திரிகள் ஒப்புக்கொள்ளா

சந்திர ஆதிக்கருக்கு திடசித்தமிராது. மனத்தில் எப்பொழுதும் பயமிருந்து வரும். மனோ சாந்தியிராது. இடம் விட்டுஇடம் மாறுவதில் அல்லது யாத்திரையில் இஷ்டமதிகம்.

# ஐ.தே.கவின் உறுப்பினர்கள் சஜித்தை ஆதரிக்க வேண்டும்

## அமைச்சர் வீரவன்ச கோரிக்கை

(கொழும்பு)

சகல ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்களும் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச விற்கு ஆதரவளிக்க வேண்டுமென வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு சக்திகளின் தலையீட்டை சஜித் பிரேமதாச தைரியமாக எதிர்த்தார் என அவர் சுட்டிக்காடியுள்ளார். புத்தியுள்ள அனைத்து ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்களும் சஜித் பிரேமதாசவிற்கு ஆதரவளிப்பாளர்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது பின்பற்றப்படும் கொள்கைகளை கட்சி தொடர்ந்தும் பின்பற்றினால் பாரிய பின்னடைவுகளை எதிர்நோக்க நேரிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதத்திற்கு எதிராக யுத்தத்தை ஐக்கிய தேசியக்கட்சி எதிர்த்து வந்ததாகவும் அதே நிலைப்பாட்டையே இன்றும் கொண்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்காவின் தீர்மானத்திற்கு தைரியமாக சஜித் பிரேமதாச எதிர்ப்பை வெளியிட்டதாகவும் இந்த நிலைப்பாடு வரவேற்கத்தக்கது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# யுத்தங்கள் ஏற்படும் போது ஒத்துழைப்பு வழங்குவோம்

## அமெ.வுடன் இலங்கை ஒப்பந்தம் செய்ததாம்

(கொழும்பு)

யுத்தங்களின் போது இலங்கை அமெரிக்காவிற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியுள்ளதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

2006 ஆம் ஆண்டு அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையில் பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பிராந்தியத்தில் ஏதேனும் யுத்தம் ஏற்பட்டா்ல் அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளுக்கு இலங்கை ஒத்துழைப்பு வழங்க வேண்டிய நிலைமை காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் ஆளும் கட்சி அமைச்சர்கள் அமெரிக்காவிற்கு எதிராக கருத்துக்களை வெளியிட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான பாதுகாப்பு ஒப்பந்தங்களின் போது இந்த அமைச்சர்கள் எதிர்த்து குரல் கொடுக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தங்களின் அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளுக்கு இலங்கைத் துறைமுகங்களையும் விமான நிலையங்களையும் பயன்படுத்த ஏற்கனவே இணங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (அ-2)

# கிறிஸ்தவ தேவாலய அபிவிருத்திக்கு ஐம்பது மில்லியன் ரூபா ஒதுக்கீடு

கிறிஸ்தவ தேவாலயங்களை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கம் இவ்வருடத்தில் 50 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக பிரதமரும் புத்தசாசன, மத விவகார அமைச்சருமான டி.எம்.ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

கிறிஸ்தவ விவகார திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டில் இருந்த கல்வாரி கிறிஸ்தவ தேவாலயத்தை அபிவிருத்தி செய்வதற்காக நிதி வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலில் என்றுமில்லாதவாறு மத எழுச்சி நாட்டில் ஏற்பட்டுள்ளது.

பௌத்த விகாரைகளுக்கு மட்டுமன்றி. ஏனைய மத வழிபாட்டுத்தலங்களுக்கும் அபிவிருத்திக்காக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

சகல மதங்களும் அரசின் இச்செயற்பாட்டைப் பாராட்டியுள்ளன என்றும் பிரதமர் கூறினார். மக்கொன, ஹினிதும, குருநாகல், மாவத்தகம கல்வாரி றோமன் கத்தோலிக்க தேவாலயங்களுக்குப் பிரதமர் ஒரு இலட்ச ரூபா வீதம் காசோலைகளைக் கையளித்தார். (அ-2)

# சிற்றுண்டிச்சாலை இயங்காமையால் கிளி.வைத்தியசாலை மக்கள் அவதி

(கனகபுரம்)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் உள்ள சிற்றுண்டிச்சாலை கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதி முதல் திறக்கப்படாமையால் நோயாளர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

இச்சிற்றுண்டிச்சாலையானது திறக்கப்படாமையால் ஏ9 வீதியைக் கடந்து வெளியில் உள்ள கடைகளுக்கு செல்ல வேண்டிய அவல நிலை உள்ளது.

ஏ 9 வீதியைக் கடந்து செல்லும் போது விபத்துக்களை எதிர்நோக்க வேண்டிய நிலையும் உள்ளது.

இச் சிற்றுண்டிச்சாலை திறக்கப்படாமையால் வைத்தியசாலை ஊழியர்கள் தமது சீருடையுடன் ஏ- 9 வீதியைக் கடந்து வெளியில் உள்ள கடைகளுக்கு செல்கின்றனர்.

இச்சிற்றுண்டிச்சாலையில் சுட்டம் ஒன்றை சரிப்படுத்த வேண்டியிருப்பதாலேயே திறக்கப்படாமல் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே உரிய தரப்பினர் இவ்விடயத்தில் அக்கறை கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து உதவுமாறு நோயாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-259)

# களைகட்டுகிறது புகையிரத பாதை அமைக்கும் பணிகள்

(கொழும்பு)

இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட சுமார் 146 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் பளை-காங்கேசன்துறை இடையிலான ரயில் பாதை புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டு துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

இந்த இரண்டு பிரதேசங்களுக்குமிடையிலான சுமார் 56 கிலோ மீற்றர் பாதை புனரமைக்கப்படவுள்ளது. இதற்கென தென்னிலங்கையிலிருந்து கனரக வாகனங்களில் கொண்டுவரப்படும் தண்டவாளங்கள் பளை தொடக்கம் சேமிக்கப்பட்டு வருகின்றது.

இதேபோன்று யாழ்.பிரதான ரயில் நிலையத்தின் புனரமைப்பு பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும் மருதனார்மடம், கோண்டாவில் புகையிரத நிலையங்களில் தங்கியிருந்த மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இதனோடு மிருசுவில், சாவகச்சேரி புகையிரத நிலையங்களின் பழைய கட்டடங்கள் இடித்தழிக்கப்பட்டு அந்த இடங்களில் புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நீண்டகாலம் ரயில் பாதை புனரமைப்பு பணிகள் குறித்த பேச்சுக்கள் இடம்பெற்று வந்திருந்த நிலையில் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணிகள் எதிர்வரும் டிசெம்பர் மாதமளவில் முடிக்கப்படும் என இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.இதேவேளை, ஏ9 வீதியின் புனரமைப்பு பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது. (அ-2)

# நீரில் மூழ்கி யுவதி உயிரிழப்பு

(கொழும்பு)

சீத்த கங்குல ஆற்றில் நீராடுவதற்குச் சென்ற யுவதியொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

சிவனொளிபாதமலைக்கு யாத்திரையாகச் சென்றிருந்த ருவென்வெல்ல பகுதியைச் சேர்ந்த 22 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம் ஏரத்ன வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ-2)

# கும்பாபிஷேகம்

யாழ்.திருநெல்வேலி திருவருள்மிகு ஸ்ரீ நீலாயதாட்சி அம்பிகா சமேத ஸ்ரீகாயாரோ கண சுவாமி தேவஸ்தான புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ மஹா கும் பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.27 மணி தொடக்கம் 10.27 மணிவரை உள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இதற்கான கிரியைகள் கடந்த திங்கட்கி ழமை தொடக்கம் நடைபெற்று வருகின்றன.

இன்று வியாழக்கிழமை காலை 7 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித் துள்ளனர். (அ-2)


சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் தில்லையம்பதி திருக்கோயிலில் அருளாட்சிபுரிகின்ற

ஆதி மஹாசக்தி அன்னை ஸ்ரீ சிவகாமி அம்பாளுக்கு

பங்குனி உத்தர நவோத்திர சகஸ்ர 1008 சங்காபிஷேகம்

இராகம்- கல்யாணி

ஆலரசு மரத்தின் அருள்மிகு பொந்தினூடே ஆனந்தக் கலசம் காட்டும் அம்பிகே சிவகாமி பாலாபிஷேகம் செய்தோம் பங்குனித் திருநாளில் பௌர்ணமித் திருவிளக்கின் ஜோதியான கல்யாணி



(05.04.2012) இன்று வியாழன் காலை 8.00 மணிக்கு அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் 1008 சங்காபிஷேகம், விசேட பூசை நண்பகல் மகேஸ்வர பூசையும் அன்னதானமும் நடைபெறும்.

மாலை 4.00 மணிக்கு விசேட பூசை, 5.00 மணிக்கு வசந்த மண்ப பூசை, திருவூஞ்சல் நடைபெற்று மாலை 6.00 மணிக்கு ஸ்ரீ விநாயகப் பெருமான், ஸ்ரீ சிவகாமி அம்பாள், வள்ளி, தெய்வயானை சமேத ஸ்ரீ முருகப் பெருமான் பூந்தண்டிகையில் தெரு வீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும்.

சங்காபிஷேகம் உபயம்:- அரச ஊழியர்களும் ஓய்வூதியம் பெறுவோரும் (கோண்டாவில்)

"தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே சரணம்"

தில்லையம்பதி பரிபாலனசபை

(சி/6256)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 01

# யுத்தத்தின் போக்கில் ஏற்பட்ட திருப்புமுனை



அமெரிக்கப் போர்விமானங்கள் -ஜப்பானின் ஆக்கிரமிப்பிலுள்ள தீவைத் தாக்குகின்றன

பொருளாதாரத்துறையிலும் நிலவரம் பாசிச ஜேர்மனிக்கு ஆதரவாயில்லை. 1944-இல் மொத்தத்தில் இதன் தொழிற்துறை எல்லா முக்கிய இராணுவப் பொருட்களின் உற்பத்தியிலும் உயர்வான குறியீடுகளைக் கொண்டிருந்தபோதிலும் இது இவ்வாறு இருந்தது. 1943 டிசெம்பரோடு ஒப்பிடுகையில் 1944 ஜூலையில் இதன் இராணுவ உற்பத்தியின் அளவு 45 சதவிகிதம் அதிகரித்தது. இத்தகையதொரு அதிகரிப்பு, ஜேர்மனியப் பொருளாதாரம் முழுவதையும் அசாதாரணமான முறையில் முடுக்கிவிட்டது. ஜேர்மனிக்கு பலவந்தமாக இழுத்துச் செல்லப்பட்ட அயல்நாட்டுத் தொழிலாளர்களை ஈவிரக்குமின்றிச் சுரண்டியது. ஆக்கிரமித்த நாடுகளை வெட்கங்கெட்ட வகையில் கொள்ளையடித்தது. ஆகியவற்றின் பயனாக இருந்தது.

ஆனாலும், பாசிச ஜேர்மனியில் உற்பத்தி அதிகரிப்பின் வேகங்கள் (முழு முதல் அளவுகளில்) சோவியத் யூனியனின் உற்பத்தி அதிகரிப்பு வேகங்களைவிடக் குறைவாக இருந்தன. உதாரணமாக, 1942- 1944 இல் சோவியத் டாங்கி தொழிற்துறை 77ஆயிரத்து708 டாங்கிகளையும் தானியங்கி பீரங்கி அமைப்புக்களையும் உற்பத்தி செய்தது. இதே காலகட்டத்தில் ஹிட்லர் ஜேர்மனியில் 46 ஆயிரம் டாங்கிகளும் திடீர்த் தாக்குதல் பீரங்கிகளும் உற்பத்தி செய்யப்பட்டன. 1942-1944இல் ஜேர்மனியில் 77ஆயிரத்து 970 விமானங்கள் செய்யபட்டன. இதே காலகட்டத்தில் சோவியத்யூனியனில் 92ஆயிரத்து775 விமானங்கள் செய்யப்பட்ட மற்றவகையான ஆயுதங்களின் உற்பத்தியிலும் பாசிச ஜேர்மனி சோவியத் யூனியனிடமிருந்து கணிசமான அளவு பின்தங்கியிருந்தது.


பசுபிக் சமுத்திரத்திலுள்ள மாக்கின் தீவை ஆக்கிரமிப்பதற்கு பயணிக்கையில் எதிரிகளை ஏமாற்றும் புகை வளையங்களை வீசிய படி வேகமாகப் பயணிக்கும் அமெரிக்காவின் க்ருசர் போர்க்கப்பல்


எனவே, 1944-இல், தனது பொருளாயத சக்திகளையும் ஆட்களையும் அணிதிரட்டுவதில் பாசிச ஜேர்மனி உயர் மட்டத்தை அடைந்திருந்தாலும், யுத்த முறைகளில் சோவியத் யூனியன் இறுதியாகவும் உறுதியுடனும் விஞ்சி நின்றது. செஞ்சேனையின் வெற்றிகளுக்கான மிக முக்கிய காரணிகளில் இதுவும் ஒன்றாகும்.


ஜப்பானிய ஆக்கிரமிப்பிலிருக்கும் தீவுகளை கைப்பற்றுவதற்காக நகரும் அமெரிக்கப்படை

சோவியத் இராணுவம் இன்னமும் பலமடைந்து 1944 ஜனவரி 1 ஆம் திகதி 85 இலட்சத்து 62 ஆயிரம் பேர் இருந்தனர். தரைப்படையில் 73 இலட்சத்து 37 ஆயிரம் பேர், வான் படையில் 5இலட்சத்து 36 ஆயிரம் பேர், கடற்படையில் 3இலட்சத்து 91 ஆயிரம் பேர், வான் எதிர்ப்புப் பாதுகாப்புப் படையில் 2 இலட்சத்து 98ஆயிரம் பேர் இருந்தனர். நிரந்தர இராணுவத்தில் 63 இலட்சத்து 54 ஆயிரம் பேரும் உயர்மட்ட பிரதான படைத்தலைமையின் சேம இருப்பில் சுமார் 4 இலட்சத்து 88 ஆயிரம் பேரும் இருந்தனர். கணிசமான அளவு துருப்புகள் தொலைகிழக்கிலும் டிரான்ஸ் பைக்காலிலும் டிரான்ஸ் காக்கசஸிலும் நிறுத்தப்பட்டிருந்தன.

1943 டிசெம்பர் 1-ஆம்திகதி பாசிச ஜேர்மனிய இராணுவத்தில் 1கோடியே 1இலட்சத்து 69 ஆயிரம் பேர் (அதாவது, தரைப்படையில் 70 இலட்சத்து 90 ஆயிரம்பேர், வான்படையில் 19 இலட்சத்து 19 ஆயிரம் பேர், கடற்படையில் 7 இலட்சத்து 26 ஆயிரம் பேர், எஸ்.எஸ்.படையில் 4 இலட்சத்து 34 ஆயிரம் பேர்) இருந்தனர். இவர்களில் 66 இலட்சத்து 82 ஆயிரம் பேர் நிரந்தர இராணுவத்திலும் சேமப்படையில் 34 இலட்சத்து 87 ஆயிரம் பேரும் இருந்தனர். தரைப்படை நிரந்தர இராணுவத்தில் மூன்றில் இரண்டு பகுதி- 63 சதவிகித டிவிசன்கள், 71 சதவிகித சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 73 சதவிகித டாங்கிகளும் திடீர்த் தாக்குதல் பீரங்கிகளும்-1944 ஆம்ஆண்டின் தொடக்கத்தில் சோவியத் ஜேர்மனிய போர்முனையில் குவிக்கப்பட்டிருந்தன. ஜேர்மனியினுடைய கூட்டாளிகளின் எல்லா நிரந்தரத் துருப்புகளும்- 38 டிவிசன்களும் 12 பிரிகேடுகளும்-இப்போர்முனையில்தான் இருந்தன. எஞ்சிய 116 ஜேர்மனிய டிவிசன்களும் 2 பிரிகேடுகளும் பின்வருமாறு நிறுத்தப்பட்டிருந்தன. நோர்வேயில் 13, டென்மார்க்கில் 6, கொலண், பெல்ஜியம், பிரான்ஸில் 47, இத்தாலியில் 21, அல்பேனியா, யுகோஸ்லாவியா, கிரீசில் 21 டிவிசன்களும் 1 பிரிகேடும், ஸிரிகீ-இன் சேம இருப்பில் (ஜேர்மனி, ஆஸ்திரியா, சொக்கோஸ் லோவாக்கியா, போலந்து) 8 டிவிசன்களும் 1 பிரிகேடும்.

யுத்தத்தில் ஈடுபட்டிருந்த எல்லா நாடுகளுடனும் ஒப்பிடுகையில் மிக அனுகூலமான சூழ்நிலைகளில் இருந்த அமெரிக்க ஐக்கிய நாட்டின் பொருளாதாரம் உயர்வான வளர்ச்சியை அடைந்தது. 1943-இல் அமெரிக்க இராணுவத் தொழிற்துறை 85 ஆயிரத்து 900 விமானங்கள் 38 ஆயிரத்து 500 டாங்கிகள் மற்றும் தானியங்கிப்பீரங்கிகள், 2இலட்சத்து 20ஆயிரத்து 900 பல்வேறு வித பீரங்கிகள் 26 ஆயிரத்து 800 மார்டர் பீரங்கிகளை உற்பத்தி செய்தது. 262 பிரதானரகச் சண்டைக்கப்பல்களைக் கட்டியது. 1943 இறுதியில் அமெரிக்க இராணுவத்தின் எண்ணிக்கை 1 கோடியே 4 இலட்சத்து 40 ஆயிரமாக இருந்தது. இவர்களில் 74 இலட்சத்து 82 ஆயிரம் பேர் தரைப்படை மற்றும் விமானப்படையிலும் 29 இலட்சத்து 58 ஆயிரம்பேர் கடற்படையிலும் கடற்காலாட்படையிலும் இருந்தனர். அமெரிக்க இராணுவத்தில் மூன்றில் இரண்டு பகுதி நாட்டின் உள்ளேயே இருந்தது. அமெரிக்க இராணுவத்தில் இருந்த 90 டிவிசன்களில் 31 டிவிசன்கள் (ஐரோப்பாவில்-16, வட ஆபிரிக்காவில்-2, பசுபிக் சமுத்திரத்திலும் ஆசியாவிலும்-13) போர்க்களத்தில் இருந்தன.


மாரியானா தீவின் மலைப்பக்கத்து வளைவில் ஒளிந்திருக்கும் ஜப்பானியக்குடும்பம் ஒன்றை அமெரிக்கக் கடற்படைவீரன் கண்டுகொள்கிறான்

(தொடரும்)

# தமிழ் பாரம்பரிய அரங்கில் புதிய முயற்சி

அண்மைக்காலமாக நாடக முயற்சிகளில் மிகுந்த பயனுள்ள ஒன்றான "கண்டனன் சீதையை" என்ற



இசை நாடகம் 11.03.2012 இல் கைலாசபதி கலையரங்கில் மேடையேற்றப்பட்டது. ஒரு வருடத்திற்கு மேல் பயிற்சிகளும் ஒத்திகைகளும் மேற்கொண்டு ஏறக்குறைய 134 நாட்கள், மூன்று மணித்தியாலப்படி செலவிட்டு உருவாக்கப்பட்டுள்ளது. புதிய முயற்சியாகவும் அர்ப்பணிப்புமிக்க செயற்பாடுகளின் வெளிப்பாடாகவும் இந்நாடகம் ஆற்றுகையாக உருப்பெற்றுள்ளது. வாழ்க்கை முறை விரைவுபட்டு பொருளாதாரம் நெருக்கடிக்குட்படும் இத்தருணத்தில் இந்நாடகக் குழுவினர் நிறைய நேரத்தைப் பயன்படுத்தி ஆக்கப்பட்ட இந்நாடகத்தில் பெரும்பாலானோர் அரசாங்க வேலை பார்ப்பவராக இருப்பது குறிப்பிடத்தக்கது. ஒரு ஞானியைப் போன்ற பக்குவமும் தீர்க்க தரிசனமும் கொண்ட எங்கள் காலத்தின் பெரும் கலைஞன் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நெறியாள்கையில் இந்நாடகம் தோற்றம் பெற்றது. மகாபாரதத்தை அடியொற்றி எழுதப்பட்ட "ஆர்கொலோ சதுரர்" (எக்காலமாயினும் யுத்தம் அதன் இயல்பில் ஒரே தன்மை கொண்டமைந்திருப்பது சூட்சுமமாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது). அதேபோல் இராமாயணத்தைக் கொண்டு புனையப்பெற்ற "மனத்தவம்" (இந்நாடகம் ராமர் பாத்திரத்தின் இன்னொரு பரிமாணத்தைத் தர்க்க நிலைநின்று 2002 ஆண்டுகால நம்மவர்க்கான முக்கிய செய்தியாக வெளிப்படுத்தப்பட்டது.) வரலாற்றை சமகாலமாக்கும் செயற்பாடாக அமைந்திருந்தது.

இது புராதன கால இராமாயணத்தை அடியொற்றி இருந்தாலும் அருணாசலக் கவிராயரின் பார்வையில் செயல் நிலைப்பாத்திரம் (கதாநாயகன்), எதிர்செயல் நிலைப் பாத்திரம் (வில்லன்) இரண்டையும் மனித உணர்வுகள் என்ற ரீதியில் அதன் நியாயங்களோடு ஒரே தட்டில் நிலைநிறுத்திய விதம் மிகவும் நயக்கத்தக்கது. ஆனால், இதை நெறிப்படுத்திய குழந்தை ம.சண்முகலிங்கம் மிக முக்கிய செய்தியை இந்நாடகத்தின் உள்முகமாக கொண்டு வருகிறார். அதாவது அரவணைப்போடும் உணர்வோடும் நிதானத்தோடும் இருத்தலென்பதாகும். இந்நாடகம் இவரது வியாக்கியானத்திற்குட்பட்டு சண்முகலிங்கத்தின் இராமாயணமாக தோற்றம் பெற்றுள்ளது. ஒரு நல்ல

## கண்டனன் சீதையை

கலைப்படைப்பு எப்போதும் விளைவுகளின் தாக்கம் மீதே கவனத்தை வைத்திருக்கும் "ஈடிப்பஸ் மன்னன்" நாடகத்தில் பல கொடூர சம்பவங்கள் ஆற்றுகை, நிலைசாரா கதை, நிலைப்பட்ட ஐதிகமாக நடந்து முடிந்திருக்க நாடகம் வெறும் விளைவுகளோடேயே ஆற்றுகையை ஆரம்பிக்கும். ஆனால், சமகால சினிமா, தொலைக்காட்சி, பத்திரிகை என்பன சம்பவத்தின் கொடூரம் மீதே கவனம் கொண்டுள்ளன. மாறாக இப்படைப்பு சமூக நலனில் அக்கறை கொண்டு புதிய திசையில் செல்கிறது. சூர்ப்பனகைக்கு மூக்கறுத்த காட்சியை விட அதன் விளைவால் உண்டாகும் தாக்கமே முதன்மைப்படுகிறது. அதேபோல தசரதனின் மரணத்தைவிட அது வந்ததற்கான காரணமே முதன்மைப்படுகிறது. அனுமானைப் பொறுத்தளவில் இராவணன் எதிரி.

ஆனால், இவ் இசை நாடகத்தில் இராவணன் பாடும் போது அனுமான் அதை இரசித்து தாளம் போடுவார். நெறியாளரின் வியாக்கியானப்படி இராவணன் இசைப்பிரியன். அதேவேளை, இசைப்பவர். அவ்வாறே அனுமனும் "சொல்லினன் செல்வர்" இவ்விருவரும் பாடலோடு சந்திக்கும் கணத்தில் எதிரியின் இசையை தன் காரியத்தோடு கூடவே அனுமன் நயக்கும் பாங்கு மனிதத்துவப்படியும் தர்க்கப்படியும் சரியாகவே இருக்கிறது. சூர்ப்பனகை இராமன் மீது கொண்ட அதீதக்காதலை குறியீட்டுப் பாங்காக இராமனது வில்லை அணைத்து அளைவதன்மூலம் காட்சிப்படுத்தியதும் அதே வில்லை மாசுற்ற ஒரு பொருளைத் தூக்கிச் செல்வது போல் இராமன் கொண்டு செல்வதும் மனித நிலைப்படுத்திய நேர்மையான யதார்த்த வாழ்வைப் பிரதிபலித்தது.

அதேபோல சொல்லில் கடுமை இருந்தால் அதனைப் பாடும், அல்லது பேசும் தொனியில் அதன் கடுமையைக் குறைத்து மிருதுவை கையாண்டது மிகச் சிறப்பான அம்சமாகும். அதாவது நாடகம் இங்கு தீவிரத்திற்கு அப்பால் தனித்துவத்துடன் எல்லாவற்றையும் அணுகுதல் என்பதை வேண்டுகிறது.

உதாரணமாக சீதை இராவணனைப் பாட்டால் ஏசும் போது "நின்ற நிலைக்கே தப்பி அப்புறம் போடா" என்ற பாடலில் "போடா" என்ற சொல் அழுத்தப்படவில்லை: பொதுவாகவே இவரது நெறியாள்கையில் இதனைக் கையாள்வது வழக்கம்." இன்னும், சிறு பிள்ளைபோல்" என்ற பாடல் செயல் வடிவமைக்கப்பட்ட முறை பாத்திரமூடான நாடக பண்பு சார்ந்தது.

இராமன் காடாளப் பணிக்கப்பட்டதும் ஓடோடி பரதன் இராமனிடம் வருகிறான்.

அத்தருணத்தில் இலட்சுமணன் மிகுந்த கோபத்தில் பரதனை திரும்பி பார்க்காது முகம் நிற்றலும் பின் மிகுந்த நேரமெடுத்து பரதனின் காலில் விழுதலும் நல்ல மேடைப்பண்போடு வெளிப்பட்டிருந்தது. அதாவது இராமாயண இலக்கியம் நாடக வரங்க நிலைப்படுத்தப்பட்டிருந்தது. (தொடரும்)

க.ரதிதரன்

# வாகன வரி அதிகரிக்கப்பட்டமைக்கு த.பே.உரிமையாளர் சங்கம் வரவேற்பு

(கொழும்பு)

வாகன இறக்குமதிக்கான வரி அரசாங்கத்தினால் அதிகரிக்கப்பட்டமைக்கு இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் வரவேற்பு தெரிவித்துள்ளது. அத்துடன் பொதுப்போக்குவரத்து துறையை நவீனப்படுத்துமாறும் அரசாங்கத்திடம் அச்சங்கம் கோரியுள்ளது.

கடந்த வருடம் எந்த கட்டுப்பாடும் வரி அதிகரிப்புமின்றி ஆயிரக்கணக்கான வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன கூறினார். சிங்கப்பூர் போன்ற நாடுகளில் ஒருவர் வாகனமொன்றை வாங்குவதற்கு பல வருடங்கள் காத்திருக்க வேண்டும்.

இலங்கையில் பொதுப்போக்குவரத்து சேவை மோசமடைந்துள்ள நிலையில் மக்கள் மாற்றுவழிகளை நாட வேண்டியுள்ளது.

அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக சொந்த வாகனங்களை கொண்டு வர நேரிடலாம். பொதுப் போக்குவரத்துச் சேவை பலமாக இருந்தால் இதுபோன்று ஆயிரக்கணக்கான வாகனங்கள் தினமும் வீதிக்கு வரமாட்டா என அவர் கூறினார்.

இலங்கையில் மாகாண போக்குவரத்து அமைச்சர்கள் உட்பட 11 போக்குவரத்து அமைச்சர்கள் உள்ளனர்.

ஆனால் பொதுப்போக்குவரத்து சேவையை முன்னேற்றுவதற்கு அவர்கள் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை எனவும் அவர் கூறினார். (அ-2)

# அரசிடம் பொருளாதார கொள்கை கிடையாது

## ஹர்ஷ டி சில்வா எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு தெளிவாக பொருளாதாரக் கொள்கை எதுவும் கிடையாது என ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

பொருளாதாரம் மற்றும் வெளிவிவகாரத் துறை தொடர்பில் அரசாங்கம் தெளிவான கொள்கைகளை பின்பற்றத் தவறியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் தொகையைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் அரசாங்கம் திடீரென அண்மையில் சில நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக வாகன மற்றும் மதுபான வரி சர்வதேச நாணய நிதியத்தை திருப்திப்படுத்தும் நோக்கில் விதிக்கப்பட்டதா என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பொருளாதார ரீதியாக பாதக நிலைமைகளை ஏற்படுத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

# இ.போ.சபை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை

(பூநகரி)

கிளிநொச்சி இலங்கை போக்குவரத்துச் சாலையை சேர்ந்த 60இற்கு மேற்பட்ட ஊழியர்களுக்கு கடந்த இரு மாதங்களாக அவர்களுக்கு உரிய சம்பளம் வழங்கப்படவில்லை யென தெரிவிக்கப்படுகிறது. கடந்த பெப்ரவரி, மார்ச் மாத சம்பளங்களே இதுவரை வழங்கப்படவில்லை.

இங்கு பணியாற்றுபவர்களில் 95 வீதத்தினர் வெளிமாவட்டங்களை சேர்ந்தவர்கள் ஆவர். புதுவருடம் நெருங்கிவரும் இவ்வேளையில் கடந்த மாதச் சம்பளங்கள் வழங்கப்படாமையினால் தாமும் தமது குடும்பத்தினரும் பெரும் நெருக்கடி நிலைக்கு தள்ளப்பட்டதாக தெரிவித்துள்ளனர். (அ-3-84)

# முல்லை.மாவட்ட பிராந்திய ஆணையாளர் நியமனம்

(புதுக்குடியிருப்பு)

முல்லை.மாவட்ட பிராந்திய ஆணையாளராக சிவப்பிரகாசம் சிவஜெயந்தன் கடந்த திங்கட்கிழமை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் வடக்கு, கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாண திட்டத்தின் (NEHRP) பிரதித்திட்டப் பணிப்பாளராக கடமையாற்றி வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-251)




# மூன்று அபாய கனவுகள்

## அம்புலி மாமா கதைகள்



கோகர்ண ராஜ்யத்து மன்னரான மணிகண்டர் பரந்த நோக்கும் நேர்மையான குணங்களும் தர்ம சிந்தனையுமுள்ளவர்! சிறந்த பக்திமான்! சாது, சந்நியாசிகளை மிகவும் மதித்துப்போற்றுபவர்! ஒருநாள் அவருடைய அரண்மனைக்கு ஜடாதரர் என்ற முனிவர் வருகை புரிந்தார். மணிகண்டர் அவரை நன்கு உபசரித்தார். அதனால் மனம் மகிழ்ந்த ஜடாதரர் மன்னரை மனதார ஆசீர்வதித்துவிட்டு “மணிகண்டா! நீ இன்று இரவு தொடங்கி தொடர்ந்து மூன்று இரவுகள் விபரீதமான கனவுகளைக் காண்பாய்! அவை உனக்கு வரப் போகும் அபாயத்தைச் சூசகமாக உணர்த்தும். அதற்கேற்றாற் போல் நீ சமயோசித புத்தியுடன் நடந்து கொண்டால் வரப் போகும் அபாயங்களிலிருந்து தப்பலாம்!” என்று கூறிவிட்டுச் சென்றார்.

முனிவரின் எச்சரிக்கையைக் கேட்டு பதறிய மன்னர் தன்னுடைய மந்திரிகளை அழைத்து அவர்களிடம் அனைவற்றையும் கூறி அதைத்தடுக்கும் வழியைப் பற்றிக்கேட்டார். விவேகன் என்ற மந்திரி, “மகாராஜா! கனவுகளே தோன்றாமல் தவிர்த்து விட்டால் பின்னர் அபாயமே ஏற்படாது. ஆகவே, நீங்கள் இன்று முதல் மூன்று இரவுகள் உறங்காமல் விழித்திருங்கள்!” என்றார்.

மன்னருக்கு வேறு எதுவும் யோசனை தோன்றாததால் விவேகன் கூறியவாறே செய்யத் தீர்மானித்தார். ஆனால், முதல் நாள் இரவு முழுவதும் சிரமப்பட்டு சதுரங்கம் விளையாடி உறங்காமலிருந்தும் விடியும் சமயத்தில் சற்றே கண்ணயர்ந்து விட்டார். அந்தச் சிறிதுநேர உறக்கத்திலேயே அவருக்கு ஒரு கனவு உண்டாகி விட்டது.

தான் ஒரு காட்டினுள் இருப்பது போலவும் தன்னை நோக்கி ஒரு நாகபாம்பு சீறிப்பாய்வதையும் கண்டார். மறுநாள் இரவு அவர் பாட்டுக்கேட்டுக் கொண்டே தூங்காமல் இருக்க முயற்சி செய்தார். ஆனால் அன்றும் சிறிது நேரம் தன்னை அறியாமல் உறங்கிப் போனார். கனவில் வானிலிருந்து இடியும் மின்னலுமாக அவரைத் துரத்தி வந்தது. உடனே மன்னர் விழித்துக் கொண்டார்.

மூன்றாவது இரவில் அவர் ராஜ குருவை அழைத்து புராணக் கதைகளைக் கேட்டுக் கொண்டிருக்க இடையில் அமர்ந்தவாறே உறங்கிப் போனார். அன்று கனவில் அவரை ஒருசிங்கம் துரத்த அவர் ஓடிச் சென்று ஒரு குளத்தில் குதித்தார். அந்தக்குளம் முழுவதும் இரத்தம் நிரம்பியிருந்தது. குளத்தில் மூழ்கி அவர் மூச்சுத் திணறும்போது அவருடைய மகள் மணிமேகலை அவர் கையைப் பிடித்து மேலே தூக்கி



விட்டாள்.

மறுநாள் காலை மந்திரிகளை அழைத்த மன்னர், அதுவரை தான் கண்ட கனவுகளைக் கூறி அவற்றின் விளக்கம் கேட்டார். நீண்ட நேரம் ஆலோசனை செய்த மந்திரிகள் மன்னருக்கு பாம்பினால் அல்லது மின்னலினால் அல்லது சிங்கத்தினால் ஆபத்து நேரிடப் போகிறது என்றும் ஆகையால் மன்னர் அரண்மனையை விட்டு எங்கேயும் வெளியே செல்லக்கூடாது என்றும் அறிவுரை கூறினர்.

அதைப்பற்றியே யோசித்துக் குழப்பத்தில் ஆழ்ந்திருந்த மன்னரிடம் ஒருநாள் சிவா என்ற இளைஞன் வந்தான். அவன் மன்னரை வணங்கிவிட்டு, “மகாராஜா! நான் அறிவு ஆற்றல் படைத்தவன்! ஆனால் என்னுடைய திறமையை இதுவரை வெளிப்படுத்த வாய்ப்புக் கிடைக்கவில்லை. உங்களுடைய கனவுகளின் உட்பொருளைப் பற்றிய என் கருத்தை வெளியிட அனுமதித்தால் நான் ஓர் அறிவாளி என்று வெளி உலகுக்குக்காட்ட எனக்கு வாய்ப்புக் கிடைக்கும்!” என்றான்.

மன்னனும் ஜடாதர முனிவர் தனக்கு விடுத்த எச்சரிக்கை பற்றியும் அதன்பின்பு அவர் கூறியது போலவே தனக்குத் தொடர்ச்சியாகத் தோன்றிய விபரீதக் கனவுகளையும் அவனிடம் விளக்கிக் கூறினார்.

அதைக் கவனமாகக் கேட்ட சிவா, “மகாராஜா! நீங்கள் கண்ட கனவுகளுக்கு உட்பொருள் உள்ளது. முதல் இரண்டு கனவுகளின் சூசகமான உட்பொருளை நான் விளக்குகிறேன். அவை சரியாக அமைந்தால் மூன்றாவது கனவையும் விளக்குகிறேன்” என்றான்.

மன்னர் சரியென்றதும் சிவா, “மகாராஜா! தங்களுடைய முதற் கனவில் ஒரு நாகம் துரத்தியது. நாகப்பாம்பு தனக்கு இழைக்கப்பட்ட கொடுமைக்கு வஞ்சம் தீர்க்கும் சுபாவம் உடையது. உங்கள் கனவின் உட்பொருள் உங்களால் தண்டிக்கப்பட்ட ஒருவன் உங்களைப் பழிதீர்க்க திட்டம் வகுத்துள்ளான். நீங்கள் அவனை உடனடியாகக் கண்டுபிடித்து சிறையில் அடைக்கவேண்டும். இரண்டாவது கனவில் விண்வெளியிலிருந்து மின்னல் இறங்கிவந்து உங்களைத் தாக்க முயற்சித்தது. அதாவது உங்களுடைய பகைவனான அயல் நாட்டு மன்னன் உங்கள்மீது படையெடுக்கத் திட்டம் தீட்டுகிறான் என்பதே உட்பொருள்!” என்றான்.

அதைக்கேட்ட மன்னர் பிரமித்துப் போனார். சிவா கூறுவது சரியாக இருக்கும் என்று அவருக்குத் தோன்றியது. யோசித்துப் பார்த்ததில் சமீபத்தில் கொள்ளையர் தலைவன் பைரவனை சவுக்கடி தந்து தண்டனை கொடுத்தது நினைவிற்கு வந்தது. உடனே காவலர்களை அழைத்து பைரவனை மீண்டும் கைது செய்ய உத்தரவிட்டார். அவனை நையப்புடைத்து விசாரித்ததில் மன்னரைக் கொலை செய்யச் சதித்திட்டமிட்டு ஒரு விஷப் பாம்மை அவருடைய படுக்கையறையில் விட்டிருந்தது தெரியவந்தது. இதன் மூலம் அவன் சதித்திட்டம் தக்க சமயத்தில் முறியடிக்கப்பட்டது.

தனது இரண்டாவது கனவின் விளக்கம் உண்மையா என்று அறிய ஒற்றர்களை அண்டை அயல் ராஜ்யங்களுக்கு அனுப்பினார். அண்டை ராஜ்யமான சிங்கபுரியின் மன்னன் விக்கிரமசேனன் தங்கள்மீது போர் தொடுக்க இரகசியமாகத் திட்டமிட்டிருப்பதை ஒற்றர்கள் மூலம் அறியப்பெற்ற மன்னர் திகைத்துப் போனார்.

ஆகையால் அவர் சிவாவிடம், “சிவா விக்கிரமசேனன் படை பலம் பொருந்தியவன்! எனக்கு இப்போதே அவன் திட்டம் தெரிந்தாலும் என்னால் எதுவும் செய்ய இயலாதே! என்ன செய்யலாம்?” என்று கவலையுடன் கேட்டார்.

“அதற்கும் ஒரு வழியுண்டு! அதைத்தான் தங்கள் மூன்றாவது கனவு விளக்குகிறது. கனவில் தாங்கள் கண்ட சிங்கம் சிங்கபுரி மன்னனைக் குறிக்கிறது. அவன் விரைவிலேயே படையெடுப்பது நிச்சயம்! அப்படிப்படையெடுத்தால் தாங்கள் கண்டிப்பாக படுதோல்வி அடைவீர்கள்! ஆனால் உங்களுடைய பெண் தோல்வியில் இருந்து உங்களைக் காப்பாற்ற முடியும்” என்றான்.

“எப்படி?” என்று மன்னர் ஆவலுடன் கேட்டார். “சிங்கபுரி மன்னனுக்குத் திருமண வயதில் ஒரு மகன் உண்டு. அவனுடன் உங்கள் மகளை மணமுடித்தால் சிங்கபுரி மன்னன் உங்கள் சம்மந்தி ஆகிவிடுவார். பின்பு போரே நிகழாது” என்றான்.

அவனுடைய ஆலோசனையைக் கேட்டு மன்னர் உடனே தூதுவன்மூலம் ஒரு கடிதமும் இளவரசியின் ஓவியமும் அனுப்பினார். அதில் “நீங்கள் சம்மதித்தால் உங்கள் மகனை என் பெண்ணுக்கு மணமுடிக்க விரும்புகிறேன்” என்று எழுதியிருந்தார்.

கடிதத்துடன் இணைக்கப்பட்டிருந்த இளவரசியின் ஓவியத்தைக் கண்டவுடனேயே சிங்கபுரி



இளவரசன் தன் சம்மதத்தை தன் தந்தையிடம் தெரிவித்தான். தன் மகனின் விருப்பத்தையறிந்த விக்கிரமசேனன் மணிகண்ட மன்னருடன் போர் தொடுக்கும் திட்டத்தைக் கைவிட்டான். திருமணமும் விரைவில் இனிதே நடந்து முடிந்தது. சிவாவின் புத்திக்-கூர்மையினால் தனக்கு வரவிருந்த அபாயங்களிலிருந்து தப்பித்த மணிகண்டர் அவனை மிகவும் பாராட்டி பரிசுகள் பல அளித்து தன் பிரதம ஆலோசகராக நியமித்தார்.

# கிழக்கில் பதற்ற நிலையை உருவாக்க சிலர் முயற்சி

## அரியம் எம்.பி.குற்றச்சாட்டு

(மட்டக்களப்பு)

யுத்தம் நிறைவடைந்து இங்கு மக்கள் சுதந்திரமாக வாழ்கின்றனர் என்று இலங்கை அரசு சர்வதேசத் திடம் கூறிவருகின்றது. ஆனால் மறுபுறத்தில் மக்களைக் கடத்திச் செல்லும் நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன.

கிழக்கு மாகாணத் தில் மீண்டும் பதற்ற சூழ்நிலையை ஏற்படுத்த சிலர் முயற்சித்து வருகின்றனர் என தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளு மன்ற உறுப்பினர் பா.அரிய நேத்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு வாகரைப் பிர தேசத்தில் நேற்று முன்தினம் இரவு இளைஞர் ஒருவர் அவரது வீட்டி லிருந்து இனந்தெரியாத துப்பாக் கிதாரிகளால் கடத்திச் செல்லப்பட்ட நிலையில் பொலிஸார் மேற் கொண்ட தேடுதல் நடவடிக்கை யால் 3 நாட்களின் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரி வித்தவை வருமாறு,

வாகரை பால்சேனைக் கிராமத் தைச்சேர்ந்த 21 வயதுடைய இளை ஞர் ஒருவர் வீட்டிலிருந்தவேளை வாகனமொன்றில் வந்த ஆயுத தாரிகளால் கடத்திச் செல்லப்பட் டிருந்தார். கடத்திச் சென்றவர்கள் குறித்த இளைஞரை விடுவிப்ப தற்கு கப்பம் கோரியுள்ளனர். இந் நிலையில் 3 நாட்களின் பின்னர் கடந்த சனிக்கிழமை அந்த இளை ஞர் பொலிஸாரினால் மீட்கப்பட் டுள்ளார்.

பொலிஸார் சந்தேகத்தின் பேரில் சிங்களவர் ஒருவர் உட்பட மூவரைக் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கின்றனர். அத்துடன் தாம் மேற்கொண்ட புத்திசாதுரி யமான நடவடிக்கையால் குறித்த இளைஞர் மீட்கப்பட்டார் எனப் பொலிஸார் கூறுகின்றனர். ஆனால் இவ்வாறு கூறும் பொலிஸாருக்கு நான் சில விடயங்களைக் கூற விரும் புகிறேன்.


சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட ஆயுததாரிகள் மூவர தும் விபரங்களை பொலிஸார் வெளி யிட வேண்டும்.

அத்துடன் அவர்கள் எந்த அரசியல் கட்சியுடன் தொடர்புடைய வர்கள் என்பதை பொலிஸார் அம் பலப்படுத்த வேண்டும். ஏனெனில் அரசியல் கட்சியுடன் தொடர்பில் லாமல் அவர்கள் குறித்த இளை ஞரை ஆயுத முனையில் கடத்தியி ருக்கமாட்டார்கள்.

அதேவேளை கைது செய்யப் பட்ட மூவரையும் சட்டத்தின் முன்னி றுத்தி தக்க தண்டனையைப் பெற்றுக்கொடுக்க பொலிஸார் உதவ வேண்டும். இவ்வாறு பொலி ஸார் செயற்பாடுவார்களாயின் இந்தக் கடத்தல்களுக்கு முற்றுப் புள்ளி வைக்க முடியும்.

யுத்தம் நிறைவடைந்து இங்கு மக்கள் சுதந்திரமாக வாழ்கின்றனர் என்று இலங்கை அரசு சர்வதேசத் திடம் கூறி வருகின்றது.

ஆனால் மறுபுறத்தில் மக் களை கடத்தி செல்லும் நடவடிக் கைகள் இடம்பெறுகின்றன.



கிழக்கு மாகாணத்தில் இந்நி லைமை தொடருமானால் மீண்டும் பதற்றம் ஏற்படும். இந்தப் பதற்ற சூழ்நிலையை ஏற்படுத்த சிலர் முயற்சிக்கின்றனர் போலத் தெரி கின்றது என அவர் தெரிவித்தார். (அ-2)

## நாட்டுக்கூத்துப்போட்டி

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தின் வலய மட்ட தமிழ்த்தினப்போட்டி யின் நாட்டுக்கூத்துப்போட்டி நிக ழ்வு எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக் கிழமை காலை 8.30 மணிக்கு மு/ மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு மதி எல். மாலினி வெனிற்றன் அறி வித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யும் வலய மட்ட தமிழ்த்தினப் போட் டிகள் யாவும் காலை 8.30 மணி க்கு மு/மாங்குளம் மகா வித்தியால யத்தில் நடைபெறவுள்ளதாக அறி வித்துள்ளார். (அ-3-15)

# நல்லிணக்கஆணைக்குழுவின் அறிக்கை

# நாட்டுக்கு விரோதமானது அல்ல-ஐ.தே.க

கற்றுக்கொண்ட பாடங்கள் மற் றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை நாட்டுக்கு விரோதமா னது அல்ல என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பி னர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித் துள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழு இந்த நாட்டின் ஜனாதிபதியினால் நிறுவப்பட்டது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் நல்லிணக்க ஆணைக் குழு பரிந்துரைகளை அமுல்ப டுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது.

மனித உரிமை பேரவை பிரேர ணையை அமெரிக்காவின் நிலைப் பாடாக கருத முடியாது. அது ஐக்கிய நாடுகள் அமைப்பின் தீர்மான மாகும்.

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக பிரேரணை நிறைவேற் றப்படும் என ரொபேர்ட் ஓ பிளேக் இலங்கையில் வைத்து தெரிவித் தார்.

அரசாங்கம் அந்த எச்சரிக் கைய்யை சரியாக புரிந்து கொள்ள வில்லை என லக்ஸ்மன் கிரியல்ல குறிப்பிட்டுள்ளார்.

ஜெனீவா அமர்வுகள் தொடர் பில் நாடாளுமன்றத்தில் நடை பெற்ற விவாதத்தில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு தெரி வித்துள்ளார். (அ-2)

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

# வாழ்விலும் தாழ்விலும் உணர்வுகளை அடக்கியாள்வோம்



மனித ஆளுமையின் உணர்வு கள் மிக முக்கியமானவை. மனிதர் கள் வெறும் உடலும், மனமும் கொண்ட வர்கள் மட்டுமல்ல உணர்வுகளை கொண்டவர்கள். மகிழ்ச்சி, துயரம் , அச்சம் நம்பிக்கை, அவமானம், கவலை என பலவிதமான உணர்வு கள் நம்மை ஆட்கொள்கின்றன.

இயேசுவும் அனைத்து உணர்வு களையும் அனுபவித்தார். மகிழ்ச்சி; நம்பிக்கை, கவலையற்ற தன்மை , அமைதி போன்ற நேர்மறை உணர் வுகளோடு அச்சம், துயரம், அவமா னம், கோபம் போன்ற எதிர்மறை உணர்வுகளையும் அனுபவித்தார், ஆனால் ,இவை அவரைப் பாவத்திற்கு இட்டுச்செல்லாதபடி காத்துக் கொண்டார். வாழ்வில் இருந்ததுபோல இறப்பிலும் அவர் உணர்வுகளை அனுபவித்தார். தனது சாவு நெருங்கி வந்தபோது அவர் துயரமும் மனக்கலக்கமும் அடையத்தொடங்கினார். எனது உள்ளம் சாவு வருமளவுக்கு ஆழ்துயரம் கொண்டுள்ளது என்று அவரே ஒப்புக்கொண்டார்.

அருட் சகோதரர்
றமேஸ் அ.ம.தி

இருப்பினும் தனது உணர்வுகளையும் இறைவனிடம் கைய ளித்து மனநிறைவு அடைந்தார். இன்று எமது வாழ்வியல் அனுபவங்களை கண்ணுற்றால், நாம் வாழும் சமூகமும் அழிவதற்குக் காரணம் சுயநலம். எனக்கு என்ன இலாபம். எனக்கு என்ன தருவார்கள். நானும் என் னுடையவர்களும் மட்டுமே வாழவேண்டும், வளர வேண்டும் .இந்த சுயநலத்திற்கு அறுசுவை சேர்ப்பதாக அமைந்துவிடுகிறது பணம் அதோடு சேரும்போது. பணமும் சுயநலமும் எந்தப் பழி பாவத்திற்கும் தயாராகிறது.

இன்று எங்களுடைய உணர்வுகள், மனநிலை எத்தகையவை? பணத்திற்காக, சுயநலத்திற்காக, பெற்ற தாயை ,வளர்த்து உருவாக்கிய தகப்பனை , உறுதுணையாய் இருக்கும் உடன்பிறப்புகளை ஒதுக்க, ஒடுக்க, ஒழிக்க மிகச் சாதாரணமாக முன்வரும் மக்களாகவே நாம் செயற்படுகிறோம். காட்டிக்கொடுத்தவன் வாழ்ந்ததாக வரலாறு இல்லை. சுயநலவாதி சுயம் கண்டதாகச் சான்று இல்லை. பணத்திற்காக பண்பை, பண்பாட்டை பாசத்தை பரிதவிக்கவிட்டவன் பாராண்டதாக பாரம்பரியம் இல்லை. இத்தனையும் உணர்ந்தும் எமது உணர்வுகளை இறைமகிமைக்கும் மனித நல்வாழ்வுக்கும் பயன்படுத்த நாம் ஏன் பின்னிற்க வேண்டும்.

# பிரச்சினைக்கு தீர்வுகாணவேண்டுமென கோருவோர் வடக்கிற்கு செல்லுங்கள்

## கோத்தபாய அறிவுரை

(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண பிரதான அரசியல் கட்சிகள் வடக்கிற்கு செல்லவேண்டுமென பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வடக்கு மக்களை தேசிய கட்சிகளின் ஊடாக அரசியலுக்கு கொண்டு வரவேண்டும்.

தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பதாகத் தெரிவிக்கும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் புலம்பெயர் தமிழர்களும் சர்வதேசத்தில் இலங்கை தொடர்பில் பிழையான நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றன. இந்தப் பொய்களை வடக்கு அரசியல் கட்சிகளினால் மட்டுமே இல்லாதொழிக்க முடியும்.

அரசாங்கம் வடக்கில் பல அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித் துள்ளது. இந்த அபிவிருத்திப் பணிகளின் மூலமான நன்மைகளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அனுபவித்து வருகின்றது.

வடக்கு மக்கள் யுத்தத்தை விரும்பவில்லை. சமாதானம் ஏற்பட்டுள்ள நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகியன வடக்கு மக்கள் மத்தியில் செல்லவேண்டும். நாட்டை நேசிக்கும் அனைவரும் இதனைப் புரிந்துகொள்வார்கள்.

சர்வதேச ரீதியில் சிலர் செய்துவரும் பிரசாரங்களை முறியடிக்க முயற்சி எடுக்கவேண்டுமென பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார். (அ-2)

# தற்போது வரலாற்றில் மிகப்பெரிய பொருளாதார நெருக்கடி-ஜே.வி.பி

(கொழும்பு)

அரசாங்கம் பல்வேறு வழிகளில் புள்ளிவிபரங்களில் நாட்டின் அபிவிருத்தி பற்றி பிரசாரம் செய்தபோதிலும் உண்மையில் நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது என ஜே.பி.வி நாடா ளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய பொருளாதாரம் ஒன்றை கட்டியெழுப்புவதாக அரசாங்கம் பிரசாரம் செய்து வருகின்ற போதிலும் நாட்டில் அவ்வாறான ஓர் நிலைமை கிடையாது.

கடந்த காலங்களை விடவும் தற்போது உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சிய டைந்துள்ளது. அரசாங்கத்தின் பாரிய அபிவிருத்தி திட்டங்கள் மக்களுக்கு பாரிய பொருளாதார சுமையை ஏற்படுத்தியுள்ளது.

பெற்றுக்கொண்ட கடன்களை மீள செலுத்துவதில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளதாக அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (அ-2)

# எம்மிடையேயுள்ள நல்லுறவை தடுக்க சிலர் முயற்சிக்கின்றனர்

## அமைச்சர் சிதம்பரம் கவலை

(கொழும்பு)

இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளிடையே நீடிக்கும் நல்லுறவைத் தடுக்க சிலர் முயல்கிறார்கள். இவற்றைக் கடந்து தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என இந்திய மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

நடுக்கடலில் தமிழக மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து டில்லியில் அவர் நிருபர்களிடம் கூறியதாவது.

இந்தியக் கடல் எல்லையில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வரும் தமிழக மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினையைத் தீர்க்க மத்திய அரசு முயற்சி எடுத்து வருகின்றது. இது தொடர்பாக இந்திய, இலங்கை அரசுகள் மட்டத்தில் மட்டுமின்றி இரு நாட்டு மீனவர்கள் சங்கப் பிரதிநிதிகள் அளவிலும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகின்றது.

இரு தரப்பு மீனவர்களும் பிரச்சினையின்றி கடலில் மீன்பிடி தொழிலில் ஈடுபட வகை செய்யும் வரைவு அறிக்கையை தயாரித்துள்ளனர். அவை குறித்தும் விவாதிக்கப்பட்டு வருகின்றது. இந்த விபரம் மாநில அரசுக்கும் தெரியும்.

மீனவர்கள் பிரச்சினை சுமுகமாகத் தீர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால் இரு நாடுகளிடையே நீடிக்கும் நல்லுறவைத் தடுக்க சிலர் முயல்கிறார்கள். இவற்றைக் கடந்து தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும். இரு தரப்பு நாடுகளின் தகவல் பரிமாற்றத்திலும் எந்தப் பின்னடைவும் இல்லை.

இந்தியாவில் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதப் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாக இலங்கை நாளிதழில் வெளியான செய்தி ஆதாரமற்றது என்றார். (அ-2)

# நாட்டின் நெல் உற்பத்தியானது தன்னிறைவு அடைந்துள்ளது

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் நெல் உற்பத்தி தன்னிறைவைக் கண்டுள்ளது போல ஏனைய விவசாய உற்பத்திகளிலும் தன்னிறைவு காண வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

காலி மீனவ துறைமுகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள டின்மீன் தொழிற்சாலையை உத்தியோக பூர்வமாக நேற்று முன்தினம் மாலை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே இந்த கருத்தினை வெளியிட்டார்.

பாரிய நிதியினை செலவிட்டு எரிபொருட்கள் இறக்குமதி செய்கின்றோம். அதேபோல குரக்கன் போன்ற தானிய வகைகளையும் இறக்குமதி செய்கின்றோம். மீன் உற்பத்தியில் நாம் பிரச்சினையை எதிர்நோக்கவில்லை. ஆனால், டின்மீன்கள்ள இறக்குமதி செய்கின்றோம்.

இதனை மாற்றி மீன்டின் இறக்குமதியினை நாம் நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சோளம் போன்ற தானியங்களில் நாம் தன்னிறைவடைந்துள்ளது போல ஏனைய உணவுப் பொருட்களிலும் தன்னிறைவை காண வேண்டும். (அ-2)

# காணாமல்போன பெண் சடலமாக மீட்பு

(திருகோணமலை)

சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சொறிக்கல்முனை கிராமத்தின் நாணல் காட்டு பிரதேசத்தில் நேற்று முன்தினம் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

38 வயதுடைய 3 பிள்ளைகளின் தாயே சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஒருமாதத்திற்கு முன்பு காணாமல் போன பெண்ணின் சடலமே மீட்கப்பட்டுள்ளதாக பெண்ணின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# விவசாயிகளுக்கு விதை தானியம்

திவிநெகும திட்டத்தின் கீழ் வள்ளுவர்புரம் விவசாயிகளுக்கு மூன்றாம் கட்டமாக விதை தானியங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்விதை தானியங்கள் நேற்று செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு வள்ளுவர்புரம் கிராம சேவையாளர் பி.தேவதாஸ் தலைமையில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவ்விதைமூலம் அப்பகுதி விவசாயிகள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (3-260-252)

# 2012.04 05 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1614-வேர்ஜீனியாவில் அமெரிக்கப் பழங்குடியினளான போக்க ஹொண்டாஸ் ஆங்கிலேய குடியேற்றவாதியான ஜோன் ரோல்ஃப் என்பவரை திருமணம் புரிந்தாள்.

★ 1654-ஆங்கில டச்சுப் போரை முடிவுக்குக் கொண்டு வரும் பொருட்டு வெஸ்ட்மின்ஸ்டர் உடன்பாடு எட்டப்பட்டது.

★ 1792- அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் வோஷிங்டன் முதற்தடவையாக வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தினார்.

★ 1804- முதற்தடவையாக விண்கல் ஒன்று வீழ்ந்தது. ஸ்கொட்லாந்தில் பதிவானது.

★ 1879-பொலிவியா மற்றும் பெரு மீது சிலி போரை அறிவித்தது. பசுபிக் போர் ஆரம்பமானது.

★ 1897-கிரேக்கத்துக்கும் ஒட்டோமான் பேரரசுக்கும் இடையில் போர் ஆரம்பமானது.

★ 1930-மகாத்மாகாந்தி அரபிக் கடலின் குஜராத் கடற்கரையோரப் பகுதியான தண்டியில் உப்புச் சட்டத்தை மீறி உப்பைக் கையிலே அள்ளி எடுத்து வந்து தனது 241 மைல் நடைப் பயணத்தை முடித்தார்.

★ 1936-மிசிசிப்பியில் சுழற்காற்று தாக்கியதில் 233 பேர் உயிரிழந்தனர்.

★ 1942-இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியப் போர்க் கப்பல்கள் இலங்கையைத் தாக்கின. இரண்டு பிரித்தானியக் கப்பல்கள் மூழ்கின.

★ 1944-இரண்டாம் போர்: கிளெய்சோரா என்ற கிரேக்க நகரில் 270 உள்ளூர் மக்கள் ஜேர்மனியினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

★ 1945-பனிப்போர்: யோகொஸ்லாவியாவினுள் சோவியத் படைகள் தற்காலிகமாக நுழைவதற்கு அந்நாட்டு ஜனாதிபதி ஜோசப் டீட்டோ சோவியத் ஒன்றியத்துடன் உடன்பாடு செய்து கொண்டார்.

★ 1946-11 மாதங்கள் ஆக்கிரமிப்பின் பின்னர் சோவியத் படைகள் டென்மார்க் தீவான போர்ன்ஹோல்மை விட்டு விலகினர்.

★ 1949-இலினோய் மாநிலத்தில் மருத்துவமனை ஒன்றில் தீப்பிடித்ததில் 77 பேர் உயிரிழந்தனர்.

★ 1955-ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர் பதவியிலிருந்து வின்ஸ்டன் சேர்ச்சில் விலகினார்.

★ 1956-பிடெல் காஸ்ட்ரோ கியூபாவின் ஜனாதிபதியுடன் போரை அறிவித்தார்.

★ 1956-இலங்கைப் பொதுத் தேர்தலில் எஸ்.டபிள்யூ ஆர்.டி. பண்டார நாயக்க தலைமையிலான கட்சி வெற்றி பெற்றது.

★ 1957-இந்தியாவின் கேரளா மாநிலத்தில் பொதுவுடமைவாதிகள் ஆட்சியைக் கைப்பற்றினர். ஈ.எம்.எஸ்.நம்பூதிரிபாத் முதலமைச்சரானார்.

★ 1964-பூட்டான் பிரதமர் ஜிக்மி டோர்ஜி சுட்டுக் கொல்லப்பட்டார்.

★ 1971-இலங்கை அரசிற்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியினர் நாட்டின் தென்பகுதிகளில் ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

★ 1976-மக்கள் சீனக் குடியரசில் தியனன்மென் சதுக்கத்தில் மாபெரும் ஆர்ப்பாட்ட நிகழ்வு இடம் பெற்றது.

★ 1998-அக்காஷி கைக்கியோ பாலம் உலகின் மிகப் பெரிய தொங்கு பாலம் ஜப்பானில் 3.8 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் அமைக்கப்பட்டது.

### பிறப்பு

★ 1929-Lvar Giaever, நோபல் பரிசு பெற்ற நோர்வே இயற்பியலாளர்

### இறப்புக்கள்

★ 1967-ஹேர்மன் முல்லர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி.1890)

★ 1962-ஆனந்த சமரக்கோன், சிங்கள இசைக் கலைஞர், பாடலாசிரியர் (பி.1911)

★ 1992-சாம் வோல்ற்றன், அமெரிக்க விற்பனை நிறுவநர், வோல்மார்ட் நிறுவநர் (பி.1918)


★ 2005-சோல் பெலோ, நோபல் பரிசு பெற்ற கனேடிய எழுத்தாளர் (பி.1915)



★ 1933-தமிழ் இலக்கிய விமர்சகரும் திறனாய்வாளருமான க.கைலாசபதியின் பிறந்த தினம். (இ.1982)

# அதிசய உலகம்...


## அசுர வேகத்தில் காரினைப் செலுத்தி முறியடிக்கப்பட்ட உலக சாதனை



உலக சாதனைகள் என்றாலும் அவை என்றோ ஒருநாள் முறியடிக்கப்படக் கூடியவையே. அதற்கிணங்க சீன் ஹென்னடி என்ற 29 வயது கார்ப் பந்தய வீரர் அசுர வேகத்தில் காரைச் செலுத்தி உலக சாதனையை முறியடித்துள்ளார்.

இம் முயற்சியை டெக்சாஸ் மாகாணத்தில் மேற்கொண்ட ஹென்னடி சுமார் மணிக்கு 257 மைல் வேகத்தில் காரைச் செலுத்தி முந்தைய சாதனையை மணிக்கு 250 மைல் என்ற சாதனையை முறியடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## உலகிலேயே அதிக வயதான ஆடு



இங்கிலாந்து நாட்டின் வடமேற்கு கடலோரப் பகுதியில் ஜஸ்லெஸ் என்ற குட்டித் தீவு இருக்கிறது. இங்கு வசிக்கும் மாசிவெர் என்பவர் செம்மறி ஆட்டு பண்ணை வைத்துள்ளார். அந்த பண்ணையில் 25 வயதுள்ள செம்மறி ஆடு ஒன்று இருந்தது. அந்த ஆடு மேய்ச்சலுக்கு சென்ற போது சுமார் 150 அடி உயர முள்ள பாறையில் இருந்து தவறி விழுந்து இறந்துவிட்டது. இந்த சம்பவம் மாசிவெரை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

அவர் கூறுகையில், இந்த ஆட்டை மிகவும் நேசித்தேன். பொதுவாக ஆடுகள் 12 ஆண்டு களுக்கு மேல் வாழ்வது கடினம். ஆனால் இந்த ஆடு 25 வயது வரை நன்றாக இருந்தது.

உலகிலேயே அதிக காலம் வாழ்ந்த ஆடு இதுவாக இருக்கும் என்கிறார். தனது கணனியில் பதிவு செய்து வைத்திருக்கும் அதன் படத்தை போட்டு பார்த்து மனதை தேற்றிக் கொள்கிறார்.

## சாதனை படைத்த ஊனமுற்ற இங்கிலாந்து இராணுவவீரர்கள்



சாதனைகள் நிகழ்த்த ஊனம் ஒரு தடை அல்ல என்பதை பலர் நிரூபித்து இருக்கிறார்கள். அத்தகையதோர் முயற்சியில் இங்கிலாந்தைச் சேர்ந்த ஒரு குழுவினர் தற்போது ஈடுபட்டுள்ளனர். அதாவது இவர்கள் 29035 அடி உயரமுள்ள எவரெஸ்ட் சிகரத்தில் ஏறுகிறார்கள்.

இந்த குழுவில் இங்கிலாந்தைச் சேர்ந்த இராணுவ வீரர்கள் சிலர் இதில் இடம்பெற்றுள்ளனர். இவர்களில் 5 பேர் போரின் போது உடல் ஊனமுற்ற இராணுவ வீரர்கள் ஆவர். இவர்களில் ஒருவர் ஒரு கை இழந்தார். இவர்களின் இந்த முயற்சி வெற்றி பெற ஏராளமானவர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

## மிக நீளமான பாதமுடைய மனிதன்




Carl Griffths இவருக்கு (வயது19) .இவரின் பாதம் தான் பிரித்தானியாவிலேயே மிக நீளமான பாதம். பாதத்தின் நீளம் 21(Feet) என்ற அளவில் இருக்கிறது. சாதாரண மனிதன் சராசரி பாதம் 9. இவருக்கு காலணி வாங்குவது மிக கடினமானது. இவர் அதற்காக 50 ஸ்டேலிங்பவுண்களைச் செலவளிக்கிறாராம்.

## கூட்டாக வாழும் பரம எதிரிகள்



எதிரிகள் என்றாலே ஒன்றாக சேர்ந்து வாழ்வது என்பது கடினமாக காரியமாகும். எனினும் அவ்வாறு சேர்ந்து வாழ்வதைப் பார்க்கும் போது அதனால் ஏற்படும் ஆனந்தத்திற்கு அளவே இல்லாமல் தான் இருக்கும். அதிலும் ஒன்றை ஒன்று பிடித்து உண்ண நினைக்கும் விலங்குகள் ஒன்றிணைந்தால் சொல்லவா வேண்டும். ஆம், கழுகு, நரி என்பவற்றுடன் இரண்டு பூனைகளும் இணைந்து ஒரு கூட்டுக் குடும்பத்தினைப் போன்று ஒன்றாக சேர்ந்து வாழ்கின்றன. அவ்வாறு சேர்ந்து வாழ்வதைப் படத்தில் காணலாம்.

## மிக நீளமான காதையுடைய நாய்



இந்த நாய்க்குப் பெயர் டிக்கர். படத்தைப் பார்த்தாலே இந்த நாயின் சாதனை தெரிந்துவிடும். நாய்களுள் மிக நீளமான காதுகளை உடைய நாய் இது. வலக்காதின் நீளம் 13.75 அங்குலம். இடக்காதின் நீளம் 13.5 அங்குலமாகும்.


## நிறம் மாறக் கூடிய கார்



கார்கள் வாங்க முடியாதது தான். ஆனால் ஒரே காரின் நிறங்களை நமக்கு விரும்பிய வர்ணத்தில் மாற்ற முடியும். ஆம் பார்வையாளர்கள் விரும்பியவாறு நிறத்தை மாற்றக் கூடிய கார்களை Peugeot நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

# ஒப்பந்தங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தால் நாட்டிற்கு இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது

## சுரேஸ் எம்.பி. கூறுகின்றார்



(கொழும்பு)

சிங்கள மக்களை பாதுகாக்கும் நோக்கில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே முதலில் ஜெனீவா சென்றார் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

வாசுதேவ நாணயக்கார, மஹிந்த ராஜபக்ஷ ஆகிய இருவருமே சிங்கள மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக முதலில் ஜெனீவா சென்றார்கள் என கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

11 ஆயிரம் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

எனினும் தொடர்ச்சியாக கடத்தல்கள், கப்பம் கோரல்கள் இடம்பெற்று வருகின்றன. ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் பொறுப்புக்களை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பண்டா- செல்வா, டட்லி-செல்வா, இந்திய-இலங்கை ஒப்பந்தங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தால் இன்றுநாட்டில் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது என சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். (அ-2)

# பாதுகாப்புக் கடமையில் 6ஆயிரம் மேலதிக பொலிஸார்

(கொழும்பு)

தமிழ்- சிங்கள புத்தாண்டை முன்னிட்டு கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் விசேட பாதுகாப்பு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் தற்பொழுது பாதுகாப்பு நடவடிக்கைளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மேலதிகமாக ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

புத்தாண்டு கொள்வனவு நடவடிக்கைகளுக்காக கொழும்புக்கு வருகை தரும் பொதுமக்களின் பாதுகாப்பை கருத்திற் கொண்டே இந்த விசேட பாதுகாப்பு அமுல்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.


கொழும்பைப் போன்று அதனை அண்டிய நகர புறங்களிலும் இந்த விசேட பாதுகாப்பு திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை மதுபோதை பாவனை போன்ற செயற்பாடுகள் தொடர்பாக அடுத்த வாரம் தொடக்கம் விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

கொள்ளையர்கள், பிட்பொக்கெட்காரர்களிடமிருந்து தமது பணங்களையும் பொருட்களையும் பாதுகாப்பாக வைத்துக்கொள்வது தொடர்பில் பொதுமக்கள் விழிப்புடன் செயற்படுவதுடன் அது தொடர்பில் அருகிலுள்ள பொலிஸாரிடம் உடனடியாக தெரியப்படுத்துமாறும் பொதுமக்களை பொலிஸ் திணைக்களம் வேண்டிக்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# நாடு அபிவிருத்தியில் முன்னேறுவதற்கு அரசியல்வாதிகளும் ஒத்துழைக்க வேண்டும்

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

திட்டமிட்ட அடிப்படையில் அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்வது அரசியல் வாதிகளினதும் அரச அதிகாரிகளினதும் பொறுப்பும் கடமையாகுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாத்தறை மாவட்ட அபிவிருத்திக்கூட்டமும் மாத்தறை மாவட்டச்செயலக கட்டடத்தின் திறப்பு விழாவும் நேற்றுமுன்தினம் மாத்தறையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு தலைமைதாங்கி உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை அபிவிருத்தியில் கட்டியெழுப்பும் பொறுப்பு அரசாங்கத்துக்கு மட்டுமின்றி எதிர்க் கட்சிக்கும் உள்ளது. மக்கள் தேவைகளையும் எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்றுவதில் திட்டமிட்ட செயற்பாடுகள் அவசியம்.

அரச அதிகாரிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் இக்காலகட்டங்களில் பாரிய பொறுப்புக்கள் உள்ளன. நாட்டின் சகல பகுதிகளிலும் சகல துறைகளிலும் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

விவசாயம், நீர்ப்பாசனம், கல்வி, சுகாதாரம் என அபிவிருத்தி செயற்பாடுகள் முன்னேற்றமடைந்துள்ளன.

கல்வித்துறை, உயர்கல்வித்துறை போன்றே ஏனைய சகல துறைகளும் முன்னேற்றமடைந்து வருகின்ற நிலையில் சமூக, பொருளாதார வளர்ச்சியுடன் இணைந்ததாக திட்டமிட்ட செயற்பாடுகள் முக்கியமாகும்.

இதற்கு அரச அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் தம்மைத் தயார்ப்படுத்த வேண்டும். நாம் ஏற்றுக்கொண்டாலும் இல்லாவிட்டாலும் சமூக, பொருளாதார முன்னேற்றம் காணப்படுகின்றது.

அரச அதிகாரிகள் ஒன்றை உணர வேண்டும். அரச ஊழியர்களுக்கான சம்பளம், ஓய்வூதியம் என அரசாங்கம் பெருமளவு நிதியை செலவிட்டு வருகின்றது.

இந்நிலையில் எமது பொறுப்பும் கடமையும் எதுவென உணர்ந்து அரச அதிகாரிகள் செயற்படுவது முக்கியம்.

திட்டமிட்டு செயற்பட்டால் விரயங்களைக் குறைக்க முடியும் என்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

மக்களின் தேவைகள், எதிர்ப்பார்ப்புக்களை கருத்திற்கொண்டு சகலரும் இணைந்து செயற்படுவது சிறந்தது எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (அ-2)

# மருத்துவபீட மாணவர்கள் 6 பேர் பொலிஸாரால் கைது

காலி- கராப்பிட்டிய மருத்துவ பீடத்தின் மூன்றாம் வருட மாணவர் ஒருவரைத் தாக்கியதாக கூறப்படும் சம்பவத்துடன் தொடர்புடைய ஆறு மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். தாக்குதலுக்கு இலக்கான மாணவர் தற்போது கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன குறிப்பிட்டார்.

இந்தத் தாக்குதலுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் மாணவர்கள் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. மூன்றாம் வருட மாணவர்கள் சிலரே தனிப்பட்ட காரணங்களுக்காக குறித்த மாணவரைத் தாக்கியுள்ளதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ-2)

# புனர்வாழ்வளிக்க செயற்றிட்டம்

புனர்வாழ்வளிக்கப்படாத தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கான செயற்றிட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் அனைத்து பகுதிகளிலும் புனர்வாழ்வளிக்கப்படாதவர்கள் என அடையாளம் காணப்பட்ட உறுப்பினர்கள் புனர்வாழ்வளிக்கப்படவுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வனிகசூரிய குறிப்பிட்டுள்ளார்.

இதுவரையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் 11 ஆயிரத்து 400 முன்னாள் உறுப்பினர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# பிரபாகரனின் கோரிக்கைகளை எதிர்க்கட்சிகள் நிறைவேற்ற முயற்சி

எதிர்க்கட்சிகள் நாட்டுக்கு எதிராக செயற்பட்டு வருவதாக வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.ஜெனீவா மனித உரிமைப்பேரவையில் நாட்டுக்கு எதிராக பிரயோகிக்கப்பட்ட அழுத் தங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெற்றிகரமாக முறியடித்தார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனினால் நிறைவேற்றிக்கொள்ள முடியாதவற்றை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவைக் கொண்டு எதிர்க்கட்சிகள் நிறைவேற்ற முயற்சிக்கின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவை தொடர்பில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. மற்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றின் நடவடிக்கைகளை அமைச்சர் கடுமையாக விமர்சனம் செய்துள்ளார். வெளிநாட்டு சக்திகளின் உதவியுடன் நாட்டை ஆட்சிப் பொறுப்பை கைப்பற்ற சில சக்திகள் முனைப்பு காட்டி வருவதாக குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# கிணற்றில் சிசுவை வீசிய தாய் கைது

களுத்துறை தொடங்கொடை, கதனகொட பிரதேசத்தில் ஒரு மாதப் பெண் சிசுவொன்றை கிணற்றில் வீசியதாக கூறப்படும் 17 வயதான தாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீட்டில் எவரும் இல்லாத சந்தர்ப்பத்தில் குறித்த தாயினால் குழந்தை கிணற்றுக்குள் வீசப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

பின்னர் அவர் கூக்கிரலிடும் சத்தம் கேட்டு பிரதேசவாசிகள் சிசுவை மீட்டு நாகொடை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றுள்ளதாகவும் பின்னர் குழந்தை உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-2)

# இனந்தெரியாதோரின் அட்டகாசம் அதிகரிப்பு

## அச்சத்தில் உறைகின்றது நெட்டாங்கண்டல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் சறாட்டிகுளம் கிராமத்தில் ஆண் துணையில்லாத வீடுகளில் இனம்தெரியாதோரின் தொல்லை அதிகரித்திருப்பதாக சுட்டிக்காட்டியுள்ள பிரதேசமக்கள் நேற்றுமுன்தினம் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

பாண்டியன்குளம் நெட்டாங்கண்டல் பிரதேசங்களிலிருந்து 6 கிலோமீற்றர் காட்டுப்பகுதிக்கு அப்பாலுள்ள இந்தக் கிராமத்தில் சுமார் 70 குடும்பங்கள் வரை மீள்குடியேறி வாழ்ந்து வருகின்றனர்.

அடிப்படை வசதிகள் மற்றும் வெளித் தொடர்புகள் அதிகமில்லாத இந்தக் கிராமத்தில் அண்மைக் காலமாக இவ்வாறான சம்பவங்கள் அதிகமாக இடம்பெற்று வருவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

இக்கிராமத்திலுள்ள இளம் விதவைப் பெண்ணொருவரின் குடிசைக்குள் இனந்தெரியாதோர் புகுந்துள்ளனர். இதனை அவதானித்த குறித்த பெண் கூச்சலிட்டுள்ளார்.

இதனையடுத்து எரிந்துகொண்டிருந்த விளக்கை தூக்கி எறிந்து விட்டு காட்டுப்பக்கம் ஓடிச் சென்று மறைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து பல தடவை பொலிஸாருக்கும் இராணுவத்தின் தலைமை அதிகாரிக்கும் தெரியப்படுத்திய போதும் இது வரை ஆக்கபூர்வமான நடவடிக்கை எவையும் எடுக்கப்படவில்லை என அப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான சம்பவங்களினால் இரவு வேளைகளில் மிகவும் அச்சத்துடனே வாழ வேண்டியுள்ளதாக அப்பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

(அ-2)

# இலங்கை மற்றொரு பிரேரணை கொண்டு வருவதை தவிர்க்க வேண்டும்

## மூத்தோர்களின் அமைப்பு தெரிவிப்பு

எம்.எஸ்.எம்.ஐயூப்

**இலங்கை அரசாங்கம் ஜெனீவாவில் மற்றொரு பிரேரணை கொண்டுவருவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என நெல்சன் மண்டேலா தலைமையிலான பன்னாட்டு உலகத்தலைவர்களைக் கொண்ட மூத்தோர்களின் அமைப்பு அண்மையில் கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.**



நெல்சன் மண்டேலா

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பாக அமெரிக்கா கொண்டு வந்த பிரேரணை மூலம், இலங்கை அரசாங்கம் மனித உரிமை விடயத்தில் தமக்கு எதிரான சர்வதேச விசாரணையை தவிர்த்துக்கொண்டது. இருப்பினும் அமெரிக்க பிரேரணை மனித உரிமை மீறல்கள் தொடர்பாக உள்நாட்டில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று கூறும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை அமுலாக்க வேண்டும் என்று வலியுறுத்துவதே அதற்குக் காரணமாகும்.

ஆனால், அதனால் வெளிநாடுகளின் நெருக்குதல் இத்தோடு முடிவடைந்ததாக அர்த்தமாகாது. ஏனெனில் அந்தப் பிரேரணை இலங்கைக்கு சில பொறுப்புக்களையும் வழங்கியிருக்கிறது. இலங்கை அரசாங்கம் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளில் அர்த்தமுள்ள சிபார்சுகளை நிறைவேற்றவேண்டும் என்பதும் அந்த சிபார்சுகளில் எந்தளவு நிறைவேற்றியிருக்கிறது, எதிர்காலத்தில் மேலும் என்னென்ன செய்யஇருக்கிறது என்பதைப்பற்றி கூடிய விரைவில்மனித உரிமைப்பேரவையில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்பதுமே அந்தப் பொறுப்புக்களாகும்.

அத்தோடு இலங்கையின் நடவடிக்கைகளை சர்வதேச ரீதியாக மேற்பார்வை செய்யவும் அந்தப்பிரேரணை வழிவகுத்துள்ளது. அதன்படி ஐ.நா. மனித உரிமை ஸ்தானிகராலயமும் பேரவையின் 22 வது அமர்வின்போது இலங்கை இந்த விடயத்தில் என்ன செய்திருக்கிறது என்பதைப்பற்றி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். எனவே இத்தோடு கதை முடிந்தது என்று எவராலும் கூறமுடியாது.

இலங்கை அரசாங்கத்திற்கு இது



ஒருவகையிலும் பிரச்சினையாக முடியாது. ஏனெனில், நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை அமுலாக்க முடியாது என ஒரு போதும் அரசாங்கம் கூறவில்லை. தாம் ஏற்கனவே நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபார்சுகளை அமுலாக்க ஆரம்பித்து விட்டோம் என்றும் அப்பணியை பூர்த்தி செய்ய தமக்கு அவகாசம் வேண்டும் என்றுமே இலங்கையின் அமைச்சர்கள் ஜெனீவாவில் வைத்து வாதிட்டனர். இப்போது அவர்கள் கேட்ட அவகாசம் கிடைத்திருக்கிறது .

ஆனால், இலங்கை அரசாங்கம் தாம் மனித உரிமைப்பேரவையில் தோல்வியடைந் ததாகவே கருதுகிறது. அல்லது அவ்வாறு காட்டுகிறது. போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றங்களைப்பற்றி சர்வதேச விசாரணையைக் கோரிய அத்தனை பேரினதும் இணக்கத்துடன் அச்சர்வதேச விசாரணையை தவிர்த்துக்கொண்டோமே என்ற விடயத்தை அவர்கள் கருத்தில் கொள்வதாகத் தெரியவில்லை. மனித உரிமைப் பேரவையில் நடைபெற்ற வாக்களிப்பின்போது தமக்கு சாதகமாக குறைந்த வாக்குகள் கிடைத்தது என்ற விடயத்திற்காக இலங்கையின் தலைவர்கள் அமெரிக்காவையும் இந்தியாவையுமும் குறைகூறுகிறார்கள். அதனால், கிடைத்த அரசியல் இலாபத்தைப்பற்றி அவர்கள் பேசுவதேயில்லை.


அவர்கள் அமெரிக்காவை விடவும் இந்தியாவையே குறை கூறுகிறார்கள். இந்தியா முன்கூட்டியே தமது முடிவை அறிவித்தமையே இலங்கைக்கு ஆதரவாக இருந்த பல நாடுகள் தமது முடிவையும் மாற்றிக்கொண்டன என வெளியுறவுத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூறியிருந்தார். அது உண்மைதான். ஆனால், தமது பிரேரணை தோல்வியடையும் என்ற நிலை நிச்சயமாக காணப்பட்டிருந்தால், அமெரிக்கா வேறு நாடுகள் மீது நெருக்குதலைக் கொடுத்திருக்கக் கூடும் அதேவேளை அமெரிக்க பிரேரணையின் காரத்தை இந்தியா குறைத்து இருக்கிறது என்பதைப் பற்றியும் அரசாங்கத்தின் தலைவர்கள் மௌனமாக இருக்கிறார்கள்.

எவ்வாறோ அமெரிக்கப் பிரேரணை இப்போது நிறைவேறிவிட்டது. இது கட்டாயம் செயற்படுத்த வேண்டிய பிரேரணையல்ல என பேராசிரியர். பீரிஸ் அண்மையில் ஊடகவியலாளர்களிடம் கூறியிருந்தார். சட்டப்படி அதுவும் உண்மைதான். ஆனால், அப்படி யென்றால், இலங்கை அரசாங்கம் பிரேரணையைக் கொண்டுவராமல் தடுக்க இவ்வளவு பிரயத்தனம் மேற்கொள்ளத் தேவையில்லையே. அதேவேளை இலங்கை அரசாங்கம் பிரேரணையின்படி நடந்துகொள்ள மாட்டாதா என்ற கேள்வியும் அதனால் எழுகிறது.

நல்லிணக்க ஆணைக் குழுவின் சகல சிபார்சுகளையும் நிறைவேற்ற முடியாது என ஜெனிவா சென்ற மற்றொரு அமைச்சரான மஹிந்த சமரசிங்க கூறியிருந்தார். ஆணைக்குழுவின் சகல சிபார்சுகளையும் நிறைவேற்றவேண்டும் என ஜெனீவா பிரேரணையும் இலங்கையை வலியுறுத்தவில்லை. ஆணைக்குழுவின் சிபார்சுகளில் ஆக்கபூர்வமான சிபார்சுகளை நிறைவேற்றவேண்டும் என்றே பிரேரணைகூறுகிறது.

இது,இலங்கை அரசாங்கத்திற்கு சாதகமாகவும் பாதகமாகவும் அமையக் கூடிய ஒரு சொற்றொடராகும். சிபார்சுகளில் தமக்கு வசதியானவற்றை மட்டும் நிறைவேற்ற இதனால், தமக்கு வாய்ப்பிருக்கிறது என இலங்கை அரசாங்கம் நினைக்கலாம். ஆனால், அமெரிக்கா என்ன நோக்கத்தில் பிரேரணையில் இவ்வாறு வர்த்தைப் பிரயோகம் செய்திருக்கிறது என்பது இப்போதைக்கு விளங்கவில்லை. அது பின்னர்தான் விளங்கும்.

பாதுகாப்புப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினருக்கும் இடையிலான போரின் போது இடம் பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமைமீறல்கள் போர்க் குற்றங்கள் விடயத்தில் சம்பந்தப்பட்டோரை பொறுப்புக்கூற வைக்க வேண்டும் என்பதற்காகவே இந்தப் பிரேரணை கொண்டுவரப் பட்டது. எனவே நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளில் அந்த விடயம் தொடர்பான சிபார்சுகளை நிறைவேற்ற வேண்டும் என்றே எதிர்காலத்தில் அமெரிக்காவும் மேற்கத்திய நாடுகளும் சர்வ தேச மனித உரிமை அமைப்புக்களும் இலங்கையை வற்புறுத்தும் என எதிர்பார்க்கலாம்.



மனிதஉரிமைகளோடு நேரடியாக சம்பந்தப்படாவிட்டாலும் அதிகாரப் பரவலாக்கல்களையும் அமெரிக்கா பிரேரணையில் சேர்த்துக்கொண்டுள்ளது. எனவே நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபார்சுகளில் அது சம்பந்தமாக குறிப்பிடப்பட்டுள்ள சிபார்சுகளும் எதிர்காலத்தில் வலியுறுத்தப் படலாம். இந்தியாவும் அமெரிக்க பிரேரணையைப் பற்றிக் குறிப்பிட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் 13 ஆவது அரசியலமைப் புத்திருதத்தத்திற்கு அப்பால் சென்று அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்ள வேண்டும் என்று கூறியிருந்தது.

இந்த இரண்டும், அதாவது பொறுப்புக்கூறல் மற்றும் அதிகார பரவாலாக்கல் ஆகிய இரண்டு துறையிலும் முன் னோக்கிச் செல்வதானது இலங்கை அரசாங்கத்திற்கு அவ்வளவு இலேசான காரியங்களல்ல. அரசாங்கத்தின் தலைவர்களின் கண்ணோட்டங்களும் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளின் நெருக்குதல்களுமே அதற்குக் காரணமாகும். ஆனால், அந்த இரண்டு துறைகளில் முன்னோக்கிச் செல்லாமையின் காரணமாகவே அமெரிக்க பிரேரணையும் கொண்டுவரப்பட்டது. எனவே எவ்வளவு கஷ்டமாக இருந்தாலும் அந்த இரண்டு துறைகளில் முன்னோக்கிச்செல்ல அரசாங்கம் தவறினால் சர்வதேச நெருக்குதல் மேலும் வலுப்பெறும்.

நல்லிணக்க ஆணைக்குழு தமது வரையறைகளுக்கு அப்பால் சென்றுள்ளதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கூறியிருக்கிறார். இதற்கு முன்னர் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும் இதனை கூறியிருந்தார். ஆனால். அமைச்சர் டி.யூ.குணசேகர ஆணைக்குழு அவ்வாறு தமது வரையறைகளுக்கு அப்பால் செல்லவில்லையெனக் கூறுகிறார்.


ஆணைக்குழு தமது வரையறைகளுக்கு அப்பால் சென்றுள்ளது என்பது தவறான கருத்தல்ல. ஆணைக்குழுவே தமது அறிக்கையில் அதனை ஏற்றுக்கொணட்டுள்ளது. நல்லிணக்கம் என்ற விடயத்திற்காக 2002 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை காலத்தை மட்டும் ஆராய்தல் போதுமானதல்ல என்று கூறியிருக்கும் ஆணைக்குழு, அந்த விடயத்திற்காக தாம் தமது வரையறைகளுக்கு அப்பால் சென்றுள்ளதாக ஏற்றுக் கொண்டுள்ளது. அது ஏற்றுக் கொள்ள கூடிய கருத்தாகும்.

அரசாங்கம் சர்வதேச ரீதியில் நம்பிக்கையைப் பற்றிய பிரச்சினையை எதிர்நோக்கியிருக்கிறது. அரசாங்கமே நியமித்த ஆணைக் குழுவின் சிபார்சுகளை நிறைவேற்ற வேண்டும் என்று சர்வதேச சமூகம் மனிதஉரிமை பேரவையில் பிரேரணை கொண்டுவருவதற்கு அதுவே காரணமாகும். இந்த நிலையில் அமைச்சர்கள் இவ்வாறு கருத்து வெளியிடத்தான் வேண்டுமா என்ற கேள்வியும் எழுகிறது.

# அவதார புருஷர் ஈழத்து ஞானி இராமச்சந்திரனின் குருபூசையும் இலிங்கேஸ்வரர் சங்காபிஷேகமும்

**யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, சுவாமியார் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ இராமச்சந்திர இலிங்கேஸ்வரர் திருத்தலத்தில் கடந்த 25 ஆம் திகதி இடம் பெற்ற இரண்டாவது மகா கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபி ஷேகம் சிறப்புற இடம்பெற்றுவந்தது.**

**இன்று வியாழக்கிழமை பங்குனி உத்தரதினத்தின்போது சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளதுடன் பெருமானின் பெருமைகூறும் நூல் வெளியீடும் பக்திப் பாமாலை இறுவெட்டும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.**



மேற்படி திருத்தலத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கும் ஸ்ரீ இராமச்சந்திர இலிங்கேஸ்வரர் , ஈழ நல்லூரின் வடக்கே கலைமகள் வீதியில் வீரசைவ செங்குந்தர் மரபினரான சடையம்மா வழி திரு அவதாரம் புரிந்து அனைவரையும் அரவணைத்து வாழ்ந்த மகரிஷி ஆவார். இன்று அகிலமெங்கும் தமிழரால் வழிபடப்பெற்று வரும் இராமச்சந்திர மகரிஷியின் அஸ்தியிலேயே மேற்படி திருத்தலம் அமைந்துள்ளது.

பெருமானார் மறைந்தது 1977 ஆம் ஆண்டின் பங்குனி உத்தர தினத்தில் ஆகும். மேற்படி திருத்தலத்திலேபெருமான் மறைந்த பங்குனி உத்தர தினத்திலேயே சங்காபிஷேகம் இடம்பெறுவதால் இத்தினம் மிகவும் விசேடதினமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**ஸ்ரீஇராமச்சந்திர மகரிஷி வரலாறு அதி அற்புதம் வாய்ந்தது**

இராமச்சந்திர மகரிஷி எனும் வெள்ளை அண்ணை குருபகவான் ஈழ நல்லூரிலே 1926 இல் திருவவதாரம் புரிந்தவர். அவரது தந்தையார் சிவநெறிச் சீலர் சங்கரப்பிள்ளை அவர்கள், சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களது செயலாளராக இருந்தவர். தாயார் மீனாட்சி அம்மா ஆசார அனுட்டானங்கள் புரிந்து வாழ்ந்தவர். ஈழத்து பெண் சித்தரான சடையம்மா அவர்களுக்கு உறவினர்.

நல்லூரிலே அவர்கள் வாழ்ந்த சபாமாளிகை இல்லத்தில் இராமச்சந்திரனார் திரு அவதாரம் புரிந்த போது பிரசவ அறைக்குள்ளே நாகம் ஒன்று படம் எடுத்து நின்றது. அவ்வாறு பெருமான் தமது அற்புத வரவை உணர்த்தியவர்.

அதுபோலவே பெருமான் தமக்கு தந்தையாக வர வேண்டிய சங்கரப்பிள்ள்ளை அவர் கள் பிள்ளை வரம்வேண்டி காசி மடத்திலே இருந்த போது ஒரு சந்நி யாசி மூலம் தமது வரவை உணர்த்தியவர்.

அன்றிரவு அம்மடத்திலே படுத்துறங்கிய சங்கரப்பிள்ளை அவர்களின் கனவிலே அதே சந்தியாசி அம்மடத்திலே அநாதரவாக கிடந்த திவ்விய ஒளி பொருந்திய குழந்தையை காண்பித்து இராமச்சந்திரா! என கூறியபடி நின்றதும் அக்குழந்தை சங்கரப்பிள்ளையிடம் வரத் துடிப்பது போல தமது கைக்கால்களை அசைத்து பூப்போன்ற இதழ்களால் புன்னகைத்து நின்றதும் எம்பெருமான் பூலோகத் தாயார் மீனாட்சி அம்மாள், நல்லூர் சட்டநாதர் சிவன் கோவில் முன் யானை அம்பாரியில் சிவனும் மகா விஷ்ணுவும் திவ்ய ஒளி பொருந்திய ஒரு குழந்தையை பக்த கூட்டத்தில் நின்ற தமக்கு வ்ழங்கி நின்றது போல கண்ட ஒரு அற்புத சொப்பனத்தின் பின்னாலேயே குழந்தை கிடந்தது என்பதும் பெருமானின் திருவவதாரம் உணர்த்தும் சம்பவங்களாகும். இத்தெய்வீகக் காட்சிக்குரிய ஓவியம் மேற்படி ஆலயத்தில் தத்ரூபமாக வரையப்பட்டுள்ளது.

இராமச்சந்திரன் சிறுவயதிலேயே தமது அற்புதங்களாலும் அறிவாற்றலாலும் இன, மத, மொழி வேற்றுமை களைந்து அனைவரையும் ஈர்க்கத் தொடங்கியவர்.

அனைத்துக் கல்வித் துறையினிலும் தேர்ச்சி பெற்றவராய் அவ்வத் துறைசார்ந்த அறிஞர்கள் வியக்க போதனை புரிந்த பெருஞானி.

மிகவும் சிறு வயதிலேயே பல மொழிகளிலும் ஆற்றல் பெற்ற அவர் ஒன்றே குலம், ஒருவனே தெய்வம் எனும் திருமூலரின் திருமந்திரத்து வழி உலக ஒருமைப்பாட்டினை வகுத்த எமது ஈழத்து மகரிஷி உபதேசங்களோடு மட்டும் அமையரது ஏழை எளியோருக்கு உணவு, உடை, மருத்துவஉதவி முதலானவை தந்து ஆதரித்து நின்றவர். படிக்க வசதி அற்ற பிள்ளைகளுக்கு பாடநூல்கள், கல்வி உபகரணங்கள் வழங்கி அவர்கள் கற்றுயர வகை செய்தவர். நினைத்த மாத்திரத்தே கவிபாட வல்ல இவர் பல கவிஞர்களையும் உருவாக்கி உள்ளார்.

**ஆங்கிலத்தை, சிங்களத்தை தமிழ் சிறுவர் இலகுவிலே பயில முறையே இனிக்கும் ஆங்கிலம், இனிக்கும் சிங்களம் என்ற நூல்களை இலகுபட எழுதியுள்ளார்**

பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களை சேர்ந்தவர்களும் இவரது அற்புத ஆற்றலால், அரவணைப்பால் இவர் மீது அன்பு செலுத்தி வந்துள்ளனர்.

**இராமச்சந்திர மகரிஷியின் மகிமையால் ஈர்ப்புப் பெற்ற பலர் அவர்தம் சீடர்கள் ஆயினர்.**

பெருமானின் கொழும்புத்துறைச் சீடர்கள் 1977 பங்குனி உத்தர தினத்திலே பெருமான் மறைந்த போது கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் அவர்தம் அஸ்தியில் மடாலயம் அமைத்து வழிபாடியற்றி வந்தனர். அம்மடாலயமே 1984 இல் ஸ்ரீ இராமச்சந்திர இலிங்கேஸ்வரர் திருத்தலமாக முதலாவது மகா கும்பாபிஷேகம் கண்டது.

அங்கே இராமச்சந்திர இலிங்கேஸ்வரர் தையல்நாயகி சமேதராக பக்தகோடிகளுக்கு அருள்பாலித்து வருகின்றார்.பிற சமயிகளும் பெருமானின் அற்புதம் உணர்ந்து பயபக்தியுடன் மேற்படி திருத்தலம் வந்து பூசித்து திரும்புகின்றனர்.

அத்தகைய திருத்தலம் போர் அனர்த்தத்தின் பின்னர் சீடர்களால் புனருத்தாரணம் செய்யப்பெற்று இரண்டாவது மகா கும்பாபிஷேகம் கண்டது.

05.04.2012 இல் எம்பெருமானின் புண்ணிய தின மான பங்குனி உத்தர தினத்தின் போது சங்காபிஷேகம் காணவுள் ளதும் இங்கே குறிப்பிடத்தக்கது. மேற்படி பங்குனி உத்தர தினத் திலே பெருமானின் அருட்சீடர் கலாநிதி ஜெயக்குமார் குமாரசுவாமி (கவி வேழம் பாரதிபாலன்) அவர்க ளால் வெளியிடப்பெறும் பெருமானாரின் பெருமை தாங்கிய ஈழத்து ஞானி ஸ்ரீ இராமச் சந்திர மகரிஷி எனும் அருள் ஞான நூலும் பிரபல இந்திய பாடகர்களால் பாடப்பெற்ற அருள் ததும்பும் திருவருள் வாசகம் பக்தி மாலை இறுவெட்டும் வெளியிடப் பெறவுள்ளது.

# வடமராட்சி கிழக்குக்கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அட்டாவடி

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் இந்திய மீனவர்கள் வெடிகளை வெடிக்க வைத்து மீன்பிடிப்பதாக வடமராட்சி கிழக்கு மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் இரவு நேரங்களில் தமது படகுகளின் வெளிச்சங்களை அணைத்துவிட்டு தடை செய்யப்பட்ட ரோலர் மூலம் மீன்பிடிப்பதாகவும் இதனால் மீன் உற்பத்தியாகும் இடங்கள் அழிந்து வருவதாகவும் மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல் நடவடிக்கையினால் தமது மீன்பிடி தொழில் முற்றாக பாதிக்கப்பட்டு விட்டதாகவும் இதனால் தமது வாழ்வாதாரம் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடயம் தொடர்பாக நடவடக்கை எடுத்து தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவவேண்டுமென அப்பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-10)

# மதுப்பிரியர்களை கட்டுப்படுத்த பொதுமக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சென்செபஸ்ரியார் வீதியில் இரவு வேளைகளில் மதுப்பிரியர்களின் அட்டகாசம் அதிகரித்து காணப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இரவு வேளைகளில் கூடும் இளைஞர்கள் மது அருந்திய பின் அப்பகுதியில் உள்ள மின்விளக்குகளை சேதமாக்கி வருகின்றனர்.

அத்தோடு அவ்விடத்தில் கூக்குரல் இட்டு கதைக்கின்றனர். இவ்விளைஞர்கள் கூடும் இடத்தில் கிறிஸ்தவ தேவாலயமும் (புனித செபஸ்ரியார்) சனசமூக நிலையம் ஒன்றும் காணப்படுகின்றது.

தினமும் கூடும் இவர்களால் அப்பகுதி மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர். எனவே இவ்விடயத்தில் உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர். (அ)


# அறிவித்தல்

இத்தால் சகலரும் அறிவது ளளளளளளளள70/14, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணத் தைச் சேர்ந்த செல்வி கிறிஸ்தோத்திரம் எல்சி கிப்பெரலிற்றா என்பவர் 1986.08.01 இல் பிரசித்த நொத்தாரிஸ் எஸ்.எஸ். பிரான்சிஸ் முகதாவில் நிறைவேறிய 323 ஆம் இலக்க நன்கொடை உறுதியால் சுண்டிக்குளி இறை “விளான்குளம் வயல்” என்ற நாமமுடைய 70/ 14, ஈச்சமோட்டை வீதியிலுள்ள நிலப்பரப்பு 2க்கு சொந்தக்காரரும் ஆட்சியாளருமானவர் என அறிய வருகிறது.

மேற்படி செல்வி கிறிஸ்தோத்திரம் எல்சி கிப்பொலிற்றா குறித்த ஆதனத்தின் சோலைவரிப்பெயரை தமது பெயருக்கு மாற்ற விண்ணப்பித்துள்ளார். எனவே சோலைவரிப் பெயர் மாற்றம் தொடர்பாக எவருக்காவது ஆட்சேபம் இருப்பின் இவ் அறிவித்தல் வெளிவந்த நாளிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் ஆட்சேபனையை யாழ். மாநகரசபை ஆணையாளருக்கு தெரிவிக்கும்படி வேண்டுவதுடன், குறித்த காலப் பகுதிக்குள் சோலைவரிப்பெயர் மாற்றம் சம்பந்தமாக எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்காவிட்டால் அதன்பின் சோலைவரிப்பெயரை அவர்களது பெயருக்கு மாற்றுவதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் யாழ். மாநகர சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

திருமதி. யோ. பற்குணராசா,
முதல்வர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(சி-6258)

# தமிழர்களின் சுதந்திரத்தை பறித்தவர்களே புலிகள்

## அமைச்சர் அனுர பிரியதர்ஷன கூறுகிறார்

(கொழும்பு)

கடந்தகால செயற்பாடுகளை மறந்து செயற்பட முடியாது என்பதுடன் புலிகளின் அட்டூழியங்களை பார்த்து அதிலிருந்து மீண்டெழுந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படவேண்டும். நாட்டில் பல்லினங்கள் வாழ்கின்றனர் என்பதை மறந்து செயற்படக் கூடாது என்று அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மீதான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ஐ.நா. மனித உரிமை பேரவையானது அமைய் நாடுகளின் மனித உரிமைகள் குறித்தே கூடுதலான கவனத்தை செலுத்தும் அந்த பேரவை நீதிமன்றமல்ல.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் காலத்தில் மனித உரிமைப் பேரவையிலிருந்து அமெரிக்கா விலகியிருந்தது என்பதுடன் இந்தப் பேரவை அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதாக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கற்றறிந்த பாடங்களுக்காக நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டு மூன்று மாதங்களுக்குள் அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்று கூறுவது அநீதியானது என்பதை தெளிவுபடுத்தியிருந்தேன்.

பிரேரணைக்கு ஆசிய நாடுகளில் இந்தியாவை தவிர சகல நாடுகளும் ஆதரவளித்தன. கிழக்கு மாகாணத்தில் அதிகாரம் பகிரப்பட்டுள்ளது. வடக்கில் இரண்டு உள்ளூராட்சி மன்றங்களை தவிர ஏனைய மன்றங்கள் செயற்படுகின்றது. புலிகள் சாதாரண இயக்கம் இல்லை. விடுதலைக்காக குரல் கொடுத்தவர்கள் இல்லை. தமிழர்களின் சுதந்திரத்தை பறித்த கொடூரமான பயங்கரவாத இயக்கமாகும்.

புலிகளுக்கு வெள்ளையடிக்க முயலக் கூடாது. தமிழர் பிரதேசத்தில் புலிகளினால் பல்வேறு சேதங்கள் ஏற்படுத்தப்பட்டன. தமிழர்களின் அபிமானத்தை சீரழித்த இயக்கமாகும்.

புலி பயங்கரவாதிகள் இயக்கத்தை ஒழித்திருக்காவிடின் ஆயிரக்கணக்கான உயிர்கள் இன்றும் பலியாகி கொண்டிருக்கும்.

தமிழ் மக்களின் விடுதலைக்காக புலிகள் போராட்டம் நடத்தவில்லை. தமிழ் மக்களின் குரலை நசுக்கவே செயற்பட்டனர். நாட்டுக்கு தேவையான விடயங்களை நாட்டுக்குள்ளே உருவாக்க வேண்டும்.

புலிகளின் அட்டூழியங்களை பார்த்து அதிலிருந்து மீண்டெழுந்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு செயற்பட வேண்டும். கடந்த கால செயற்பாடுகளை மறந்து செயற்படக்கூடாது என்றார். (அ-2)


## கிண்ணியாவில் விசித்திர கடல்வாழ் உயிரினம்



கிண்ணியா- குட்டிகராச்சி பாலத்தின் இருமருங்கிலும் நேற்று முன்தினமிரவு ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஒருவகை கடல் வாழ் உயிரினம் அவதானிக்கப்பட்டுள்ளது.

குறித்த உயிரின வகையை தற்போது பாலத்தில் ஆழமான பகுதிகளில் காண முடிவதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனைப் பார்வையிடுவதற்காக நூற்றுக்கணக்கான மக்கள் குறித்த பகுதிக்கு வந்ததாக குறிப்பிட்டார்.

இதனால் குறித்த பாலத்தின் ஊடான போக்குவரத்து பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)



சாவகச்சேரி நகராட்சி மன்ற சாவகச்சேரி பொது நூலகத்தில் உலக குடிநீர் தின நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கெயர் சர்வதேச நிறுவன திட்ட முகாமையாளர் திருமதி ஜோய்றோஸ் ஞானேஸ்வரன் மாலையிட்டு வரவேற்கப்படுவதையும் சபைத் தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை, செயலாளர் சு.புத்திசிகாமணி ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்:- சாவகச்சேரி செய்தியாளர்)

# அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ள சட்டமா அதிபர் திணைக்களம்

சட்டமா அதிபர் திணைக்களம் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதாக முன்னாள் உயர் நீதிமன்ற நீதவான் டபிள்யூ.எம்.பீ.வராவெள தெரிவித்துள்ளார். அரசியல் தலையீடுகள் இல்லாவிட்டால் இலங்கையின் நீதிமன்றக் கட்டமைப்பு சுயாதீனமாக இயங்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் நீதிமன்றக் கட்டமைப்பின் சுயாதீனத்தன்மையை உறுதி செய்ய வேண்டுமாயின் 17 ஆம் திருத்தச் சட்ட மூலத்தை அமுல்படுத்த வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

உரிய தொழில்களுக்கு தகுதியானவர்கள் நியமிக்கப்பட வேண்டியது முக்கியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாழைப்பழம், தேங்காய் போன்றவற்றை களவாடும் நபர்கள் மட்டுமன்றி படுகொலை செய்யும் அரசியல்வாதிகளும் தண்டிக்கப் படக்கூடிய வகையில் அரசியல் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார்.

மக்களை பாதுகாக்க வேண்டியது நீதிமன்றத்தின் கடமையாகும் எனவும் நீதிமன்றத்தின் மீது மக்கள் நம்பிக்கையிழந்துவிடக் கூடாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# முற்பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு நிவாரணங்களை வழங்கக் கோரிக்கை

(கொழும்பு)

வரிக்கட்டணங்கள் அதிகரிக்கப்படுவதற்கு முன்னர் முற்பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு வரி நிவாரணங்களை பெற்றுத் தருமாறு வாகன இறக்குமதியாளர்கள் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

திடீரென வரிக்கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டமையால் நுகர்வோர் மற்றும் தாம் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதாக இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் யோகா பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

வரிக்கட்டணங்கள் அதிகரிக்கப்படுவதற்கு முன்னர் வாகனங்களுக்கு முற்கட்டணங்களை செலுத்திய நுகர்வோர் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

முற்பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு மாத்திரம் நிவாரணங்களை வழங்கினால் பழைய விலையில் விற்பனை செய்ய முடியும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, வரிக்கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு வாகனங்களின் விற்பனை பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். நுகர்வோர் தற்போது வாகனங்களை கொள்வனவு செய்வதை நிறுத்தி வைத்துள்ளதாக இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த 30 ஆம் திகதி துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்ட வாகனங்களுக்கும் புதிய வரிக்கட்டணங்களை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் தெரிவித்தார். வரிக்கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டமை பாரிய பிரச்சினையாக அமைந்துள்ளதாக இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ-2)

# திவிநெகும திட்டத்தின் கீழ் விதைகள் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வாழ்வு எழுச்சி (திவிநெகும) திட்டத்தின் கீழ் சிறுபோகத்தில் விதைகள் மற்றும் பயன்தரும் நடுகைப்பொருள் நடும் நிகழ்ச்சித் திட்டமொன்றை நாடளாவிய ரீதியில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி இன்று முற்பகல் 9.10 மணியளவில் வடக்கு திசையை நோக்கியவாறு இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட அனைத்து பயனாளிகளினதும் வீட்டுத் தோட்டங்களிலும் விதைகள் மற்றும் நாற்றுக்கள் நடுவதற்குத் தீர்மானித்துள்ளதாக யாழ். மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.மோகனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வாழ்வு எழுச்சீ தேசிய இயக்கத்தின் கீழ் சிறுபோகத்தில் விதைகள் மற்றும் நடுகைப் பொருள் நடும் நிகழ்ச்சித் திட்டமொன்றை நாடளாவிய ரீதியில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மேலதிகச் செயலாளர் ஆர்.ஏ.ஏ.கே.ரணவக்கவினால் கடிதம் மூலம் யாழ். மாவட்ட செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் 43 ஆயிரத்து 500 குடும்பங்கள் இந்த திவிநெகும என அழைக்கப்படும் வாழ்வு எழுச்சித் திட்டத்தில் பயன் பெற்று வருகின்றன.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களே இந்தத் திட்டத்தில் பயனாளிகளாக இணைக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு இவர்களில் பெரும்பான்மையானவர்கள் சமூகத்தில் பயனாளிகளாகவும் உள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# தண்ணீர் பங்குக்கான பதிவுகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அக்கராயன்குளம் ஸ்கந்தபுரம் ஐயனார் கமக்கார அமைப்பின் கீழுள்ள விவசாயிகளுக்கு அறிவுறுத்தல் அவ்வமைப்பினால் விடுக்கப்பட்டுள்து.

2012 ஆம் ஆண்டு சிறுபோக தண்ணீர்ப்பங்கு கடந்த முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பமாகி எதிர்வரும் 10 ஆம் திகதி வரை பதிவுகள் நடைபெறவுள்ளன. காணி உரிமையாளர்கள் பதிவுகளை மேற்கொள்ள வரும் போது நீர்வரிஇடாப்பு தயாரிப்பதற்கு காணிக்கு உரிய ஆவணத்தின் ஒரு பிரதியைச் சமர்ப்பிக்க வேண்டுமென இக் கமக்கார அமைப்பின் செயலாளர் அறிவித்துள்ளார். (அ-2)

# கிளிநொச்சி, கரைச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய

## ஆண்டு உற்சவ பங்குனி உத்தரப் பொங்கல் விழா சிறப்பு மலர் -05.04.2012

## ஆலய வரலாறு

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைப் பொன்னம் பலவன் ஞானகுரு வாணிபதம் நாடு.

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வரலாறு பழைமையானது, புதுமையானது, புனிதமானது. இற்றைக்கு கிட்டத்தட்ட 400 வருடங்களுக்கு முற்பட்ட காலத்தில் கரைச்சிப் பிரதேசத்தில் உள்ள புளியம்பொக்கணை கிராமத்தில் கொளுந்துப் புலவு என்ற சிற்றூரில் தான் இந்த அற்புதம் நடந்தது. இக்கிராமத்தில் உள்ளவர்கள் அனைவரும் மிகுந்த இறைபக்தியுடையவர்கள். சமய விதி முறைகள் தவறாது ஒழுகி நிற்பவர்கள்.


இவர்கள் வன்னிய வேளாளர்கள் அனைவருக்கும் முதல்வனாகி முதலியார் பட்டம்பெற்ற நீதிநாயக முதலியார் என்பவர் வாழ்ந்து வந்தார். இவருக்கு அளவற்ற நெற்காணிகள் உட்பட சொல்லப்படுகின்ற பதினாறு செல்வங்களும் குவிந்து கிடந்தன. இவருக்கு கமலம் என்னும் பெயருடைய அழகான நற்பண்புகளையுடைய மனைவியும் இருந்தாள். எவ்வளவு செல்வச் சிறப்போடு வாழ்ந்தாலும் அவர்களுக்கு பிள்ளைச் செல்வம் இல்லாதது பெரும் துன்பமாகவே இருந்தது.

இதனால் இவர்கள் தாங்கமுடியாத கவலையில் சிவபிரானிடம் தங்கள் கவலையை எடுத்துக் கூறி பற்பல விரதங்கள் அனுட்டித்து தரும தானங்கள் செய்து இடையறாது இறைவனை வணங்கி வந்தனர்., கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பதற்கமைய கமலம் அம்மையார் கர்ப்பமுற்றார். இதன் பயனாக ஆண் குழந்தையொன்றைப் பெற்றெடுத்தனர். பிள்ளைக்கு சந்ததிப் பெயராக மாப்பாணமுதலியார் என்று பெயரிட்டு மகிழ்ந்து இன்புற்றிருந்தனர். இரண்டாவதாகவும் ஆண் மகன் பிறந்திட அவனுக்கு வவுனிய முதலியார் எனப் பெயர் சூட்டி தங்கள் இரு கண்கள் போல இரு புதல்வரை யும் திருவருள் பெற்று வளர்த்து வந்தனர்.

இக்காலத்தில் பெண் பிள்ளை இல்லையே என்று கவலை கொண்டிருந்த வேளை கர்ப்பமுற்றிருந்த கமலம் அம்மையார் சிவபெருமான் திருவருளால் பங்குனி மாதத்தில் உத்தர நட்சத்திரமும் பூரணையும் கூடிய சுப தினத்தில் ஓர் பெண் பிள்ளையுடன் பாம்பு ஒன்றையும் பெற்றெடுத்தார். உற்றார், உறவினர், ஊரவர் எல்லோரும் பலவாறு பேசிக் கொண்டாலும் சர்ப்ப குழந்தையையும் பிள்ளையாகவே வளர்த்து வந்தனர் பெற்றோர். பாம்பு வளர்ந்து தனது சகோதரர்களுடனும் பெற்றோருடனும் சேர்ந்து உறவாடி வந்தது. பெண் குழந்தைக்கு வள்ளி நாச் சன் என்றும் பாம்புக்கு தம்பிரான் என்றும் பெயர் இட்டனர்.

தந்தையார் நீதிநாயக முதலியார் தனது முதுமை நிலையை உணர்ந்து தனது அளவற்ற சொத்துக்களை பிள்ளைகள் மூவருக்கும் சம பங்காக பிரித்து சாதனம் எழுதி வைத்தார். இதனால் கோபம் கொண்ட பாம்பு படத்தை விரித்து சீறித் தனது கோபத்தை வெளிப்படுத்தி உறுதிப் பத்திரம், எழுத்தாணி என்பவற்றை தன் வாயால் கொத்தி சிதறியது.

தனக்கும் பங்கு வேண்டும் என்பதை குறிப்பால் காட்டிட



உணர்ந்த பெற்றோர் பாம்புக் குழந்தைக்கும் பங்கு காட்டி எழுதினர். அப்போது தம்பிரான் என்ற பாம்பு தனது பங்கையும் சகோதரி வள்ளி நாச்சன் பங்குடன் சேர்த்துவிட்டது. இதன்பின்பு பிள்ளைகள் மூவரும் மணம் முடித்து தனிக் குடித்தனம் நடத்திட பாம்பு பெற்றோருடன் வாழ்ந்து வந்தது. தானும் திருமணம் செய்ததது போல மற்றைய பாம்புகளையும் கூட்டி வந்து வீட்டில் தங்கி வந்தது.

ஒரு நாள் தாய் கமலம்மை முற்றம் கூட்டிக் கொண்டிருந்த வேளை பாம்பான தம்பிரான் விளக்குமாற்றில் ஏறியும் தாய் மீது ஏறியும் தொந்தரவு செய்தவேளை தாய் விளக் குமாறினால் தட்டினார். கோபம் கொண்ட பாம்பு தாயென நினைத்து கோபத்தை அடக்கி அந்தக் கணமே வீட்டை விட்டு போய்விட்டது.

பாம்பைக் காணாது தேடி அலைந்து நீதிநாயக முதலியாரும் கமலம் அம்மையாரும் மிகவும் கவலையுடன் இருந்தனர். நித்திரையில் கனவாகப் பட்டது. பாம்பு அரைந்து சென்ற பாதையும் அது சென்ற இடமும் அதன் படி சென்று பாம்பைக் கண்டு சகல வரிசை வாத்தியங்களுடன் அழைத்து வந்து கனவில் பட்ட அரச மரத்தின் கீழ் கோயில் அமைத்து வழிபாடாற்றிவந்துனர். அதன்பின்பு வருடந்தோறும் வரும் பங்குனி உத்தரத்தில் பெரும் பொங்கல் செய்து வழிபட்டு வருகின் றனர். நீதிநாயக முதலியார் மரபில் வந்தோர் பொங்க லுக்கு 8 நாட்கள் முன்பாக விளக்கு வைக்கின்ற வைபவம் நடந்து பண்டட வண்டியில் சென்று எம்பெருமா னின் மெய்யடியார்களின் நேர்த்திப் பொருட்களை ஏற்றி வந்து பொங்கல் செய்வது வழமையாகியது.

இதன்படி ஒரு முறை மீசாலை புத்தூர் சந்தியில் உள்ள பண்ட மரபடியில் இருந்து பண்ட வண்டிகள் புறப்பட்டு வந்து மடுக்கரை என்ற இடத்தில் தங்கி நின்று பூசைக்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்த வேளை ஒல்லாந்தர் இலங்கை நாட்டை ஆட்சி செய்த காலம் குதிரை மீது ஒல்லாந்த அதிகாரிகள் நாட்டைச் சுற்றி வருகின்ற போது இவர்களை கண்டுவிட்டனர். உடனே அவர்களை அழைத்து பயமூட்டி இந்த நாட்டில் கிறிஸ்தவ சமயத்தில் எல்லோரும் சேர வேண்டும். இப்படியான பேய் பிசாசுகள் என்ற தெய்வங்களை வைத்து வணங்கக் கூடாது. மீறினால் சுட்டுக் கொன்றிடுவோம் என்று மிரட்டி உங்கள் தெய்வம் உண்மையானால் இப்பவே காட்டுங்கள் என்று பூசகரை கேட்டிட, பூசகர் இறைவா இது என்ன சோதனை? உன் திருவருளைக் காட்டு என்று வணங்கி அருகில் இருந்த நீர் நிலையில் நீராடி அனுட்டானங்கள் செய்து பூசைப் பொருட்களை வைத்து புதிய பானையொன்றிற்குள் எல்லோரும் காணும் பொருட்டு வெள்ளைத் துணியை முறுக்கி வைத்து இறைவனை வணங்கி நின்றார். எல்லோரது கண்களும் கூசும் படியாக வனத்தில் இருந்து 5 தலை நாகபாம்பு வெளிப்பட்டது. இதைக் கண்ட ஒல் லாந்தர் பயந்து தங்கள் தவறுக்கு மனம்வருந்தி வழிச் செல்ல அனுமதி கொடுத்துச் சென்றனர். பின்பு பொங்கல் தினத்தன்று தாங்கள் கண்டது போல வெளியால் பாம்புப் படம் செய்தும் கட்டட வேளை செய்தவ்தற்கும் பணமும் கொடுத்து சென்றார்கள் என்பது வரலாற்றில் அறிந்தவை.

இவ்வாறு இப்பவும் நடந்து வருகின்றது. அரசம் பொந்தில் பால் பழம் வைப்பதும் பாம்புத் தெய்வம் அருந்திச் செல்வதும் பல அடியவர்களின் கண்களுக்கு தெரிகின்ற உண்மை.

நாகதம்பிரானே! நாகராசவே என்று உச்சரித்த படி திரிகின்ற மெய்யடியார்களுக்கு என்றும் தன் திருவருளை கொடுத்தருளுவார்.

நன்நெறி யுலவும் நீதி நாயக முதலியாரின் பன்னியின் கர்ப்பம் தன்னித் பாம்பரு வாகத் தோன்றி

பின்ன மிர் அன்பர் போற்றப் புளியம் பொக்க ணை யில் வைகி தன்னருள் புரியும் நாகதம்பிரான் தாளில் தாழ்வாம்.

நாகதம்பிரான் நல்லருள்
நாடெங்கும் பாலிக்குக.


நிலக்ஷா புத்தகசாலை
பாடசாலை உபகரணங்கள், பத்திரிகைகள், AUDIO, VDO, CDக்கள், பெண்களுக்கான
அழகு சாதனப் பொருட்கள் என்பன பெற்றுக்
கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்
நிலக்ஷா புத்தகசாலை
இல. 124, கட்சன் வீதி,
வட்டக்கச்சி.

E.B.N.மல்ரிசொப்
சித்திரை புத்தாண்டை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை
சகலவிதமான L.C.D. LED, தொலைக்காட்சி
வகைகள், குளிர்சாதன பெட்டிகள்,
கையடக்கத் தொலைபேசி வகைகள் C.D. வகைகள்
இன்னும் பல வகையான எலக்ரோனிக்
பொருட்களை பெற்றுக் கொள்ள நீங்கள் நாட
வேண்டிய ஒரே இடம்
இல. 165/05, கந்தசாமி கோவில் முன்பாக,
யாழ்சாலை, கிளிநொச்சி.
T.P:-0774547728
T.P:-0212285315, 021 2285314
கிளை E.B.N மல்ரிசொப்,
முல்லை வீதி,
இல.06 உடையார் கட்டு.
T.P:-0213208183


பார்நிலா ரேடர்ஸ்
கிளிநொச்சி, முல்லை மாவட்ட லக்ஸ்பிரே
பால்மா ஏக முகவரும் மற்றும் பிஸ்கட்
வகைகள் என்பன மிகக் குறைந்த விலையில்
பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்
இல. 05 கனகபுரம் வீதி,
கிளிநொச்சி.
தொ.பே.0774680306

கிளிநொச்சியில் டிஜிட்டல் பிறிண்டிங்
புதிய பொலிவுடன் நவீன டிஜிட்டல் தொழில்நுட்பத்துடன்
எமது புதிய கிளை - கச்சேரி முன்பாக, கிளிநொச்சி
பார்த்தீபன் ஆட்ஸ்
டிஜிட்டல் பிறிண்டிங்
T.P 0777402847
கச்சேரி முன்பாக, ஏ-9 வீதி, கிளிநொச்சி -கனகபுரம் கிளிநொச்சி.

பாலவிநாயகர் புத்தகசாலை
அன்பான எமது வாடிக்கையாளர்களே! மாணவச் செல்வங்களே! பெற்றோர்களே!
உங்களுக்காக
அதிகூடிய விலைக் கழிவுகளுடன் கிளிநொச்சியில் எங்குமே இல்லாத விலைக்கழிவுகளுடன்
காகிதாதிகள், தரம் 1-13 வரையான பாடப் புத்தகங்கள், இந்தியன் புத்தகங்கள், தரம் 1-15 வரையான
கற்சுமி வெளியீட்டின் பயிற்சி வினாத்தாள்கள், பாடசாலை உபகரணங்கள், கொப்பிகள் என்பவற்றை
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்
பாலவிநாயகர் புத்தகசாலை
இல.06, கனகபுரம் தெரு, கிளிநொச்சி,
தொ.எண்:-0779589317, 0217200623

NAVEEN CERAMIC (PVT) LTD, இன் ஏக முகவர்களாக
Vigneswara Ceramics
இவர்களிடம் இறக்குமதி செய்யப்பட்ட
sanitaryware
wall Tiles
Floor Tiles
Plumping Fixtures
Glass doors
PVC doors
Kitchen Sink
Wash Basin
Mirror Sets
பெற்றுக்கொள்ளலாம்
இல.56/5, A9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி.
மற்றும்
இல. 59D, கூழைப்பிள்ளையார்குளம் வீதி, வவுனியா.
Quality goods make quality things
Email: Vigneshwaracermic59@yahoo.com

# உலகிலேயே மிகப் பெரிய போர்க்கப்பல் சென்னைக்கு



(சென்னை)

பல்வேறு நாடுகளின் கப்பல் படையைச் சேர்ந்த போர்க்கப்பல்கள் கூட்டுப்பயிற்சி மேற்கொள்வது வழக்கம். கடல்வழி பயங்கரவாத மிரட்டல்கள் அதிகமாக காணப்படும் பகுதிகளில் இந்த கூட்டுப்பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது.

இந்தியாவில் இதுவரை 14 முறை இதுபோன்ற பயிற்சிகள் நடைபெற்றுள்ளன. தற்போது 15 ஆவது முறையாகக் கேரளா மாநிலம் மலபார் கடலில் கூட்டுப்பயிற்சி நடக்கவுள்ளது.

எக்ஸெர்சைஸ் மலபார்- 2012 என்ற பெயரிட்டுள்ள இந்தக் கூட்டுப் பயிற்சியில் இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளைச் சேர்ந்த போர்க்கப்பல்கள் பங்கேற்கின்றன. வங்காளவிரி குடாவில் விசாகப்பட்டினம் தொடங்கி அந்தமான்நிக்கோபர்தீவுகள்வரை இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்படு கிறது.

இந்த கூட்டுப் பயிற்சியில் கலந்து கொள்ளும் அமெரிக்க கப்பல் படை கப்பலானது (சி.வி.என்-70) உலகிலேயே மிகப்பெரிய போர்க் கப்பலாகும். 330 மீற்றர் நீளமுள்ள கப்பலின் மேல் தளத்தில் நிறைய போர் விமானங்களைநிறுத்தி வைக்க முடியும்.

உலகையே அச்சுறுத்தி வந்த பின்லேடனை அமெரிக்க படையினர் சுற்றி வளைத்துச் சுட்டுக் கொன்றனர். அவனது உடல் இந்தியப் பெருங்கடலுக்கு அடியில் யாரும் அடையாளம் காணாத இடத்தில் புதைக்கப்பட்டது. இதற்காக பின்லேடன் உடலைக் கொண்டு செல்ல இந்த கப்பல்தான் பயன்படுத்தப்பட்டது.

கூட்டுப் பயிற்சியில் பங்கேற்பதற்காக புறப்பட்டு வரும் அந்தக் கப்பல் எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை சென்னை துறைமுகத்தை வந்தடைகிறது. இங்கு சில மணி நேரம் அந்தக் கப்பல் நிறுத்தி வைக்கப்படும் என்று இந்தியக் கப்பல் படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தக் கப்பலுடன் மேலும் இரண்டு அமெரிக்கப் போர்க் கப்பல்களும் வருகின்றன. அந்தக் கப்பல்களும் சென்னைத் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்படும். (அ-2)

# அணு ஆயுத நீர்மூழ்கி கப்பலொன்றை கடற்படைக்கு வாங்கிய இந்தியா

(விசாகப்பட்டினம்)

ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட நிர்பா அணு ஆயுத நீர்மூழ்கிக் கப்பல் நேற்றையதினம் இந்தியக் கடற்படையில் இணைந்துள்ளது.

இதன்மூலம் அணு ஆயுத நீர்மூழ்கிக் கப்பல் வைத்திருக்கும் பலம் பொருந்திய நாடுகள் பட்டியலில் இந்தியாவும் இடம்பெறுகிறது.

விசாகப்பட்டினம் கப்பற்தளப் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சியில் இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி முறைப்படி நிர்பா கப்பலை கடற்படைக்கு வழங்கியுள்ளார். இக்கப்பல் அகுலா-2 ரகத்தைச் சேர்ந்ததாகும். இந்திய கடற்படையில் நிர்பாவுக்கு ஐ.என்.எஸ். சக்ரா என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதற்கு முன் 1988 ஆம் ஆண்டு ரஷ்யாவை சேர்ந்த சார்லி ரக அணு ஆயுத நீர்மூழ்கிக் கப்பலை இந்தியா குத்தகைக்கு எடுத்திருந்தது. இப்போது நிர்பாவையும் 10 ஆண்டு குத்தகைக்குத்தான் இந்தியா எடுத்துள்ளது. இந்தக் குத்தகைக்காக ரூ.4, 500 கோடி செலவிடப்பட்டுள்ளது.



இதனால் கப்பலை பயன்படுத்துவதற்கான பயிற்சி இந்திய கடற்படையினருக்கு கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

அணு ஆயுத நீர்மூழ்கிக் கப்பல்களால் மாதக் கணக்கில் நீருக்கடியில் இருக்க முடியும். மேலும் 600 மீற்றர் ஆழம் வரை இந்தக் கப்பலால் நீருக்கடியில் செல்ல முடியும். விரைவில் கடலோரக் கண்காணிப்புப் பணியில் ஐ.என்.எஸ்.சக்ராவும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஐ.என்.எஸ் அரிஹந்தும் ஈடுபடும்.(அ-2)

# லேசர் குண்டுகளை தயாரித்து வழங்க இந்தியா -அமெ.ஒப்பந்தம்



இந்திய விமானப் படைக்குத் தேவையான லேசர் வகை குண்டுகள் தயாரித்து வழங்க மேஜர் லாக்கீட் மார்டின் எனும் அமெரிக்க நிறுவனத்துடன் சுமார் 100 கோடி ரூபாய் அளவிற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

எதிரிகளின் பதுங்கு குழிகளை வானிலிருந்தபடியே தகர்க்கும் வல்லமை கொண்ட 100இற்கும் மேற்பட்ட லேசர் குண்டுகளை ஜாக்குவார் போர் விமானத்தில் பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டது. ஒப்பந்தத்தில் மிகக்குறைந்த விலையை குறிப்பிட்டு இவ்வொப்பந்தத்தை பெற்றதாக லாக்கீட் மார்டின் நிறுவனத்தின் இந்திய தலைவரான ரோஜர் ரோஸ் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த ஒப்பந்தத்தின் மூலம் பேவ் வே-2 லேசர் வகை குண்டுகள் வழங்கவிருப்பதாகவும் இது குறித்து பேச்சுவார்த்தை நடந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். கடந்த 1999 ஆம் ஆண்டு நடைபெற்ற கார்கில் போரில் எதிரிகளின் குடியிருப்புகளை அழிப்பதற்கு லேசர் குண்டுகள் பயன்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வகையான குண்டுகள் புவியீர்ப்பு விசை குண்டுகளைவிட மிகவும் துல்லியமாக இலக்கை தாக்கும் வல்லமை கொண்டவை. இவ்வகையான குண்டுகளை ராய்தியோன் எனும் அமெரிக்க நிறுவனம் வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பன்றிக் காய்ச்சல் தொற்றால் ஒருவர் பலி; 330 பேர் பாதிப்பு

(புதுடில்லி)

மகாராஷ்டிராவில் பன்றிக் காய்ச்சலுக்கு மேலும் ஒருவர் உயிரிழந்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமையன்று கோவையில் 70 வயதான விவசாயி ஒருவர் உள்ளிட்ட 4 பேர் இந்நோயால் உயிரிழந்தனர்.

கடந்த மாதம் 24 பேர் பன்றிக் காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த காய்ச்சலால் 6 மாநிலங்களில் 330 பேர் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ-2)

# தமிழில் பேஸ்புக் பார்வையிடலாம்

(புதுடில்லி)

மொபைல் போனில் தமிழில் பேஸ்புக் பார்க்கும் வசதி விரைவில் அறிமுகம் செய்யப்படவுள்ளதாக பேஸ்புக் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் பேஸ்புக் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் தமிழ், மலையாளம் உள்ளிட்ட 8 இந்திய மொழிகளில் பேஸ்புக் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

இந்தியாவில் நான்கரை கோடி பேர் பேஸ்புக் பயன்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)




# பாகிஸ்தான் கடலோரப் பகுதிக்குள் மீன்பிடித்த இந்திய மீனவர்கள் கைது

(கராச்சி)

சர்வதேசக் கடல் எல்லையை தாண்டிப் பாகிஸ்தானுக்குள் அத்துமீறி நுழைந்ததாக 23 இந்திய மீனவர்கள் பாகிஸ்தான் கடலோரக்காவல் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இந்திய மீனவர்கள் நேற்றுமுன்தினம் சர்வதேச கடல் எல்லையைத் தாண்டி பாகிஸ்தானின் கராச்சி கடலோரப் பகுதிக்குள் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு ரோந்து சுற்றி வந்த பாகிஸ்தான் கடலோர காவல் படையினர் இந்திய மீனவர்களை அங்கிருந்து செல்லுமாறு எச்சரித்தனர். அவர்கள் அதனை பொருட்படுத்தாமல் மீன்பிடித்துக் கொண்டிருந்ததாக கூறப்படுகிறது.

உடனடியாக 23 இந்திய மீனவர்களை பாகிஸ்தான் படையினர் கைது செய்து அவர்கள் வந்த படகினையும் பறிமுதல் செய்தனர். பின்னர் கராச்சி கொண்டு சென்றனர். அவர்கள் ஜுடிசியல் மஜிஸ்திரேட் முன்பு இன்று ஆஜர்படுத்தப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் கடந்த ஜனவரியில் 31 மீனவர்களும் பெப்ரவரியில் 24 மீனவர்களும் பாகிஸ்தான் கடலோர காவற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சர்வதேச எல்லையில் சோதனைச்சாவடி

(அமிர்தசரஸ்)

இந்தியா-பாக். இடையே உள்ள சர்வதேச எல்லைப்பகுதியில் மேலும் ஓர் ஒருங்கிணைந்த சோதனைச்சாவடி திறக்கப்படவுள்ளது. இதனை மத்திய அமைச்சர் எதிர்வரும் 13 ஆம் திகதி திறந்து வைக் கவுள்ளார். இந்தியா-பாக். சர்வதேச எல்லையில் 13 ஒருங்கிணைந்த சோதனைச் சாவடிகள் உள்ளன. மேலும் ஒரு சோதனைச்சாவடி அட்டாரி எல்லையில் திறக்க கடந்த 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி 20 ஆம் திகதி அடிக்கல் நாட்டப்பட்டு இந்தியா-பாகிஸ்தானில் 130 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு ரூ.150 கோடியில் பணிகள் தொடங்கின.

இந்நிகழ்ச்சியில் மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் கலந்து கொண்டு திறந்து வைத்து பேசுகிறார். இந்த விழாவில் பாகிஸ்தான் வர்த்தக அமைச்சர் மற்றும் பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாகாண முதல்வர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். இந்தியா-பாக். இடையே வர்த்தக உறவை மேம்படுத்தும் பொருட்டு இந்த சோதனை சாவடி வழியாகப் பயணி களும் சரக்கு வாகனங்களும் அனுமதிக்கப்படவுள்ளன. (அ-2)

இளைமையின் துடிப்பிலே தோல்வி என்ற சொல்லுக்கு இடமேயில்லை.

- பல்வர் லைட்டன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இலங்கை வங்கியின் தலைவர் காமினி விக்கிரமசிங்கவை பதவியிலிருந்து நீக்க ஜனாதிபதி அதிரடி உத்தரவு

இலங்கை வங்கித் தலைவர் பதவியிலிருந்து காமினி விக்கிரமசிங்கவை உடனடியாக விலகுமாறு ஜனாதிபதியின் செயலகம் நேற்று முன்தினம் தொலைநகல் மூலம் உத்தரவிட்டுள்ளது.

தனது உத்தரவுகளை தொடர்ச்சியாக புறக்கணித்து வந்ததால் ஆத்திரமடைந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, காமினி விக்கிரமசிங்கவை உடனடியாக பதவிவிலகுமாறு தொலைநகல் மூலம் உத்தரவிட்டுள்ளார்.

இவரை ஜனாதிபதி தொலைபேசியில் தொடர்புகொண்ட சந்தர்ப்பத்தில் அவர் அலுவலகத்தில் இருந்துள்ளார். எனினும் அவரது செயலாளர் ஊடாக தலைவர் அலுவலகத்தில் இல்லை என்ற பதிலே ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

எனினும் காமினி விக்ரமசிங்க அலுவலகத்தில் இருந்தது ஜனாதிபதிக்குத் தெரியவந்துள்ளது. இதனையடுத்து ஆத்திரமடைந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ காமினி விக்ரமசிங்கவை உடனடியாக பதவியை இராஜினாமா செய்யுமாறு தொலைநகல்மூலம் உத்தரவிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் ஜனாதிபதியினால் பல உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் அவற்றை அவர் புறக்கணித்து வந்துள்ளார். இந்த உத்தரவுகள் குறித்து கேட்டறிவதற்காகவே ஜனாதிபதி அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டுள்ளார். எனினும் தொலைபேசி அழைப்பையும் புறக்கணித்ததை அறிந்து கொண்ட மகிந்த அவரைப் பதவி விலக்கத் தீர்மானித்துள்ளார்.

ஜனாதிபதியினால் முன்னர் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் இலங்கை வங்கியின் சட்டதிட்டங்களுக்கு புறம்பானது என வங்கித்துறை ஆலோசகர்கள் வங்கித் தலைவருக்கு ஆலோசனை கூறியுள்ளனர். இதனால் குறித்த உத்தரவுகளை வங்கித் தலைவர்ள புறக் கணித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷ இராணுவத்தின் கஜபா படைப்பிரிவிலிருந்து ஓய்வு பெற்றதை அடுத்து வேலையொன்றை தேடித்திரிந்த சந்தர்ப்பத்தில் இன்போமெடிக் நிறுவனத்தில் தொழில்வாய்ப்பொன்றை காமினி விக்ரமசிங்க பெற்றுக் கொடுத்துள்ளார்.

இதற்கு நன்றி கடனாக ராஜபக்ஷ குடும்பத்தினர் அதிகாரத்தை கைப்பற்றிய பின்னர் காமினி விக்ரமசிங்க இலங்கை வங்கி தலைவராக பணியமர்த்தப்பட்டார்.

இலங்கை வங்கித் தலைவர் பதவிக்கு காமினி விக்ரமசிங்கவை பாதுகாப்புத் செயலர்ளர் கோத்தபாய ராஜபக்ஷவே சிபாரிசு செய்துள்ளார். காமினி விக்ரமசிங்க இலங்கையின் முன்னணி வர்த்தகர் என்பதுடன் இன்போமெடிக் நிறுவனத்தின் தலைவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

## எனதருமை இளைஞர்களே! உங்களிடம் 'தியாகம்' உண்டா?

வீர இளைஞர்களுக்கு!...இப்படித்தான் சுவாமி விவேகானந்தர் தனது போதனையை ஆரம்பிக்கின்றார்.

கிரேக்க நாட்டு தத்துவஞானி சோக்கிரட்டீஸ், இளைஞர்களே! நான் சோக்கிரட்டீஸ் அழைக்கின்றேன்... என்று அறை கூவினார்.

தத்துவத்தையும் அறிவியலையும் தந்த உலக மேதைகள் இளைஞர்களை வழிப்படுத்துவதன் மூலமே இந்த உலகை நெறிப்படுத்த முடியும் என்று நம்பினர். அதற்கான முயற்சிகளையும் அவர்கள் மேற்கொண்டனர்.

இளைஞர்கள் விழித்தெழுந்தால் இந்த மண்ணில் எதைத்தான் சாதிக்க முடியாது. எல்லாம் ஒரு நொடிப்பொழுதில் நடந்தேறும். அத்துணை சக்தி இளைஞர்களுக்கு உண்டு.

எனினும் எங்கள் இளைஞர்கள் மத்தியில் போதிய விழிப்புணர்வு இல்லை. அதை ஏற்படுத்தவும் ஆளில்லை.

இளைஞர்களுக்கான விழிப்புணர்வு என்பது நாலாபக்கமும் எழவேண்டும்.

அறிவியல், சமூகவியல், பொருளியல், அரசியல் எனப் பல்வகைமை நோக்கில் இளைஞர்களுக்கான விழிப்புணர்வை முன்னெடுப்பதன் மூலமே எங்கள் தொடர்பில் நாம் கொண்டுள்ள கவலைகளுக்கும் ஆறாத வேதனைக்கும் பரிகாரம் தேட முடியும்.

இலங்கை முழுவதையும் நோக்குமிடத்து யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழ்க்கைச் செலவென்பது அதிகமாக இருப்பதாக புள்ளிவிபரங்கள் சான்றுபடுத்துகின்றன.

அதிலும் தொலைபேசி, மதுபானம், சிகரெட் ஆகியவற்றுக்கான செலவிலும் நாங்கள் முன்னணியில் நிற்பது வேதனையிலும் வேதனை.

இவற்றுக்கெல்லாம் முடிபுகட்டத் தவறும் பட்சத்தில் எங்கள் மண்ணில் களவும் கொள்ளையும் வழிப்பறிப்பும் அடாவடித்தனங்களும் மிக மோசமாக மலிந்துபோகும்.

எனவே அன்புக்குரிய இளைஞர்களே! தொலைபேசி உரையாடலில் ஏகப்பட்ட பணத்தை விரயம் செய்கிறோம். இதுபோல மது, சிகரெட் ஆகியவற்றுக்கான உங்கள் செலவை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள்.

கூடவே உங்கள் பெற்றோர்கள் உங்களுக்கான உணவுக்காகவும் ஏனைய செலவுக்காகவும் விடிகாலைப் பொழுது முதல் தங்கள் உடல் உழைப்பைத் தருவதை ஒருகணம் சிந்தித்துப் பாருங்கள்.

உங்கள் வாழ்வுக்காக தங்கள் வியர்வையைச் சிந்தும் பெற்றோரிடம் இருக்கக்கூடிய பிரதியுபகாரம் கருதாத தியாகத்தை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள் .

நீங்கள் மோட்டார் சைக்கிளில் ஓடித்திரிய கையடக்கத் தொலைபேசியில் காதல் லீலை புரிய, அவர்கள் வயதான நேரத்தில், வெயில் காய வேண்டியது ஏன்?

எனதருமை இளைஞர்களே! உங்களில் எத்தனையோ தியாகிகள் இருப்பதை நாம் மறுக்கவில்லை.

அதேவேளை, நீங்கள் அத்தனைபேரும் உங்கள் குடும்பத்திற்காக உங்கள் ஊருக்காக, நாட்டிற்காக உங்கள் வீண் செலவுகளை தியாகம் செய்வதோடு உங்கள் குடும்பத்தின் உயர்வுக்காக, உங்கள் சகோதரர்களின் கல்வி மேம்பாட்டிற்காக பாடுபடுங்கள். அதுபோதும் எங்கள் மண்ணின் புகழ் வானுயர்ந்து நிற்கும்.

## பொங்கல் விழா

(விசுவமடு)

வரலாற்று புகழ்மிக்க புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோவில் வருடாந்த பங்குனி உத்தர பொங்கல் விழா இன்று வியாழக்கிழமை இரவு பகலாக நடைபெறவுள்ளது. (அ-3-255)

## விளையாட்டு விழா

மயிலணி ஜனசக்தி முன்பள்ளி விளையாட்டு விழா இன்று வியாழக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மயிலணி அண்ணமகேஸ்வரர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யா/ மயிலணி சைவ மகா வித்தியாலய அதிபர் இரா. ஜெயக்குமார், திருமதி இந்திராதேவி ஜெயக்குமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)

## அந்தர் யோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இல. 17 மருதனார் மடம் வீதி உரும்பிராய் சந்தியில் அமைந்துள்ள இராமகிருஷ்ண மிஷன் நலன் புரி நிலையத்தில் நாளை வெள்ளிக் கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரானந்தாஜி மகராஜ் தலைமையில் அந்தர் யோகம் நடைபெறவுள்ளதாக மிஷன் தலைவர் சுவாமி சர்வ ரூபானந்தா அறிவித்துள்ளார். (அ)

## மரதன் ஓட்டம்

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வித் திணைக் களத்தின் விளையாட்டு போட்டியில் ஓர் அங்கமாகிய பாடசாலைகளுக்கிடையிலான ஆண், பெண் ஆகியோருக்கான அரை மரதன் ஓட்டப்போட்டிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்மரதன் ஓட்டம் வவுனியா இறம்பைக் குளம் பரக்கும் மகா வித்தியாலயத்தில் இருந்து ஓமந்தை மத்திய கல்லூரி வரை நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார். (அ-3-15)


## க.பொ.த. சாதாரணதர பரீட்சைப் பெறுபேறுகள்

**யாழ்/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி**

கிருஸ்ணவி வேதீஸ்வரன் (4ஏபி3 சிஎஸ்), டொன்சியா தேவராசா (2ஏ2பி 4சிஎஸ்), தேவறம்மியா தேவராஜ் (2ஏபி 2சி4எஸ்), றெகான்சியா விக்னேஸ்வரன் (ஏ3பி5எஸ்), குகமயூரி பரமராஜ் (ஏபி2சி 5எஸ்)

**யாழ்/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்**

ச.டர்சிகா (4ஏ3பி2எஸ்), ச.வேணுஜா (3ஏபி 4சிஎஸ்), தி.தயாளினி (ஏ2பி 3சி 3எஸ்) , நி.கிருஷ்ண தயாளினி (ஏபி5சி 2எஸ்), யோ.மதிசாந்தன் (ஏ4 சி5எஸ்)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## காலையில் சூரிய நமஸ்காரம் செய்வது எதற்கு?

தொன்றுதொட்டே பாரதமக்கள் பின்பற்றி வந்த ஓர் ஆசாரமுறை சூரியநமஸ்காரம். உடல் மற்றும் மனது உறுதியடையவும் அமைதியடையவும் உதவும் ஆசாரமிது. இதை விதிமுறைகள் படிசெய்யும்போது உடற்பாகங்களில் ஆற்றலும் சக்தியும் வருகின்றது.

மேற்கத்தேய நாடுகள் உட்பட உலகின் எல்லாப்பாகங்களிலும் இந்த ஆசாரமுறை பிரசித்தி பெற்றிருக்கிறது. ஜிம்னாஸ்டிக், சன்பாத் என்ற பெயர்களில் சூரிய நமஸ்காரத்தை உட்படுத்திய உடற்பயிற்சிகள் செய்து வருகின்றனர்.

சூரிய நமஸ்காரம் வாயிலாக நமது உடலிலுள்ள எல்லா மூட்டுக்களுக்கும் அசைவு ஏற்படுகின்றது. சருமத்தில் விற்றமின் டி உற்பத்தி செய்யும் திறன் காலை சூரிய ஒளிக்கதிர்களுக்கு உண்டு. கல்சியம் உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் திறனும் உண்டு என்பது அறிவியல் துறைகள் அங்கீகரித்துள்ளன. மேலும் உடலுறுப்புக்கள் உறுதி பெறுவதால் காச நோயணுக்களின் ஆக்கிரமிப்பையும் தடுக்கின்றது.

தொடர்ச்சியாக சூரிய நமஸ்காரம் செய்வதனால் அகால வயது முதிர்ச்சியை ஓரளவுக்குத் தடை செய்யலாம். மூட்டுக்கள் நல்ல இலாவகமடைகின்றன. தொப்பை வயிறு வருவதை கட்டுப்படுத்த இயல்கின்றது. மனதுக்கும் உடலுக்கும் உற்சாகம் நிலைநிறுத்தவும் சூரிய நமஸ்காரம் உதவுகின்றது.

சூரிய நமஸ்காரம் செய்பவர்கள் ஆரம்பத்தில் அனுசரிக்க வேண்டிய சில விடயங்களைப் பார்ப்போம். பரிசுத்தமான எளிய வாழ்க்கை வாழவேண்டும். அளவான உணவு அருந்த வேண்டும். குளிப்பது தண்ணீரிலானால் மிக நன்றாயிருக்கும். விசாலமானதும் தூய்மையானதும் காற்றோட்டமுள்ளதுமான இடத்தில் நமஸ்காரம் செய்ய வேண்டும். நமஸ்கார வேளையில் மிகஅவசியமான ஆடை மட்டும் தளர்த்தியாக அணியவேண்டும்.

தேநீர், கோப்பி, கொக்கோ, புகையிலை, மதுபானம் முதலியவை அருந்த வேண்டாம்.

இப்படி அநேக விடயங்கள் கவனித்து சூரியநமஸ்காரம் ஆரம்பிக்கவேண்டும்.

# நாடுமுழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்துவோம்!

## ஹபீஸ் சையிதீன் எச்சரிக்கை



(இஸ்லாமாபாதி)

எங்களின் நேட்டோ எதிர்ப்புத் தாக்குதலை முறியடிக்க திராணியில்லாமல் தான் என் தலைக்கு அமெரிக்கா 10 மில்லியன் டொலர் பரிசுத்தொகை அறிவித்துள்ளது.

ஆனாலும் நாங்கள் குகைக்குள் ஓடி ஒளியமாட்டோம். நேட்டோ படை மற்றும் அமெரிக்காவின் வான் தாக்குதலுக்கு எதிராக நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்துவோம் என ஹபீஸ்சையிதீன் கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் அமெரிக்கா, லஷ்கர் இ தொய்பா அமைப்பின் தலைவர் ஹபீஸ்சையிதீன் தலைக்கு 10 மில்லியன் டொலர் பரிசுத் தொகை அறிவித்தது. இதனை இந்தியா வரவேற்றுள்ளது.

இந்நிலையில் அல்ஜசீரா தொலைக்காட்சிக்கு ஹபீஸ்சையிதீன் அளித்த பேட்டி வருமாறு,

எதையும் முடிவு எடுப்பதில் அமெரிக்காவிற்கு அறிவும் ஆர்வமும் சற்றுக்குறைவு அல்லது எங்கள் இயக்கத்தைப் பற்றி அமெரிக்காவிற்கு இந்தியா தவறான தகவலினை அளித்திருக்கலாம். பாகிஸ்தானில் நேட்டோப்படை வான் தாக்குதல் மீண்டும் ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளது. இதற்கு எங்களின் எதிர்ப்பினை முறியடிக்க திராணியில்லை. இதன் காரணமாகத்தான் என் தலைக்கு 10 மில்லியன் டொலர் பரிசுத்தொகை அறிவித்துள்ளது. ஆனாலும் நாங்கள் குகைக்குள் ஓடிச்சென்று ஒளிந்துகொள்ள மாட்டோம். நேட்டோ படைக்கு எதிராக நாடு தழுவிய போராட்டம் நடத்துவோம் என்றார்.

எதிர்வரும் 8 ஆம் திகதி இந்தியா வரவுள்ள பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி, பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து பேசுவார் என தெரிகின்றது.

அப்போது ஹபீஸ்சையிதீன் குறித்து இருவரும் ஆலோசிக்க வாய்ப்புள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)




# மக்களுக்கு எதிரான தாக்குதலை நிறுத்துவதாக சிரியா வாக்குறுதி

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துக்கு எதிராக கடந்த ஓராண்டாக மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். அப்பாவி மக்கள் மீதும் போராட்டக்காரர்கள் மீதும் இராணுவ தாக்குதல்களை ஆசாத் நடத்தி வருகின்றார்.

இந்த தாக்குதலில் இதுவரை குழந்தைகள், பெண்கள் உட்பட 8 ஆயிரத்திற்கு-அதிகமானோர் பலியாகி உள்ளனர்.

இதற்கு ஐ.நா. மற்றும் சர்வதேச நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. மக்களுக்கு எதிரான இராணுவ தாக்குதலை நிறுத்த ஐ.நா. முன்னாள் பொதுச் செயலாளர் கோபி அனான் தலைமையில் அரபு லீக் சமரச குழுவினர் சிரியா அரசுடன் தொடர்ந்து பேச்சுநடத்தி வருகின்றனர்.

இதையடுத்து எதிர்வரும் 10 ஆம் திகதிக்குள் இராணுவத்தை வாபஸ் பெறுவதாகவும் மக்களுக்கு எதிராக தாக்குதலை நிறுத்துவதாகவும் சிரியா ஒப்புதல் அளித்துள் ளது.

இந்த தகவலை கோபி அனான் ஐ.நா. பாதுகாப்பு குழுவில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஐ.நா.வுக்கான அமெரிக்க தூதுவர் சூசன் ரைஸ் கூறுகையில், இராணுவத்தை வாபஸ் பெறுவதாக கோபி அனானுக்கு சிரியா வெளிவிவகாரத்துறை அமைச்சர் கடிதம் அனுப்பியுள்ளார்.

இதற்கு ஆதரவு அளிக்கும்படி உலக நாடுகளை அனான் கேட்டுக் கொண்டுள்ளார். அனானுடைய அமைதி திட்டத்திற்கு சிரியா எந்த நிபந்தனையும் விதிக்கவில்லை. என்றார்.

ஆனால் கடந்த காலங்களில் அளித்த வாக்குறுதிகளை சிரியா நிறைவேற்றவில்லை. அதுபோல் இந்த வாக்குறுதியையும் நம்புவதற்கில்லை என்று மேற்கத்தைய நாடுகள் கூறியுள்ளன. (அ-2)

# பாகிஸ்தானில் சக்திவாய்ந்த குண்டுவெடிப்பு ஏழு பேர் உயிரிழப்பு; ஒன்பது பேர் படுகாயம்



(இஸ்லாமாபாதி)

பாகிஸ்தானின் வடமேற்கில் கைபர் மலைப்பகுதி உள்ளது. இங்குள்ள குர்ராகை கிராமத்தில் இருந்து ஜாம்ரூத் என்ற இடத்துக்கு ஒரு வான் சென்று கொண்டிருந்தது.

அப்போது வீதியோரம் வைக்கப்பட்டிருந்த சக்திவாய்ந்த குண்டு வெடித்தது. அதில் வான் முழுமையாக நொருங்கியது.

இச்சம்பவத்தில் வானில் பயணம் செய்த 7பேர் உயிரிழந்தனர். 9பேர் படுகாயம் அடைந்தனர். இவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 3 பேரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது. இந்தத் தாக்குதலை தீவிரவாதிகள் நடத்தியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

எனவே இச்சம்பவத்தில் தொடர்புடையவர்களை கைதுசெய்ய தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (அ-2)

# மியன்மார் மீதான பொருளாதாரத்தடையை விலக்கிக்கொள்ள ஐரோப்பிய யூனியன் முடிவு

மியன்மாரில் எதிர்க்கட்சித் தலைவர் ஆங்சாங்சூகி கட்சி இடைத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளதால் மியன்மார் நாட்டின் மீதான பொருளாதார தடையை ஐரோப்பிய யூனியன் விலக்கிக்கொள்ள முடிவு செய்துள்ளது.


நடந்து முடிந்த மியான்மார்பாராளுமன்ற இடைத் தேர்தலில் ஜனநாயக தேசிய லீக் கட்சி மகத்தான வெற்றி பெற்றது. அக்கட்சியின் தலைவர் ஆன்சாங்சூகி இது மக்களின் வெற்றி. விரைவில் புதிய சகாப்தம் ஆரம்பிக்கும் என கூறினார்.

இந்த நிலையில் அந்நாட்டில் கடந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இருபது ஆண்டுகளாக அமெரிக்காவும் ஐரோப்பிய யூனியன் நாடுகளும் பொருளாதார தடைவிதித்திருந்தது. அதனை விலக்கிக்கொள்ள முடிவு செய்துள்ளது.

இது குறித்து ஐரோப்பிய யூனியன் கவுன்சிலின் வெளியுறவுத் துறை விவகாரங்களுக்கான செய்தி தொடர்பாளர் மஜ்ஜாகோவுச்சிஜான் சிக் பிரசெல்ஸ் நகரில் கூறியதா வது,

மியன்மார் மீதான தடை குறித்து பரிசீலக்கப்படும் முன்னதாக ஆசியா நாடுகளின் கருத்துகளை கேட்ட பின்னரே முடிவு செய்யப்படும். முன்னதாக ஜனாதிபதி தைன் ஷென் 2008 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அரசியல் சட்ட த்தை திருத்த வேண்டும். குறிப்பாக எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு நடக்கவுள்ள பொதுத்தேர்தலில் சூகி கட்சியின் எதிர்காலம் உள்ளிட்டவைகள் கண்காணிக்கப்படும் என்றார். (அ-2)

# ஜப்பானை உலுப்பிய பயங்கர சூறாவளி



ஜப்பானில் நேற்று முன்தினம் கடும் சூறாவளி புயல் வீசியதில் நான்கு பேர் உயிரிழந்தனர். ஜப்பானின் தெற்குப் பகுதியில் உள்ள ஹான்ஷூ தீவில் நேற்று முன்தினம் 108 கிலோ மீற்றர் வேகத்தில் பயங்கர சூறாவளிக் காற்று வீசியது. இதைத் தொடர்ந்து பலத்த மழையும் பெய்தது.

இதனால் டோயாமா மற்றும் ககாவா நகரங்களில் மரங்களும் மின் கம்பங்களும் தொலைபேசி கோபுரங்களும் வீதிகளில் சாய்ந்தன. இதனால் பெரும்பாலான இடங்கள் இருளில் மூழ்கின.

பல்வேறு இடங்களில் இந்தப் புயலால் 160 பேர் காயமடைந்துள்ளனர். சூறாவளி புயலால் டோக்கியோ மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் 500 விமானங்கள் இரத்துச் செய்யப்பட்டன. இதேபோல் ரயில் மற்றும் வீதிப்போக்குவரத்தும் சூறாவளியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. மின்வயர்கள் துண்டிக்கப்பட்டதால் வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தன.புயல் காரணமாக சுமார் ஒரு இலட்சம் பேர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர். அவர்கள் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.


228 உள்ளூர் விமான சேவையும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் சுமார் 32 ஆயிரம் பயணிகள் பாதிக்கப் பட்டுள்ளனர். புயல் காரணமாக மேற்கு ஜப்பானில் தற்போது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக் கப்பட்டுள்ளது. (அ-2)

# மயிரிழையில் உயிர் தப்பினார் கிலானி

பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி பயணம் செய்த விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டது. இந்த விபத்தில் பிரதமருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டது.ராவல்பிண்டியில் உள்ள விமானப்படைத்தளத்திலிருந்து பிரதமர் கிலானி, மூத்த அமைச்சர்களுடன் புறப்பட்ட விமானம் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே கோளாறு கண்டுபிடிக்கப்பட்டு சாக்லா விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

இந்த விமானத்தில் பிரதமர் கிலானி, தகவல் தொடர்புத்துறை அமைச்சர் ஃபிர்தௌஸ் ஆஷிக் அவான் ஆகியோர் பயணம் செய்தனர். விமானத்தில் தொழில்நுட்பக்கோளாறு ஏற்பட்டதாக விமான கட்டுப்பாட்டு நிலையத்துக்கு விமானி அறிவித்தார். (அ-2)

# உலகின் மிக வயதான பெண் மருத்துத்துவர் மரணம்



உலகின் மிக வயதான பெண் மருத்துவர் லையிலா டென்மார்க் தனது 114 ஆவது வயதில் மரணமடைந்துள்ளார். இவர் அமெரிக்காவின் ஜோர்ஜியா மாகாணத்தை சேர்ந்தவர். கடந்த 1898 ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி பிறந்தார். குழந்தைகள் நல சிறப்பு வைத்தியராவார்.


இவர் உலகின் மிகவும் வயதான வர்களில் 4 ஆவது நபர் என கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற்றிருந்தார். இந்நிலையில் கடந்த முதலாம் திகதியன்று இறந்ததாக அவரது உறவினர்கள் தெரிவித்தனர். இவர் இறந்தபோது இவருக்கு வயது 113 வருடம் 312 நாட்கள் என கணக்கிடப் பட்டுள்ளது. (அ-2)

# பொருளாதாரத்தடை ஓராண்டுக்கு நீடிப்பு

வடகொரியா இம்மாதம் மத்தியில் செயற்கைக்கோள் தாங்கிய றொக்கெட்டை ஏவ இருக்கின்றது. இத்திட்டத்திற்கு அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகள் எதிர்ப்புத்தெரிவித்து வருகின்றன. ஆனால் வடகொரியா திட்டமிட்டபடி றொக்கெட் ஏவப்படும் என உறுதியாக தெரிவித்துவிட்டது.

இதனை அடுத்து வடகொரியா மீது பொருளாதாரத்தடையை மேலும் ஒரு ஆண்டு நீடிப்பதாக ஜப்பான் நேற்றுமுன்தினம் அறிவித்தது. இதை மந்திரிசபை செயலாளர் ஒசாமூ புஜிமுரா நிருபர்களிடம் தெரிவித்தார். கடந்த 2006 ஆம் ஆண்டு வடகொரியா ஏவுகணை சோதனை நடத்தியதும் ஜப்பான் முதல் தடவையாக பொருளாதார தடையை விதித்தது. அதன் பின்னர் ஆண்டுதோறும் அதை நீடித்து வந்தது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஐ.பி.எல். முதல் போட்டியில் சொந்த மண்ணில் மும்பையிடம் தோற்றது சென்னை சுப்பர் கிங்ஸ்



கிரிக்கெட் ரசிகர்களால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட 5-வது ஐ.பி.எல். தொடரின் முதல் ஆட்டம் நேற்று சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்றது.

இதில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் ஹர்பஜன் சிங்கை புதிய தலைவராகக் கொண்ட மும்பை இந்தியன்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவர் ஹர்பஜன் சிங் பந்துவீச முடிபு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென்னை அணி 19.5 ஓவர்கள் முடிபில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 112 ஓட்டங்களை எடுத்தது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய எப் டு பிளஸ்சிஸ் 3 ஓட்டங்களும், முரளி விஜய் 10 ஓட்டங்களும் எடுத்து ஏமாற்றமளித்தனர்.

மும்பை அணியின் அதிரடியான பந்து வீச்சால் அடுத்தடுத்து விக்கெட்டுகள் சரியத் தொடங்கியது.

இறுதியில் சென்னை அணி 19.5 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 112 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

சுரேஷ் ரெய்னா மட்டும் அதிகபட்சமாக 36 ஓட்டங்கள் எடுத்தார். டுவைன் பிராவோ 19 ஓட்டங்களும், பத்ரிநாத் 10 ஓட்டங்களும் எடுத்தனர்.

மற்ற வீரர்கள் அனைவரும் ஒற்றை இலக்க ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

இதனையடுத்து மும்பை இந்தியன்ஸ் அணி 113 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற சுலப இலக்குடன் களமிறங்கிய அவ் அணி 16.5 ஓவர்களில் 2 விக்கெட் மட்டுமே இழந்து 115 ஓட்டங்களை எடுத்தது.

இதனால் மும்பை இந்தியன்ஸ் அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மும்பை இந்தியன்ஸ் சார்பாக லெவி 50 ஓட்டங்களையும் டெண்டுல்கர் 16, ராயுடு 18 மற்றும் பிராங்லின் 25 ஓட்டங்களையும் எடுத்தனர்.

சென்னை சார்பாக பொல்லிங்கர் மற்றும் பிராவோ தலா





ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக மும்பை இந்தியன்ஸ் அணியின் லெவி தெரிவானார்.

ஐ.பி.எல். தொடரின் இன்றைய போட்டியில் கொல்கத்தா மற்றும் டில்லி அணிகள் கொல்கத்தாவில் மோதுகின்றன.

இப்போட்டி இன்று இரவு 8 மணிக்கு ஆரம்பமாகின்றது.

# கொழும்பு டெஸ்ட்: இங்கிலாந்து அபாரம்



(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாளான நேற்று இங்கிலாந்து அணி அதிரடியாக விளையாடி வருகிறது.

இலங்கையில் நடைபெறும் இந்த டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் இலங்கை அணி 75 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதனையடுத்து இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் கொழும்பில் ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.

இலங்கை அணி முதல்நாள் ஆட்டநேர முடிபில் 90 ஓவர்களிலில் 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 38 ஓட்டங்களை எடுத்திருந்தது.

அஞ்சலோ மத்யூஸ் 41 ஓட்டங்களுடனும், சுராஜ் ராண்டிவ் 5 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

இரண்டாம் நாளான நேற்று ஆட்டத்தை தொடர்ந்த இலங்கை அணி நிதானமாக விளையாடியது. இருப்பினும் சுராஜ் ராண்டிவ் 12 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் சுவானின் பந்துவீச்சில் பீற்றர்சனிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

பின்னர் அடுத்தடுத்து விக்கெட்டுக்கள் சரியத் தொடங்கியது. இறுதியில் இலங்கை அணி 111.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 275 ஓட்டங்களை எடுத்தது.

இலங்கை சார்பில் அஞ்சலோ மத்யூஸ் 57 ஓட்டங்களை பெற்றார். தம்மிக்க பிரசாத் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தார்.

இங்கிலாந்து தரப்பில் கிரேம் சுவான் 4 விக்கெட்டுக்களையும், ஜேம்ஸ் அண்டர்சன் 3 விக்கெட்டுக்களையும், ரிம் பிரஸ்ணன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதலுக்கு தமது முதலாவது இன்னிங்ஸுக்காக களமிறங்கி சிறப்பாக விளையாடிய இங்கிலாந்து அணி, இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிபில் 66 ஓவர்களில் 1 விக்கெட்டினை இழந்து 154 ஓட்டங்களை எடுத்துள்ளது.

தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கிய அணித்தலைவர் அன்ரூ ஸ்ரோட்ஸ் 61 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ஆட்டமிழந்தார்.

ஆனால், மற்றொரு தொடக்க ஆட்டக்காரரான அலிஸ்டயர் குக் சிறப்பாக விளையாடி 77 ஓட்டங்களையும்அடுத்து களமிறங்கிய ஜொனாதன் ட்ரொட்15 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காமல் களத்தில் இருக்கின்றனர்.

இன்று ஆட்டத்தின் 3-வது நாளாகும்.



கொழும்பிலிருந்து யாழ்.வருகை தந்த கடற்படை உதைபந்தாட்ட அணிக்கும் யாழ்ப்பாண அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது. இப் போட்டியில் கடற்படை உதைபந்தாட்ட அணி 2-1 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது. இரு அணிகளும் மோதுவதை முதல் இருபடங்களிலும்,

சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் இடம்பெற்ற உதைபந்தாட்டப் பயிற்சி முகாமை மற்றைய படத்திலும் காணலாம்.

# சர்வதேச சட்டங்களிலிருந்து...

ஆணைக்குழு அறிக்கைப் பரிந்துரைகள் அமுல்படுத்துவது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட வேண்டும் என மங்கள சமரவீர கூறினார்.

1989- 1990களில் இலங்கை மனித உரிமை விவகாரத்தை தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் தற்போதைய சிரேஷ்ட அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவும் மனித உரிமைப் பேரவைக்கு எடுத்துச் சென்றனர்.

எதிர்க் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் தாமும் இந்த நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியதாக மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை தொடர்பில் அரசாங்கத்தின் உறுதியான நிலைப்பாட்டை பொதுமக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது உரையாற்றிய அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பியசிறி விஜநாயக்க இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

ஏதோவொரு வகையில் ஜெனிவாப் பிரேரணை நாட்டுக்குப் பாதகமாக அமையும் பட்சத்தில் அதற்கு முகங்கொடுக்ககூடிய வழிமுறைகளை ஆராய வேண்டும் எனவும் அவர் கூறினார்.

ஒரு நாடு என்ற அடிப்படையில் அரசாங்கம் இதுகுறித்து உரிய வேலைத் திட்டங்களை செயற்படுத்த வேண்டும்.

அதேவேளை ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட பிரேரணை ஐக்கிய நாடுகளின் ஏற்பாடுகளை மீறும்வகையில் அமைந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் ஏற்பாடுகளுக்கு அமைய எந்தவொரு நாட்டினதும் இறைமைக்குப் பாதிப்பை ஏற்படுத்த முடியாது எனவும் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது அவர் குறிப்பிட்டிருந்தார்.

எவ்வாறாயினும் அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல, பிறிதொரு கருத்தை வெளியிட்டார். அண்மையில் அமெரிக்காவினால் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட பிரேரணை நாட்டு மக்களுக்காகவே நிறைவேற்றப்பட்டதாக அவர் தெரிவித்திருந்தார். (எ-11)

# 'ஜனாதிபதியால் மட்டுமே...

களுக்கு பதிலளிப்பதற்கு எழுந்த துறை முகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதிய மைச்சர் நிர்மல் கொத்தலாவல,

இக்கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கு நான் தயார். அதனை ஆற்றுப்படுத்துவேன். எனினும் வடக்குக்கு அரசாங்கம் ஒன்றுமே செய்யவில்லை என்று எதிர்கட்சித் தலைவர் நாட்டை உலகுக்கு காட்டி கொடுத்துவிட்டார் என்று குற்றஞ்சாட்டினார்.

இதனிடையே எழுந்த ரணில் விக்கிரம சிங்க,எனக்கு இந்த சபையில் பிரதமர் பதில ளிக்கலாம். ஒவ்வொருவரும் ஜனாதிபதி அல்ல பிரதமரும் அல்ல என்று கூறினார்.

இதன்போது ஒழுங்கு பிரச்சினை எழுப் பிய ஆளும் கட்சி எம்.பியான ஏ.எச்.எம்.அஸ்வர், எதிர்கட்சித்தலைவரின் இந்தக் கூற்றை வன்மையாகக் கண்டிக்கின்றேன். அக் கூற்றை அவர் விலக்கிக் கொள்ள வேண்டும் என்றார்.

இதனிடையே கருத்துத் தெரிவித்த சபா நாயகர் சமல் ராஜபக்ஷ, கேட்ட கேள்வி களுக்கு அநாவசியமான வசனங்களை பயன் படுத்த வேண்டாம்.

அவ்வாறு பயன்படுத்தினால் அடுத்த கட்ட நடவடிக்கையாக என்ன செய்ய வேண்டும் என்று எனக்குத் தெரியும் என்றார். (எ-11)

# இலங்கை நிலைமை...

கேட்டறிந்து கொண்டதாகக் கூறப்படுகின்றது.

அதேவேளை, இலங்கையில் இடம்பெற்ற போரின்போது இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றம் செய்வதற்கு அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளை சுவீடனுக் கான இலங்கைத் தூதுவர் எடுத்துக் கூறிய தாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரை களை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக வும் அவர் சுவீடன் வெளிவிவகார அமைச்சரி டம் கூறியுள்ளார்.

அதேபோன்று, இலங்கையின் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை முன்வைப் பதற்கும் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற் கொண்டுவருவதாகவும் இச்சந்திப்பில் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் அரசாங் கம் மேற்கொண்டுவரும் அபிவிருத்தித் திட்டங் களை நேரில் வந்து பார்க்கும் படியும் சுவீடன் வெளிவிவகார அமைச்சருக்கு அழகப்பெரும இதன்போது அழைப்பு விடுத்தார்.

இந்த அழைப்பை ஏற்றுக்கொண்ட சுவீடன் வெளிவிவகார அமைச்சர், தனது இலங்கைக் கான விஜயத்தை ஆவலுடன் எதிர்பார்த்திருப் பதாக தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர் மானத்தை தொடர்ந்து, சுவீடனுக்கான வெளி விவகார அமைச்சரை இலங்கைத் தூதுவர் சந்தித்துள்ளார். (எ-11)

# கொழும்பில்...

கடத்தப்பட்டுள்ளார்.

வெள்ளைவானில் வந்த நால்வர் இவரது மோட்டார் சைக்கிளை இடித்து விழுத்தி இவரை பலவந்தமாக வானில் ஏற்றிச் சென் றுள்ளனர்.

சில நிமிடங்களுக்குள் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பாக பொது மக்கள் கண்காணிப்பு ஆணைக்குழு விடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-11)

# நல்லிணக்க...

முடியாது. சில பிரிவுகளில் ஆணைக்குழு தனது வரையறைகளை மீறி முன்மொழிவு களை செய்துள்ளது.

இலங்கைக்கு எதிரான போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்த எந்தவொரு நாட்டுக்கோ அல்லது சர்வதேச அமைப்பிற்கோ அனுமதியளிக்கப்பட மாட் டாது என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரி வித்துள்ளார். (எ-11)

# புலிகளின் பயிற்சி...

பெற்ற 150 விடுதலைப் புலிகள் நாச வேலை களை மேற்கொள்வதற்காக இலங்கைக்குள் ஊடுருவி இருப்பதாக கொழும்பு ஆங்கில ஊடக மான ஐலன்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டி ருந்தது.

இந் நிலையில் இச்செய்தி தொடர்பில் புதுடில்லியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் ஐலன்ட் பத்திரிகையில் வெளியான செய்தி முற்றிலும் அடிப்படையற் றது என தெரிவித்துள்ளார்.

அதேவேளை தமிழக மீனவர்கள் கடற் படையினரால் தொடர்ச்சியாக தாக்கப்படும் சம்பவங்கள் குறித்தும் அவர் கருத்து வெளி யிட்டிருந்தார்.

இவ்விவகாரம் தொடர்பில் இவ்விரு நாடு களின் அதிகாரிகள் மற்றும் இவ்விரு நாட்டு மீனவர்களுக்கிடையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாகவும் இதன் விபரங்கள் தமிழக அரசுக்கு தெரிவிக்கப்பட்டு வருவதாக வும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தமிழக மீனவர்கள் தாக்கப்படும் சம்பவங்களை முடிவுக்கு கொண்டுவரும் வகையில் ஒன்றரை வருடங்களுக்கு முன் னரே ஒரு உடன்பாடு ஒன்று தயாரிக்கப்பட்ட தாகவும் அந்த உடன்பாட்டின்படி குறிப்பிட்ட சில தினங்களுக்கு இந்திய மீனவர்கள் இலங்கை கடல்வரை சென்று மீன் பிடிக்கலாம் எனவும் குறிப்பிட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (எ-11)

# பாரத கொலை...

முன்பு கட்டளை பிறப்பித்திருந்தது.

இதேவேளை, பொலிஸ் இன்ஸ்பெக்டர் ரஞ் சன் நீதிமன்றத்தில் காலையில் காணப்பட் டார்.

எனினும், விசாரணையின்போது அவ ரது பெயர் கூறி அழைக்கப்பட்ட போது அவரைக் காணவில்லை எனவும் கூறப்படு கின்றது. (எ-11)

# தமிழ்க் கூட்டமைப்புக்கு...

மயிலம்பாவெளி விபுலாநந்த வித்தியாலயத்தின் மாடி கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடை பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய முதலமைச்சர் சந்திரகாந்தன்,

எமது கல்வித்துறை மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதற்கு காரணம் கடந்தகால அரசியல் தலைமைகளே. அவர்கள் விட்ட தவறு களை நாம் விடுவதற்கு தயாராக இல்லை. எது எப்படி இருப்பினும் எமது பிரதேசம் சகல துறைகளிலும் வளர்ச்சி அடைய வேண்டும் என்ட தேனை எண்ணம்.

இன்றைய செய்திகளைப் பார்க்கின்ற போது மிகவும் சந்தோசமாக இருக்கின்றது. பல தசாப்தகால அரசியல் வரலாற்றினைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் போன்ற கட்சிகளுக்கு முன் உதாரணமாகவும் வழிகாட்டியாகவும் எமது தமிழ் மக்கள் விடுத லைப் புலிகள் கட்சி இருக்கின்றது என்பதனை பார்க்கும் போது சந்தோசப்படுகின்றேன்.

கடந்த 18ஆம் திகதி மட்டக்களப்பிலே நாம் நடத்திய எமது கட்சியின் தேசிய மாநாட்டுக்கு பெருந்தொகையான மக்கள் வந்திருந்தனர். அம் மாநாடு அரசியல் வட்டாரத்தில் பாரிய திருப்புமுனைகளையும், உணர்ச்சி வார்த்தை களையும் வீரவசனங்களையும் மக்கள் மத்தி யில் பேசி வாக்குகளைப் பெறுகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் போன்றோரை வேலை செய்யவைத்திருக்கின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மட்டக் களப்பில் ஒரு தேசிய மாநாட்டினை நடத்த திட்டமிட்டிருக்கின்றனர் எமது கட்சியின் தேசிய மாநாட்டின் பிரதிபலிப்பே இவ்வாறான தொரு தேசிய மாநாட்டினை கூட்டமைப்பினர் நடத் தத் திட்டமிடுவதற்கு காரணமாகும்.

பல தசாப்தகால அரசியல் வரலாற்றினைக் கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் எமது தேசிய மாநாட்டினை கண்டுதான் அவர்களும் ஒரு மாநாட்டினை நடத்த வும் கட்சிக்கு புதிய உறுப் பினர்களையும் இணைத் துக் கொள்ள திட்டமிட்டி ருக்கின்றனர்.

எமது தேசிய மாநாட் டினை பார்த்தாவது ஞானம் பிறந்திருக்கின் றதே கூட்டமைப்பின ருக்கு. உணர்ச்சி வார்த் தைகளை மட்டும் அள்ளி வீசி வாக்குகளைப் பெற்ற கூட்டமைப் பினரை மக் களுக்காக ஓடி வேலை செய்ய வைத்திருக் கின்றோம்.

இதையே நாமும் எதிர்பார்க்கின்றோம், ஜனநாயக அரசியலில் போட்டித்தன்மை வேண் டும்.

அப்போதுதான் அரசியல் போட்டியின் காரணமாக அரசியல் வாதிகள் மக்களுக்காக ஓடி வேலை செய்வார் கள்.

எது எப்படி இருப் பினும் வெறுமனே நான்கு வருட அனுபவம் கொண்ட எமது கட்சி பல தசாப்த கால அரசியல் வரலாற்றி னையும் பழுத்த அரசி யல் தலைவர்களையும் கொண்ட தமிழ்த் தேசி யக் கூட்டமைப் பின ருக்கு வழிகாட்டியாக வும் அரசியல் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று முன்னு தாரணமாகவும் இருப் பதில் சந்தோசமே என் றார். (ந-11,5)


தவறிவிட்டது

உச்சியோடை ஒழுங்கை, மானிப்பாய் வடக்கு, மானிப்பாய் எனும் முகவரியினையுடைய துரைசிங்கம் சுகந்தன் ஆகியவருடைய தேசிய அடையாள அட்டை(852334304V), சாரதி அனு மதிப்பத்திரம், சேவை அடையாள அட்டை (CTB), வாகனக் காப்புறுதிப் பத்திரங்கள் என்பன மானிப்பாய் சந்திக்கு அருகாமையில் தவறிவிட் டது. கண்டெடுத்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

TP: 0771907469, 0779176812 (8104)

யாழ் நகர் ஆசிரியர்கள் தற்போது சங்கானையிலும்...

றோயல் அக்கடமி

பிரதான வீதி சங்கானை (இலங்கை வங்கி அருகில்)

A/L 2014

ஆரம்பம்: ஏப்ரல் 05 வியாழக்கிழமை மாலை 4.00 மணி

வர்த்தகப்பிரிவு
- பொருளியல் : வரதராஜன்
- கணக்கீடு : பகீரதன்
- வணிகக்கல்வி : முரளி

கலைப் பிரிவு
- தமிழ் பத்மநாதன்
- புவியியல் பாபு
- இந்துநாகரிகம் ஸ்ரீஸ்
- நாடகமும் அரங்கியலும் ரமேஸ்
- ஆங்கிலம்
- அளவையியல் E.S. பவன்
- அரசியல் சுகாஷ்
- வரலாறு R.S. சந்திரன்
- விவசாயம் சசி
- I.C.T

Excavator விற்பனைக்கு

HITACHI 80, IHI 30 ஆகிய இரு EXCAVATORS விற்பனைக் குண்டு. சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் பார்வையிடலாம்.

விபரங்களுக்கு:-

0777 266801 (8097)

A/L 2014

கலை, வர்த்தகப் பிரிவுகள்

ஆரம்பம்: ஏப்ரல் – 07 சனி காலை 8.00 மணி (C-6262)

DCM Jaffna

ENGLISH/FRENCH

இலவச வகுப்பும் சான்றிதழும்

ஆங்கிலம்

யாழ்ப்பாணம்
காலை 8.00 - 9.00
காலை 10.00 - 11.00
மாலை 4.00 - 5.00

சாவகச்சேரி
காலை 11.30 - 12.30

நெல்லியடி
மாலை 2.00 - 3.00

பிரெஞ்ச்

யாழ்ப்பாணம்
காலை 9.00 - 10.00
மாலை 5.00 - 6.00

நெல்லியடி
மாலை 1.00 - 2.00

நாள் : 06.04.2012 வெள்ளிக்கிழமை அரச விடுமுறை

அனுமதி இலவசம்

182, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

நகரசபை எதிரில், சிவன்கோவில் வீதி, சாவகச்சேரி.

NSB அருகில், கொடிகாமம் வீதி, நெல்லியடி

MyWay 077 33 63 456

புதிய பொருளியல் கல்லூரி

மணிக்கூட்டு வீதி, யாழ்நகர் (பெருமாள் கோவில் அருகில்)

A/L 2014 புதிய அனுமதிகள்

கலை, வர்த்தகப் பிரிவு இன்று முதல் (C-6261)

NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

A/L 2014 புதிய அனுமதிகள் இன்று முதல்

கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள் (C-6261)

ஆரம்பம் : ஏப்ரல் – 07 சனி காலை 8.00 மணி

பொருளியல் DMI

பிரிவு (I) A/L 2014 வழமைபோல்....

பிரிவு (II) A/L 2014 சனி 7-ம் திகதி ஆரம்பம்

A/L 2013 - " தேசிய கணக்கீடு"
A/L 2012 - "Paper Class"
A/L (Day) - " வங்கியியல், பேரினப் பொருளாதாரம்"
(திங்கள் முதல் வெள்ளி வரை)

A/L 2013, 2012, Day Class, 2014, MCQ

வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.....

நேர அட்டவணை நிறுவனத்தில் பெறவும்

S.S. சிறி (C-6260)

A/L 2014 வர்த்தகப் பிரிவு

இன்று மாலை 4 மணிக்கு ஆரம்பம்

College of Accounting (8084)

கொமர்ஷல் வங்கி முன்பாக சாவகச்சேரி

Eco: K. பிரதீபன்
Acc: M.N. நீதன்
B.St: S. பிரதீபன்


இப்பத்திரிகை வலம்புரி [illegible] ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.